# நாம் எப்படி மற்றவர்களிடத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகிறோம்?

# How Are We Impacting Others?

Byron Nichols

ஒரு மிகப் பெரிய பட்டணத்தில் பரபரப்பான இடத்தில் ஒரு நபர் தினமும் செய்தித்தாள் விற்றுக்கொண்டிருந்தார். வெயிலடித்தாலும், குளிராயிருந் தாலும், காற்றடித்தாலும், மழைபெய்தாலும் அந்த நபரும், அவருடைய செல்லப் பிராணியும் ஒவ்வொரு நாளின் காலை வேளையில், அந்தந்த நாளின் பதிப்பை வேலைக்குச் செல்லும் வழியில், போக்குவரத்து நெரிசலில் சிக்கிக்கொள்ளும் மக்களுக்கு விநியோகிப்பது வழக்கமாக இருந்தது. இம்மனிதன் செய்தித்தாள் களை அம்மனிதர்களிடத்தில் மகிழ்ச்சியோடும், புன்னகையோடும் விநியோகம் செய்தான்.

அதன் பிறகு இப்படி நடந்தது..... ஒரு நாள் திடீரென அந்த செய்தித்தாள் விற்பவரையும், அவருடைய செல்லப்பிராணியையும் காணவில்லை. அவரு டைய இடத்தில் வேறொரு நபர் இருந்தார். ஆனால், அங்கே சூழ்நிலை முன்பு போல் இல்லாதிருந்தது. நிச்சயமாகவே, செய்திதாளும், அதன் விலையும் அதே மாதிரியாகத்தான் இருந்தது. இடமும் அதே இடம்தான். இருந்த போதிலும் அங்கே முன்பிருந்த சூழல் காணப்படாததற்குக் காரணம், முன்பிருந்தவர் தனக்கே உரிய புன்னகையை வீசியதுபோல் புதியவரால் புன்னகை பூக்க முடிய வில்லை. மேலும், முன்பிருந்தவர் வெளிப்படுத்திய பண்புகளைப் புதியவரால் வெளிப்படுத்த முடியவில்லை. அவ்விடத்திலிருந்த சிரிப்பு பறிபோயிருந்தது. அந்த செல்லப்பிராணி அது எங்கே போனது? செல்லப்பிராணியும் அதன் எஜமானும் சிறந்த கூட்டணியாக இருந்தார்கள். அந்தப் புதிய விற்பனையாளர் எவ்விதத்திலும் அவர்களுக்கு இணையானவரல்ல. ஓ! இது தான் வாழ்க்கையா? ஒவ்வொரு நாளின் ஆரம்பமும் பிரகாசிக்க உதவிசெய்பவர்கள் இல்லாவிட் டாலும் வாழ்க்கை தொடர வேண்டும்.

சில நாட்களுக்குப் பிறகு வேலைக்கு வழக்கமான பாதையில் பயணிக்கும் இரு பயணிகள் சந்தித்தார்கள். ஆனால், இந்த முறை அவர்களுக்கு, சில நாட்க

ளுக்கு முன்பிருந்ததைவிட சூழ்நிலை நன்றாக, வித்தியாசமாக இருந்தது. அப்படி என்ன வித்தியாசம் என்றால், அவர்கள் திரும்பிவந்து விட்டார்கள். ஆம், அந்த பழைய வியாபாரியும் அவருடைய நாலுகால் செல்லப் பிராணியும் திரும்பவும் அங்கே வந்துவிட்டார்கள். வாகன ஓட்டிகள் தொடர்ச்சியாக அவர்களிடம் வந்து, " நீங்கள் எங்கே போயிருந்தீர்கள்? உங்கள் இருவரையும் பார்க்காமலிருந்தது எங்களுக்கு வருத்தமாயிருந்தது. எங்கள் எல்லோருடைய காலைப்பொழுதையும் நீங்கள் எவ்வளவு பிரகாசமாக்கினீர்கள் என்று உங்களுக்குத் தெரியாது என்று சொன்னார்கள். " அதற்கு அந்த மனிதன், தாங்கள் சிலகாலம் வேறொரு பட்டணத்திற்குச் சென்றதாகவும் மறுபடியும் முன்பிருந்த இவ்விடத்திற்குத் திரும்பி வர தீர்மானித்ததாகவும் சொன்னார்கள். இன்னும் பல பழைய நண்பர்கள் தங்கள் வாகனத்தை நிறுத்திவிட்டு தன்னைப் பார்க்க வந்தபோது அவருடைய முகத்தில் மகிழ்ச்சி மலர்ந்தது.

இப்பொழுது இந்த மனிதன் தான் தினமும் காலையில் அந்த சாலையில் சந்தித்த மக்களின் மீது தாக்கத்தை ஏற்படுத்தியதை அறியாதிருந்தான். இந்த மனிதனுக்கும், தேவனுக்கும் இருந்த உறவைப் பற்றி எனக்குத் தெரியாது. அல்லது அது பற்றி எந்த அறிவும் எனக்கில்லை. ஆனால், இவன் மற்றவர்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்துகிற காரியத்தில் கிறிஸ்தவர்களை விட சிறந்து விளங்குகின்றான். இவன் பழைய, புதிய ஏற்பாட்டில் காணப்படும் மிக முக்கியமான விதியை நடைமுறைப்படுத்தினான். சாலொமோன் ஞானி, " செய்யும்படி உனக்கு நேரிடுகிறது எதுவோ, அதை உன் பெலத்தோடே செய் " (பிர. 9 : 10 ) என்று புத்திமதி சொல்லியுள்ளார். அப்போஸ்தலனாகிய பவுலும் இதே செய்தியைப் பதிவு செய்கிறார். " நீங்கள் மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு ஊழியஞ் செய்யாமல் தேவனுக்குப் பயப்படுகிறவர்களாகக் கபடமில்லாத இருதயத்தோடே ஊழியஞ் செய்யுங்கள் " (கொலோ 3 : 22 ).

இந்த மனிதன் வாழ்க்கையில் தனக்கு ஏற்பட்ட சூழ்நிலையை ஏற்றுக் கொண்டு வாழ்க்கையின் ஒவ்வொரு நிமிடத்தையும் அனுபவிக்கத் தொடங்கினான். மேலும், இந்த மனிதன் சாலையில் செய்தித்தாள் விற்பதை கேவலமாக நினைக்கும் மக்கள் மத்தியில் தன் தொழிலை உயர்வாக எண்ணி அதில் மகிழ்ச்சியைக் கண்டடைந்திருக்கிறான். இந்த மனிதனைப் பற்றி நினைக்கும் போது இவன் சமுதாயத்தின் அடித்தட்டில் இருந்துகொண்டு, சமுதாயத்தில் உயர்மட்ட மக்களின் மீது எப்படி இப்படிப்பட்ட தாக்கத்தை ஏற்படுத்த முடிந்தது என்று ஆச்சரியமாக இருக்கிறது. அவன் தன் செல்லப்பிராணியிடத்தில் அன்பும், அக்கறையும் உடையவனாக இருந்திருக்கிறான். ஒருவேளை அவன் தன் செல்லப்பிராணியை கொடுமைப்படுத்தியிருந்தாலோ அல்லது தவறாக நடத்தியிருந்தாலோ இவரால் மக்களிடம் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்க முடியாது.

இந்த மனிதன் சில நாட்களுக்குப் பிறகு தான் முன்பிருந்த அதே இடத்திற்குத் திரும்பி வந்தபோது, பழைய வாடிக்கையாளர்கள் இவரை மீண்டும் பார்த்ததினால் மகிழ்ச்சியடைந்ததோடு மாத்திரமல்ல. அம் மகிழ்ச்சியை அவரிடம் வெளிப்படுத்தினார்கள். சாலொமொன் ஞானி, நீதிமொழிகள் 22 : 29ல் இவ்விதம் சொல்லுகிறார். " **தன் வேலையில் ஜாக்கிரதையாயிருக்கிறவனைக் கண்டால், அவன் நீசருக்கு முன்பாக நில்லாமல், ராஜாக்களுக்கு முன்பாக நிற்பான்** " என்று.

நீங்கள் இப்படி நினைக்கிறீர்களா? வேலை செய்யும் ஸ்தலத்தில் முதலாளி யிடமிருந்து தொழிலாளிகளுக்குப் பாராட்டுகள் வந்தால் அது உற்பத்தியை மேம்படச் செய்யும் என்று. ஆம், அதேபோல தொழிற்சாலையைக் குறித்தும், முதலாளிகளைக் குறித்தும் தொழிலாளிகள் நேர்மறையான கருத்துக்களைப் பதிவுசெய்தால் அது முதலாளிகளுக்கு தொழிலாளிகளைக் குறித்து நல்ல அபிப்பிராயத்தை ஏற்படுத்தும்! அப்படித்தானே?

எனக்கு அதிக நண்பர்கள் இருக்கிறார்களே என்று இதுவரை யாரும் புலம் பியது இல்லை. அல்லது அப்படிப் புலம்பும் யாரையும் நாம் பார்த்ததும் இல்லை. நாம் நட்பை வெளிப்படுத்தும் போது நமக்கு நிறைய நண்பர்கள் இருப்பார்கள் ( நீதி. 18 : 24 ). அதற்கு மிகச் சிறந்த உதாரணம் இந்த செய்தித்தாள் விற்பனையாளர் தான்.

திருமணத்தில் இணையும் தம்பதிகள் ஒருவருக்கொருவர் தங்கள் அன்பை வெளிப்படுத்துவதின் மூலம் அவர்களை மகிழ்ச்சியான குடும்பங்களாகக் காண முடிகிறது. நாம் எந்தக் குடும்பத்தை ஆச்சரியமாகப் பார்த்து அதன்படி நடக்க வேண்டுமென்று விரும்புகிறோமோ அந்தக் குடும்பத்தில் ஒருவருக்கொருவர் அன்பையும், நன்றியையும் வெளிப்படுத்துவதை நம்மால் காண முடியும்.

ஆவிக்குரிய பிரகாரமாக ஆரோக்கியமான சபையின் அடையாளங்களில் ஒன்று, எல்லோருடைய நன்மைக்காக விசுவாசிகள் அளிக்கும் பங்களிப்பின் முக்கியத்துவத்தை அறிவிக்கும் ஒரு குழுவை அமைத்து அதன் மூலம் கிறிஸ்துவின் விசுவாசிகள் ஒவ்வொருவரையும் உற்சாகப்படுத்தவேண்டும். மேலும் அப்படிச் செய்வதின் மூலம் ஒருவருக்கொருவர் உற்சாகமடைய முடியும்.

✝

- நம் வாழ்க்கை குறுகிய கால அளவை உடையது.
- ஒவ்வொருவராலும் பிறர்மீது தாக்கத்தை ஏற்படுத்த முடியும்.
- கிறிஸ்தவ வாழ்க்கை மூலம் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்த வாய்ப்புண்டு.

நிர்வாக ஆசிரியர் உரை

# உங்களுக்கோ மனதில்லாமற் போயிற்று

# "But you were not willing"

E.Z.S. Rajanayagam

நம்முடைய இயேசுவானவர், உங்களுக்கோ மனதில் லாமற் போயிற்று என்று எப்பொழுது சொன்னார், யாரைப் பார்த்துச் சொன்னார், எங்கிருந்து சொன்னார், ஏன் சொன்னார் என்பது பற்றியெல்லாம் கொஞ்சம் தெரிந்து கொண்டால், இத்தலைப்பைச் சிறப்பாக அறிந்து கொள்வதற்கும், இதிலிருந்து தேவன் நமக்கு வெளிப்படுத்த விரும்பும் பாடங்களைப் புரிந்து கொள்வதற்கும் மிகுந்த ஒத்தாசையாக இருக்கும். ஆகவே, நமது வழக்கத்தின் படியாக உள்ளே செல்லுவோம்.

சுமார் மூன்றரை ஆண்டுகள் பரலோக தேவனின் திருப்பணியை ஓய்வு ஒழிச்சலின்றிச் செய்து வந்த இயேசுவின் பூமிக்குரிய வாழ்வின் நாட்கள் முடியும் நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. கொல்கொதா மலையின் உச்சிக்கு பாரச் சிலுவையோடு ஊர்ந்து செல்ல சில நாட்கள் தான் எஞ்சி இருந்தது. அப்பொழுது தான் எருசலேமின் குடிகளைப் பார்த்து, குறிப்பாக தேவாலயத்தைப் பார்த்து இப்படியாகக் கதறினார். " எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலை செய்து உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே! கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக் கொள்ளும் வண்ணமாக நான் எத்தனை தரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக் கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமற் போயிற்று " (மத் 23 : 37) என்று.

இந்த எருசலேமுக்காக, எருசலேமின் ஜனங்களுக்காகத் தேவன் ஆதியிலிருந்து செய்த காரியங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. ஆதியாகம புத்தகத்திலேயே இடம் பெற்று, இன்றளவும் உலகின் முதன்மைப் பட்டணங்களுள் ஒன்றாகத் தொடர்ந்து திகழ்ந்து வருவது எருசலேம் மாத்திரமே. வேறு எதற்கும் இச்சிறப்பு கிடையாது. இப்பட்டணத்தை வேதாகமம் பரிசுத்த ஸ்தலம் (சங். 46 : 4) என்றும், உண்மையுள்ள நகரம் என்றும் (ஏசாயா 1 : 21) பரிசுத்த நகரம் (மத். 4 : 5)

என்றும் அழைக்கிறது.

இப்படி, தேவனுடைய இருதயத்தில் இடம் பிடித்த பட்டணமாக இருந்து, பரிசுத்தம், உண்மை என்ற உன்னத வார்த்தைகளுக்கு உரிமை கொண்டாடும் ஒன்றாக இருந்தாலும், இதன் செயல்பாடு தேவனுக்குப் பிரியமானதாக தொடர்ந்து இருக்கவில்லை.

தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளுக்குச் செவி கொடுத்துத் திருந்தாத எருசலே முக்காகவும், பூமியின் ஏனைய மக்களுக்காகவும் தான், தன் கடைசி கட்ட முயற்சியாகத் தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை அனுப்பி அவரு டைய திருவார்த்தைகளுக்காகிலும் செவிகொடுப்பார்களென்று எதிர்பார்த்தார். அவருக்கும் அவர்கள் செவி கொடுக்கவில்லை.

இப்படியெல்லாம் பிரயாசை எடுத்தும் அவர்கள் திருந்தவில்லை. திருந் துவதற்கு மனம் இல்லாமற் போயிற்று. யோவான் நற்செய்தியாளரும் இதைத் தான் கூறுகிறார். அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார். அவருக்குச் சொந்த மானவர்களோ அவரை ஏற்றுக் கொள்ளவில்லை என்று (யோவா 1 : 11). அப்படி அவர்கள் ஏற்றுக்கொள்ளாமலிருப்பதால் அவர்கள் மீது வரப்போகும் விளை வை எண்ணிப் பார்த்தார். வசனம் 38-ல் இதோ உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும் என்று சொல்லப்பட்டுள்ளது. எருசலேம் பாழாகிப் போகும் என்பதையும், அதின் குடிகள் அழிக்கப்படுவார்கள் என்பதையும் நினைக்கும் போது அவருக்கு நெஞ்சுபொறுக்கவில்லை. ஏனெனில், உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்க அவர் வராமல் ( யோவா 3 : 17 ), இழந்துபோன எருசலேமின் குடிகள் போன்றோரை இரட்சிக்கும்படியாகவே வந்தார். (லூக். 19 : 10) ஆகவேதான், எருசலேமை நினைத்து, எப்படி அந்தரத்தில் தொங்க நேர்ந்த தன் துன்மார்க்க மகன் அப்சலோமுக்காகத் தாவீது புலம்பினானோ, அதுபோலவும் ( II சாமு. 18 : 10, 33 ) சொல்லப்போனால், அதை விடப் பல மடங்கு மேலாகவும் புலம்பினார்.

எருசலேமின் குடிகள், இயேசுவை ஏற்றுக் கொள்ளாததற்கு நிறைய காரணங்களை நாம் அடுக்க முடியும். என்றாலும், அவைகளில் பிரதானமாக மூன்றை நாம் பார்த்து சில பாடங்களைக் கற்றுக் கொள்வோம்.

**I தேவனுடைய வார்த்தைகளை அற்பமாக எண்ணினார்கள்**

எருசலேமின் குடிகள் இயேசுவுக்குச் செவி கொடுக்க மனமில்லாமற் போனதற்கான காரணங்களில் முதலாவதாக, அவர்கள் வேத வசனங்களை அற்பமாய் எண்ணியதைக் கூறலாம்.

மோசேயைக் கொண்டு பிரமாணங்களை இஸ்ரவேலர்களுக்குக் கொடுத்த

தேவன், அப்பிரமாணங்களுக்கு அவர்கள் என்ன மரியாதை கொடுக்க வேண்டுமென்பதையும் வெளிப்படுத்திவிட்டார் (உபா. 5 : 1) . மோசேயின் காலத்துக்குப் பிறகும், தேவன் அவருடைய வார்த்தைகளின்படியாகச் செய்வது மிகவும் அவசியம் என்பதை மீண்டும் வெளிப்படுத்தியுள்ளார். " இதில் எழுதியிருக்கிறவைகளின்படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிரு என்று " ( யோசு 1 : 8 ). ஆனால், இவர்களுக்கோ வேத வாக்கியங்கள் என்ன சொல்லுகிறதென்பதைக் குறித்த பாரம் ஒரு போதும் பெரிதாக இருந்ததில்லை.

சரி, இப்படிப்பட்ட, வேதவசனங்களின் சாட்சியும் போதாதென்று, யோவான் ஸ்நானகனும், இவரே தேவனுடைய குமாரன் என்று சாட்சி கொடுத்தார் (யோவான் 1 : 34). இந்த யோவானின் சாட்சியையும் ஜனங்கள் ஏற்றுக் கொள்ளாத போது, இயேசு சொன்னதைத் தான் கொஞ்சம் பாருங்களேன்! " யோவானுடைய சாட்சியைப் பார்க்கிலும் மேன்மையான சாட்சி எனக்கு உண்டு; அதென்னவெனில், நான் நிறைவேற்றும்படிக்குப் பிதாவானவர் எனக்குக் கற்பித்ததும் நான் செய்து வருகிறதுமான கிரியைகளே பிதா என்னை அனுப்பி னார் என்று என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறது " என்றார் (யோவா 5 : 36) இதற்கு மேலும், இயேசு தேவனுடைய குமாரனென்று ஏற்றுக்கொள்வதற்கு வேறு என்ன தான் சாட்சி வேண்டும், சொல்லுங்கள்!

அன்பானவர்களே! வேத வாக்கியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் மனித கோட்பாடுகளுக்கும், பாரம்பரியங்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்தபடியால் தான், குட்டிச் சுவற்றைக் கட்டிப்பிடித்து அழ வேண்டிய அவசியம் யூதர்களுக்கு வந்திருக்கிறது. ஒருவேளை, நாமும் அவர்களைப் போல புதிய ஏற்பாட்டு உபதேசத்தை அற்பமாக எண்ணி, இயேசு கட்டின ஒன்றான மெய்ச் சபையைப் பற்றி ( மத். 16 : 18 ) அக்கறையில்லாமல் வாழ்வோமானால், நரகத்திற்குப் போய் அங்கே நித்திய காலமாய் அழ வேண்டிய நிலை வந்து சேரும். ஆகவே, இயேசுவின் புதிய ஏற்பாட்டு உபதேசத்துக்கு மதிப்பளித்து நமது ஆன்மீக வாழ்வை நடத்துவோம்.

### II தங்களுடைய காரியங்களில் நாட்டமுடையவர்களாக இருந்தனர்

எருசலேமின் குடிகள், இயேசுவின் வார்த்தைகளுக்குச் செவி கொடுக்க மனமில்லாமற் போனதற்கான இரண்டாவது காரணமாக, அவர்கள் தங்களுடைய காரியங்களில் அதிக நாட்டமுடையவர்களாயிருந்ததைக் கூறலாம்.

பூமியில் வாழும் ஒருவன் பூமிக்கடுத்த சில காரியங்களில் நாட்டமுடையவனாக இருப்பதில் எந்தத் தவறும் இல்லை. ஏனெனில், இப்பூமியில், தேவன் அனுமதிக்கிற காலமெல்லாம் அவன் வாழ்ந்தாக வேண்டும். அதே நேரத்தில்,

தேவனுக்கடுத்த காரியத்திற்கும், சொந்தக் காரியத்திற்குமுள்ள வேறுபாடு தெரிந்தவனாகவும், எதற்கு என்ன முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்பதில் தெளிவுள்ளவனாகவும் இருக்க வேண்டும். இந்த அறிவு எல்லாருக்கும் இருக்க வேண்டுமென்பது தேவனுடைய விருப்பம், இயேசுவின் எதிர்பார்ப்பு. இதற்காகத்தான், இயேசுவானவர், " ஒரு மனுஷன் பெரிய விருந்தை ஆயத்தம் பண்ணி அநேகரை அழைப்பித்தான் " என்ற உவமையைச் சொன்னார் ( லூக். 14ஆம் அதி ) அவ்வுவமையில் மூன்று பேருமே சாக்குப்போக்குச் சொல்லத் தொடங்கி, தங்களுடைய காரியங்கள் தான் பெரிது என்பதை வெளிபபடுத்தினர்.

இங்கே, நாம் கவனிக்க வேண்டிய ஒரு காரியம், இவர்கள் இப்படிப்பட்ட தேவ விரோதச் செயலைத் தெரியாமல் செய்யவில்லை என்பது. எப்படியெனில், இயேசு லாசருவை உயிரோடே எழுப்பினதற்குப் பிறகு கூடின ஆலோசனைச் சங்கத்தார், நாம் இவனை இப்படி விட்டுவிட்டால் எல்லாரும் இவனை விசுவாசிப் பார்கள்; அப்பொழுது ரோமர் வந்து, " **நம்முடைய ஸ்தானத்தையும் ஜனத்தையும் அழித்துப் போடுவார்களே** " என்றார்கள் ( யோவா. 11 : 47, 48 ) ஆக, இந்தத் திருடர்களின் சிந்தையெல்லாம் தொழில், வருமானம், ஸ்தானம்! பக்தி என்பது ஒரு வேஷம். இயேசுவின் வார்த்தைகளை அவர்கள் ஏற்றுக்கொள்ள மனமில் லாமற் போனதற்கான காரணம் என்னவென்று இப்பொழுது விளங்குகிறதா?

அன்பானவர்களே, இயேசுவின் காலத்து எருசலேமின் குடிகளோடும், யூத ஜனங்களின் நிலையோடும் இன்றைய கிறிஸ்தவத்தின் சூழ்நிலையை ஒப்பிட்டால் அப்படியே அச்சில் ஊற்றி எடுத்தாற்போல இருக்கிறது தானே! ஆச் சரியமாக இருக்கிறதா? அன்றைக்கு எப்படித் தேவனால் அனுப்பப்பட்ட இயேசு வையும் அவருடைய உபதேசத்தையும் ஏற்றுக்கொண்டால் தொழிலும், வருமா னமும், அந்தஸ்தும் போச்சு என்று எண்ணினார்களோ அதே போல இன்றைக்கு இயேசுவால் கட்டப்பட்ட ஒன்றான மெய் சபையையும் புதிய ஏற்பாட்டு உபதேசத் தையும் ஏற்றுக் கொண்டால் தொழிலும், வருமானமும் அந்தஸ்தும் போய்விடு மென்று அநேக பிரசங்கிகளும், மார்க்க முன்னோடிகளும், இனிமேல் கொள்கையையும், நம்பிக்கையையும் மாற்றினால் அது மரியாதைக் குறைவை ஏற்படுத்துமென்று சராசரி கிறிஸ்தவர்களும் எண்ணுகிறார்கள். அப்படித்தானே! மொத்தத்தில் தேவகாரியங்களைக் குறித்த கிறிஸ்துவின் சிந்தை பெரும்பாலானவர்களுக்கு இல்லை என்பது மாத்திரம் திட்டமாகத் தெரிகிறது.

### III. மற்றவர்களுடைய நினைப்புக்கு முக்கியத்துவம் கொடுத்தனர்

எருசலேமின் குடிகள் இயேசுவின் வார்த்தைகளுக்குச் செவி கொடுக்க மனமில்லாமற் போனதற்கான இன்னுமொரு காரணமாக, அவர்கள் மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்பதற்கு முக்கியத்துவம் கொடுத்து

செயல்பட்டதைக் கூறலாம்.

இவர்கள் இப்படிச் செயல்பட்டார்கள் என்று நான் கூறவில்லை, வேத வசனங்கள் கூறுகிறது. அதுவும், ஒரு முறை அல்ல, பலமுறை. ஆம், யோவான் நற்செய்தியாளனுடைய நூலில், தேவனாலே மாத்திரம் வருகிற மகிமையைத் தேடாமல், ஒருவராலொருவர் மகிமையை ஏற்றுக் கொள்ளுகிற நீங்கள் எப்படி விசுவாசிப்பீர்கள்? (யோவா 5 : 44) என்று இயேசு கேட்டுள்ளார். இன்னும், அதே நூலின் 12ஆம் அதிகாரம் வசனங்கள் 42, 43 சொல்லுவதையும் கவனி யுங்கள். " ஆகிலும் அதிகாரிகளிலும் அநேகர் அவரிடத்தில் விசுவாசம் வைத் தார்கள். அப்படியிருந்தும் ஜெப ஆலயத்துக்குப் புறம்பாக்காதபடி பரிசேயர் நிமித்தம் அதை அறிக்கை பண்ணாதிருந்தார்கள். அவர்கள் தேவனால் வரு கிற மகிமையிலும் மனுஷரால் வருகிற மகிமையை அதிகமாய் விரும்பினார்கள் ". மனிதர்களுடைய எண்ணங்களுக்கு அவர்கள் அதிக முக்கியத்துவம் கொடுத்தார்களென்பதற்கு இதை விட வேறு என்ன சான்று வேண்டும்?

அருமையானவர்களே, இன்றைய உலகமும், கிறிஸ்தவ சமுதாயமும் ஊருக்கும், உறவுக்கும், நட்புக்கும், மாம்சத்திற்கும், இரத்தத்திற்கும் மதிப்பளிக் காமல், தேவனுடைய வார்த்தைகளுக்கு மாத்திரம் செவி கொடுத்துக் கீழ்ப்படிவ தில் எந்தளவு சிறந்து விளங்குகிறது? இது தான் சத்தியம் என்றும், இதுதான் இந்த வசனத்தின் பொருள் என்றும், இவைகள் தான் இரட்சிப்பின் திட்டத்துக்கான படிகள் என்றும், இதுதான் இயேசு வாக்களித்துக் கட்டின சபையென்றும் சொன் னால், எத்தனை பேர் அட அப்படியா, இத்தனை நாள் எனக்கு விளங்காமற் போய்விட்டதே என்று சொல்லி உடனே ஏற்றுக்கொள்ளுகிறார்கள்? மணிக் கணக்காகக் கேட்டு விட்டு, வார கணக்காகச் சேர்ந்து படித்து விட்டு, முடிவெடுக்க மாதக் கணக்கில் நாட்களையும் எடுத்துக் கொண்டு, கடைசியில் என்ன சொல்லுகிறார்கள்? நீங்கள் சொல்லுவதெல்லாம் சரிதான், வசனத்துக்குச் சரியான விளக்கம் கொடுத்தீர்கள். ஆனால், எங்க குடும்பம்... எங்க வேலை... எங்க சபை... எங்க ஊர்... எங்க சமுதாயம்... என்று கூறி அப்படியே இழுக்கிறார்கள் தானே! எல்லாவற்றையும் தெரிந்து கொண்டு இப்படியெல்லாம் இழுப்பது எப்படி நியாயமாகும் என்று எண்ணிப் பாருங்கள்? இந்த இடத்தில் அப்போஸ்தலன் பேதுருவும், யோவானும் ஆலோசனைச் சங்கத்தாருக்குக் கொடுத்த பதிலை நினைவுபடுத்த விரும்புகிறேன் " பேதுருவும் யோவானும் அவர்களுக்குப் பிரதியுத்திரமாக, தேவனுக்குச் செவிகொடுக்கிறதைப் பார்க்கிலும் உங்களுக்குச் செவி கொடுக்கிறது தேவனுக்கு முன்பாக நியாயமாயிருக்குமோ என்று நீங்களே நிதானித்துப் பாருங்கள் " (அப். 4 : 19) என்று.

✝

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| நாம் எப்படி மற்றவர்களித்தில் ... | Byron Nichols | ... 1 |
| உங்களுக்கோ மனதில்லாமற்... | E.Z.S. Rajanayagam | ... 4 |
| தேவனின் பல பக்கங்கள் | Jerry Bates | ... 11 |
| போய் யூதாஸின் கால்களைக் ... | Louis Rushmore | ... 14 |
| ஒரு போதும் சரணடைய ... | J.C. Choate | ... 18 |
| விசுவாசம் | P.C. Philemon Rajah | ... 21 |
| நீதியின் கனிகள் | B. Arjunan | ... 26 |
| நீங்களே தீர்ப்பளியுங்கள் | E.Z. Selvanayagam | ... 31 |
| கிறிஸ்துவின் சிந்தை... | Benny Martin | ... 36 |

**தேவன்** — **God**

| | | |
|---|---|---|
| தேவன் சட்டத்தின்படி நடக்க... | Betty Burton Choate | ... 40 |
| நம் ராஜா வருகிறார் | Bobby Key | ... 43 |
| தேவனும், அன்பும் | Greg Well | ... 45 |

**சாட்சியங்கள்** — **Witness**

| | | |
|---|---|---|
| தேவனை விசுவாசிப்பது ... | Kyle Butt | ... 47 |

**தேவனுடைய வார்த்தை** — **The word of God**

| | | |
|---|---|---|
| பரிசுத்த வசனங்களின் ... | Wayxne Jackson | ... 50 |

**இரட்சிப்பு** — **Salvation**

| | | |
|---|---|---|
| நித்தியமான காரியங்கள் மீது... | Maxle B. Boren | ... 54 |
| நீங்கள் மறுபடியும் பிறந்து... | George Funk | ... 56 |

**சபை** — **The Church**

| | | |
|---|---|---|
| ஒருவர் சபையில் இருக்கத்... | E. Claude Gardner | ... 58 |
| ஓ தேவனுடைய மனுஷனே... | Stan Mitchel | ... 61 |
| ஓர் உறுப்பினர் | Justin Hopkins | ... 64 |

| வாழ்வதற்கான உபதேசம் | Doctrine to Live by | |
|---|---|---|
| உயிர்த்தெழுதல் நம் நம்பிக்கை | Hans J. Dederscheck | ... 67 |
| இயேசு கிறிஸ்து வரும்போது | Owen Cosgrove | ... 70 |
| **செயலில் கிறிஸ்தவம்** | **Christianity in Action** | |
| ராஜ்யத்துக்கு தூரமான... | Neal Pollard | ... 72 |
| எல்லோருக்கும் சுவிசேஷம்... | Earl Edwards | ... 74 |
| வசன ஆராய்ச்சி | Jerry Bates | ... 77 |
| **ஆராதனை** | **Worship** | |
| கர்த்தருடைய பந்தியில்... | Glenn Colley | ... 79 |
| நீங்கள் எப்படி ஆராதிக்கிறீர்கள்? | Bonnie Rushmore | ... 82 |
| எங்கள் துதியை ஏற்றுக்... | Dan R. Owen | ... 85 |
| அவருடைய மகத்துவத்தை ... | Darla Rosinski | ... 88 |
| **அனுதின கிறிஸ்தவ வாழ்க்கை** | **Daily Christian living** | |
| நீ உனக்குக் கெடுதி ஒன்றுஞ்... | Barry C. Payner | ... 92 |
| உபத்திரவத்தின் வழியாய் ... | Wayne Barrier | ... 96 |
| நீங்கள் மற்றவர்களிடமிருந்து... | W. T. Allison | ... 98 |
| அமர்ந்திருங்கள் | Jessie Graville | .. 100 |
| பேதுருவின் குறைபாடு | O. P. Bavid | .. 103 |
| லோத்தின் வீழ்ச்சி | Tom Kelton | .. 106 |
| வசன வியாக்கியானம் | Justin Hopkins | .. 108 |
| உங்கள் ஆன்மாவின்........ | | .. 109 |

# தேவனின் பல பக்கங்கள்

## *The Many Facets of God*

Jerry Bates

வேதாகமம், தேவனை நாம் சிறப்பாகப் புரிந்துகொள்ள உதவும்படியாக உருவகங்களைப் பயன்படுத்துகிறது. உருவகம் என்பது ஒருபொருள் மற்றொன்றாகக் குறிக்கப்படும் ஒரு சொல் அல்லது ஒரு வாக்கியமாகும். இது தேவனைப்பற்றி நாம் புரிந்துகொள்ள ஆரம்பிப்பதற்கு நல்ல வழியும், ஒரே வழியுமாயிருக்கிறது. ஏசாயா தீர்க்கத்தரிசி. இப்படியிருக்க தேவனை யாருக்கு ஒப்பிடுவீர்கள்? எந்தச் சாயலை அவருக்கு ஒப்பிடுவீர்கள்? (ஏசாயா 40 : 18) என்று கேள்வி கேட்கிறார். நிச்சயமாகவே இதற்கான பதில், தேவனோடு நாம் யாரையும் ஒப்பிடவே முடியாது என்பதுதான் உண்மை. இருந்தபோதிலும் இவ்வகையான உருவக நடைமுறைப் பேச்சுகள் தேவனைப் புரிந்துகொள்ள நமக்கு உதவுகிறது.

ஒரு சில உருவகங்கள் தேவனைப் பற்றி முழுமையாக விவரிக்கிறது என்ற எல்லையை வகுப்பது நமக்கு பிரச்சனையை ஏற்படுத்திவிடுகிறது. பழைய ஏற்பாட்டில் தேவனை விவரிக்க பல உருவகங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. சில சமயங்களில் அவைகள் ஒன்றோடொன்று முரண்படுவதாகத் தெரிகிறது. உதாரணமாக, ஏசாயா 40 : 10, 11 ம் வசனங்களைக் கவனியுங்கள். இதோ கர்த்தராகிய ஆண்டவர் பராக்கிரமசாலியாக வருவார்; அவர் தமது புயத்தினால் அரசாளுவார்; இதோ அவர் அளிக்கும் பலன் அவரோடேகூட வருகிறது; அவர் கொடுக்கும் பிரதிபலன் அவருடைய முகத்துக்கு முன்பாகச் செல்லுகிறது. மேய்ப்பனைப் போல தமது மந்தையை மேய்ப்பார். ஆட்டுக்குட்டிகளைத் தமது புயத்தினால் சேர்த்து தமது மடியிலே சுமந்து, கறவலாடுகளை மெதுவாய் நடத்துவார்.

பத்தாம் வசனத்தில் தேவன் பராக்கிரமசாலியாக விவரிக்கப்பட்டிருக்கிறார். மேலும், அவர் தமது புயத்தினால் அரசாளுவார். அவர் அளிக்கும் பலன்

அவரோடேகூட வருகிறது என்று நாம் பார்க்கிறோம். ஆனால், அடுத்த வசனத்தில் தேவன் தமது மந்தையாகிய இஸ்ரவேலை மேய்க்கும் மேய்ப்பனாக விவரிக்கப்பட்டிருக்கிறார். அவர் மந்தையைப் பாதுகாப்பவராக மாத்திரம் விவரிக்கப்படாமல், மந்தையைத் தமது புயத்தினால் சேர்த்து, தமது மடியிலே சுமந்து அவைகளை மெதுவாய் நடத்துவார் என்றும் விவரிக்கப்பட்டிருக்கிறார். இவ்வசனப்பகுதிகளில், தேவன் பராக்கிரமசாலியாகவும், அதேநேரத்தில் மென்மையானவராகவும் விவரிக்கப்பட்டிருக்கிறார். ஒரு பராக்கிரமசாலியை மென்மையானவராகப் பார்ப்பது சற்று கடினமான ஒன்றுதான். இருந்தபோதிலும் தேவனைப் பற்றி இவ்விதமாக விவரித்துச் சொல்லப்பட்டிருக்கிறது. பராக்கிரமசாலியோ அல்லது மேய்ப்பனோ, இத்தகைய உருவகங்களால் தேவனை நாம் புரிந்து கொள்ள முடியும்.

நாம் எத்தனை முறை தேவனுடைய ஒரு பக்கத்தை மட்டும் பார்க்கிறவர்களாக இருக்கிறோம்? நம்மில் பெரும்பாலானோர் தேவனை அன்பின் தேவனாக மட்டும் பார்க்கிறோம். ஆம், தேவன் அன்பாகவே இருக்கிறார் ( I யோவான் 4 : 8 ). அதே நேரத்தில் தேவன் தீமையைக் கண்டிக்கும் வல்லமையுள்ள நியாயாதிபதியாகவும் இருக்கிறார்.

“ ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்குமே ” (எபி. 10 : 31). தேவன் நம்மை அதிகமாக நேசிக்கிறபடியால் அவர் யாரையும் நரகத்திற்கு அனுப்பமாட்டார் என்று சிலர் சொல்வதை எத்தனை முறை கேட்டிருக்கிறீர்கள் ? தேவன் நம்மை நரகத்திற்கு அனுப்பமாட்டார் என்று எண்ணுவது அவருடைய ஒரு பக்கத்தைப் பார்ப்பதாகும். ஆம், தேவன் நம்மில் அளவுக்கதிகமாக அன்புகூருகிறார் என்பது உண்மைதான். அப்போஸ்தலனாகிய பவுல், அதை அறிவுக் கெட்டாத அந்த அன்பு ” என்று சொல்லுகிறார். நாம் இவ்வுலகில் மனிதனை விட தேவனுக்கே அதிகமாகப் பயப்படவேண்டும் என்று ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து எச்சரித்தார்.

“ நீங்கள் இன்னாருக்குப் பயப்படவேண்டுமென்று உங்களுக்குக் காண்பிக்கிறேன்; கொலை செய்த பின்பு நரகத்திலே தள்ள வல்லமையுள்ளவருக்குப் பயப்படுங்கள்; ஆம் அவருக்கே பயப்படுங்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் ” (லூக்கா 12 : 5). தேவன் எல்லா மனிதரையும் இரட்சிக்க விரும்புகிறார். இருந்த போதிலும் அவர் நீதியின் தேவனாக இருக்கிறபடியால் அவருடைய அதிகாரத்திற்குக் கீழ்ப்படியாதவர்களை தண்டிக்க அவர் கடமைப்பட்டிருக்கிறார். தேவனைப்பற்றிய இவ்வகையான உருவகங்களெல்லாம் தேவனைப் பற்றி முழுமையாகப் புரிந்துகொள்ள உதவுகின்றன.

இது இரட்சிப்பு என்னும் மாபெரும் ஈவை நமக்கு முக்கியப்படுத்திக் காட்டுகிறது. உண்மையாகவே, தேவன் நம்மை நேசிக்கிறார், நம்மை இரட்சிக்க விரும்புகிறார். தேவனால் எப்படி தம்முடைய நீதியை நிலை நிறுத்தி பாவத்தைத் தண்டித்து அதேநேரத்தில் நம்மை இரட்சிக்கவும் முடியும்? இதற்கான பதில் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துதான். இயேசுவானவர் இப்பூமிக்கு வந்து, பாவமற்ற வாழ்க்கை வாழ்ந்தார். நம்முடைய பாவத்திற்கான விலையைச் செலுத்தும்படியாக சிலுவையில் தம் ஜீவனை விட்டார். அந்தத் தியாகத்தின் தேவன் பாவமான மனிதனை இரட்சித்து தம்முடைய அன்பையும் வெளிப்படுத்துகிறார். அதேநேரத்தில் தம்முடைய நீதியையும் வெளிப்படுத்துகிறார்.



தேவனுக்கு இருபக்கங்கள் இருப்பதை புதிய ஏற்பாடு உறுதி செய்கிறது. ஆகையால், தேவனுடைய தயவையும் கண்டிப்பையும் பார்; விழுந்தவர்களிடத்திலே கண்டிப்பையும், உன்னிடத்திலே தயவையும் காண்பித்தார். அந்தத் தயவிலே நிலைத்திருப்பாயானால் உனக்குத் தயவு கிடைக்கும்; நிலைத்திராவிட்டால் நீயும் வெட்டுண்டு போவாய் " ( ரோமர் 11 : 28 ). தேவன் நம்மிடம் எப்படி நடந்துகொள்வார் என்பது நம்மைச் சார்ந்து தான் இருக்கிறது. நாம் கிறிஸ்துவை நிராகரித்தால் நியாயத்தீர்ப்பு நாளிலே நம்மிடம் கண்டிப்பாக நடந்து கொள்வார் என்பதை நிச்சயப்படுத்திக்கொள்ளலாம். அதேநேரத்தில் கிறிஸ்துவின் அழைப்புக்கு விசுவாசத்தோடு பதிலளித்தால், அதிக தயவை தேவன் நமக்குக் காண்பிப்பார். தேவனுக்குப் பல பக்கங்கள் உண்டு. அவை எல்லாவற்றையும் நாம் எண்ணிப்பார்த்தால் ஆச்சரியப்பட வைக்கும். ஆகவே, நாம் தேவனை முழுமையாகப் புரிந்துகொண்டு செயல்பட வேண்டும்.

✞

# போய் யூதாஸின் கால்களைக் கழுவு!

# Go Wash Judah's Feet!

Louis Rushmore

இயேசு கிறிஸ்து தம்மை முற்றிலுமாகத் தாழ்த்தி அப்போஸ்தலர்களுடைய கால்களைக் கழுவிய சம்பவம் யோவான் 13 : 1 – 30 ம் வசனங்களில் இடம் பெற்றுள்ளது. பழங்கால கிழக்கத்திய நாடுகளில் சாதாரணமாக வெறுங்காலில் நடந்துவிட்டு, வீட்டிற்குள் ஒருவர் பிரவேசிப்பதற்கு முன்பாகத் தனது கால்களைக் கழுவுவது வழக்கமாக இருந்தது. சில வேளைகளில், வீட்டிற்குள் பிரவேசிப்பதற்கு முன்பு அந்த வீட்டுக்காரரின் ஆணையின் பேரில் அந்த வீட்டு வேலைக்காரன் விருந்தாளியின் கால்களைக் கழுவுவதுண்டு. கால்களில் அணிந்திருந்த பாதரட்சைகளும், தூசிபடிந்த தெருக்களும் இப்பழங்காலப் பழக்கத்திற்கு பின்னணியாக இருந்தன. வேறொரு வசனப்பகுதியில், கால்களில் படிந்த தூசி அவமதிப்பின் அடையாளமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. "**எவனாகிலும் உங்களை ஏற்றுக்கொள்ளாமலும், உங்கள் வார்த்தைகளைக் கேளாமலும் போனால், அந்த வீட்டையாவது பட்டணத்தையாவது விட்டுப்புறப்படும்போது, உங்கள் கால்களில் படிந்த தூசியை உதறிப்போடுங்கள்**" ( மத். 10 : 14 ).

கால்களைக் கழுவும் இந்நிகழ்ச்சி பலரால் தவறாகப் போதிக்கப்பட்டு, ஆராதனை முறைமையில் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. ஆனால், இந்நிகழ்வானது பஸ்கா போஜனத்திற்குப் பிறகு நடந்திருக்கிறது. அப்போஸ்தலனாகிய யோவான் தன்னுடைய சுவிசேஷப் புத்தகத்தில் கர்த்தருடைய பந்தியை குறிப்பிடாவிட்டாலும் கூட மற்ற சுவிசேஷப் புத்தகங்களில் நாம் கர்த்தருடைய பந்தியைப் பற்றி வாசிக்கிறோம் (மத். 26 : 17 – 29 ; மாற்கு 14 : 12 – 25 ; லூக்கா 22 : 7 – 23 ; I கொரி . 10 : 16 ).

தேவத்துவத்தில் இரண்டாம் நபராக இருப்பவரும் சிருஷ்டிகருமாகிய இயேசு கிறிஸ்து சிருஷ்டிப்பின் மாதிரிகளாகிய சீஷர்களின் கால்களைக் கழுவினார். இது நம்முடைய கர்த்தருடைய பங்கில் தாழ்மையின் மிகப்பெரிய வெளிப்பாடாக இருக்கிறது! கிறிஸ்துவின் தாழ்மைக்கும், கிறிஸ்துவின் ராஜ்யம் வளர்ந்து வரும்

ஒரு பூமிக்குரிய ராஜ்யம் என நினைத்து, அதில் யார் பெரியவனாயிருப்பான் என்பதைப் பற்றி நினைத்து போட்டி போட்டுக்கொண்டு சந்தர்ப்பத்திற்காக எதிர் நோக்கிக் கொண்டிருந்த சீஷர்களின் அகங்காரத்திற்கும் இடையே காணப்படும் மிகப்பெரிய வித்தியாசத்தைக் காணமுடியும். இந்த அப்போஸ்தலர்கள் அவ்வப் போது தங்கள் பிரிவினையை வெளிப்படுத்துவது வழக்கமான ஒன்றாகத்தான் இருந்திருக்கிறது ( மத். 20 : 20 - 28 ; மாற்கு 9 : 33-37 ; 10 : 35 - 45 ; லூக்கா 22 : 24 - 27 ). மத்தேயு வரி வசூலிப்பவராக இருந்தார். அவர் ரோம அரசை அதிகமாக வெறுப்பவர். அவர் மாத்திரமல்ல, யூதர்களும் ரோம அரசை வெறுக் கிறவர்களாகவே காணப்பட்டனர். சீமோனைப் பற்றி அப்போஸ்தலர்களுடைய பட்டியலில் பார்க்கும்போது செலோத்தே என்னப்பட்ட சீமோன் என்று சொல்லப் பட்டிருக்கிறது (லூக்கா 6 : 15). யூதர்களுக்கு ரோமர்களின் மீது இருந்த பகையு ணர்வின் காரணமாக கி. பி. 70 ல் அப்பேரரசு யூதர்களை கவிழ்த்துப்போட்டது. அதன் விளைவாக எருசலேமும் அதன் தேவாலயமும் அழிக்கப்பட்டது.

நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்கள் மத்தியில் காணப்பட்ட பொறாமையை சுட்டிக்காட்டியிருக்கிறார். தேவனுடைய ராஜ்ஜி யத்தில் பெரியவனாயிருப்பதற்கும், தலைமைத்துவத்திற்கும் சரியான பாதை வேலைக்காரனாயிருப்பதுதான் என்பதைத் திரும்பத் திரும்ப வலியுறுத்துகிறார் (மத் 20 : 26, 27 ; மாற்கு 9 : 35 ; 10 : 43, 44). இயேசு கிறிஸ்து தாம் ஊழியங் கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்ய வந்ததாகப் பல இடங்களில் வலியு றுத்திச் சொல்லியிருக்கிறார் ( மத். 20 : 28 ; மாற்கு 10 : 45 ). கடைசியாக யோவான் 13 ம் அதிகாரத்தில் நம் இரட்சகராகிய இயேசு கிறிஸ்து தாம் வாய் மொழியாக எவைகளைப் போதித்துக் கொண்டிருந்தாரோ அவைகளை சீடர் களின் கால்களைக் கழுவுவதன் மூலம் செயல்படுத்திக் காட்டினார். அப்போது குறிப்பாக அப்போஸ்தலனாகிய பேதுரு, நம் ஆண்டவர் சீடர்களின் கால்களைக் கழுவத் தம்மை முற்றிலுமாகத் தாழ்த்தியதைக் கண்டு சங்கோஜப்பட்டார் (யோ வான் 13 : 6 – 9). அப்போஸ்தலர்களில் ஒருவரும் சக அப்போஸ்தலர்களின் தூசி படிந்த கால்களைக் கழுவும் அளவுக்குத் தங்களைத் தாழ்த்தவில்லை. ஆனால், கிறிஸ்து தம்மை முற்றிலுமாகத் தாழ்த்தி அவர்கள் ஒருபோதும் மறக்க முடியாத அளவுக்குப் பாடத்தைப் புகட்டினார். அதன்பிறகு அச்செயலுக்கான விளக் கத்தையும், பயன்பாட்டையும் அவர் கொடுத்தார் (யோவான் 13 : 12 – 16).

இச்சம்பவத்தில் நம் ஆண்டவர் துரோகியான யூதாஸின் கால்களையும் கழுவினதை ஒரு நிமிடம் நின்று ஆழ்ந்து யோசித்திருக்கிறீர்களா? கிறிஸ்து தாழ் மையைக் குறித்து ஓர் உயிரோட்டமுள்ள பாடத்தைக் கற்பித்து முடித்த உடனே யூதாசும் அவ்விடத்தை விட்டு புறப்பட்டுப் போய்விட்டான் (யோவான் 13 : 26 - 30) இருந்தபோதிலும் இயேசு கிறிஸ்து யூதாஸ் தம்மைக் காட்டிக்கொடுப்பான்

என்பதை அறிந்திருந்தார் ( யோவான் 13 : 2 , 11). யூதாஸ் தம்மை காட்டிக் கொடுப்பான் என்பதை முன்கூட்டியே அறிந்திருந்தபோதிலும், எப்படி அவரால் அப்படிப்பட்ட தாழ்மையை வெளிப்படுத்த முடிந்தது? இயேசு கிறிஸ்துவின் தாழ்மைக்கு எல்லையே இல்லை! கிறிஸ்து பரலோகத்திலிருந்து இறங்கி, இப்பூமியில் ஓர் ஏழைக் குடும்பத்தில், ஒரு கன்னியின் வயிற்றில் பிறப்பதற்கு தம்மைத் தாழ்த்தியபோதே, தமக்கு உண்டான புகழ்ச்சியையும், கனத்தையும் விட்டுக்கொடுத்துவிட்டார் (பிலி. 2 : 5 - 8 ; II கொரி. 8 : 9). கடைசியாக, நம் ஆண்டவர் எந்த மனித இனத்துக்காக இப்பூமிக்கு வந்தாரோ, அதே மனித இனத்தால் சிலுவையில் அறையப்பட தம்மைத்தாமே அதற்கு ஒப்புக் கொடுத்தார் (அப். 8 : 32, 33 ).



நாம் இயேசு கிறிஸ்துவை பின்பற்றுகிறவர்களாயிருந்தால் தாழ்மையைக் கற்றுக்கொள்ள வேண்டும் ( I கொரி. 11 : 1 ; I பேதுரு 2 : 21 ). தேவனுடைய ராஜ்ஜியத்தில் நாம் மேன்மையடைய வேண்டுமென்றால், அதற்கான ஒரேவழி, மற்றவர்களுக்கு சேவை செய்வது தான். பொதுவாக நாம் நம்மைவிட அனுபவமிக்கவர்களிடத்திலும், பெரியவர்களிடத்திலும், புகழ்பெற்றவர்களிடத்திலும் தாழ்மையாக நடந்துகொள்கிறோம். அதேவேளையில், எவ்வித காரணமுமின்றி நம்மை துன்பப்படுத்துகிறவர்களிடத்தில் தாழ்மையை வெளிப்படுத்துகிறோமா?

தேவ ஆவியினால் ஏவப்பட்ட அப்போஸ்தலனாகிய பவுல் இவ்விதமாகப்

போதித்தார். " ஒருவரோடொருவர் ஏக சிந்தையுள்ளவர்களாயிருங்கள்; மேட்டிமையானவைகளைச் சிந்தியாமல் தாழ்மையானவர்களுக்கு இணங்குங்கள்; உங்களையே புத்திமான்களென்று எண்ணாதிருங்கள். ஒருவனுக்கும் தீமைக்குத் தீமை செய்யாதிருங்கள்; எல்லா மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுங்கள். கூடுமானால் உங்களாலானமட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள். பிரியமானவர்களே, பழிவாங்குதல் எனக்குரியது. நானே பதிற்செய்வேன், என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறபடியால், நீங்கள் பழி வாங்காமல் கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள். அன்றியும், உன் சத்துரு பசியாயிருந்தால், அவனுக்கு போஜனங்கொடு; அவன் தாகமாயிருந்தால், அவனுக்குப் பானங்கொடு; நீ இப்படிச் செய்வதினால் அக்கினித்தழலை அவன் தலையின் மேல் குவிப்பாய்; நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு " (ரோமர் 12:16 - 21).

மேலுள்ள வசனங்களில் குறிப்பிட்டிருக்கிற காரியங்களை நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம்முடைய பூமிக்குரிய ஊழியத்தில் பல சந்தர்பங்களில், பல வழிகளில் செய்துகாட்டியிருக்கிறார். இன்னும் அவர் தம்முடைய தனிப்பட்ட ஜீவியத்தில், பல வேளைகளில் இப்பண்புகளை நிறைவேற்றியிருக்கிறார். குறிப்பாக, தம்மைக் காட்டிக்கொடுத்த துரோகியாகிய யூதாசின் கால்களைக் கழுவியபோது இப்பண்புகளை நடைமுறைப்படுத்திருக்கிறார். நம் உணர்வுகள் நொறுக்கப்படும்போது நாம் செய்ய வேண்டியதெல்லாம், போய் யூதாஸின் கால்களைக் கழுவுவதுதான்! யாராவது நம்மைப் புண்படுத்தினால் அல்லது நம்மை பகடைக்காயாகப் பயன்படுத்தினால் நாம் போய் யூதாஸின் கால்களைக் கழுவ வேண்டும். நாம் மற்றவர்களுடைய தலையில் தடியை எடுத்து அடிப்பதினால் பிறருடைய கவனத்தை ஈர்க்க முயற்சிக்கிறோம். மாறாக, நாம் அப்படிச் செய்யாமல், போய் யூதாஸின் கால்களைக் கழுவ வேண்டும்! நம் எதிராளியின் வாகனத்தின் நான்கு சக்கரங்களிலுள்ள காற்றைத் திறந்துவிடுவதினால் நமக்கு தற்காலிகமான திருப்தி கிடைக்கலாம். ஆனால், நாமெல்லோரும் நம்மைத் தாழ்த்தி யூதாஸின் தூசிபடிந்த கால்களைக் கழுவுவோமாக! ✝

நாம் தேவனுடையவர்களாக இருந்தால், நம் வாழ்க்கையின் சட்டதிட்டங்களும், ஒழுக்க நெறிகளும் நம்முடையவைகளாயிராது. அவைகள் தேவனால் ஏற்படுத்தப்படுகின்றன. அவைகள் தான் நம் வாழ்க்கையின் எல்லாவற்றையும் ஆளுகை செய்யும்.

# ஒரு போதும் சரணடைய வேண்டாம்

## *Don't Ever Surrender*

J.C. Choate

இந்த உலகம் துன்மார்க்கத்தால், பொல்லாங்கால் நிறைந்திருக்கிறது (I யோவான் 5:19). எல்லா இடங்களிலும் இருள் காணப்படுகிறது. எல்லோரும் பாவஞ்செய்து தேவமகிமை அற்றவர்களாகி விட்டார்கள். ஆகவே, மனிதன் இழந்த நிலையில் நம்பிக்கை இல்லாமல் இருக்கிறான். சாத்தான் இந்த உலகத்தின் அதிபதியாக இருந்து திரளான ஜனங்களைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறான்.

மனிதனுடைய இருதயத்திலிருந்து புறப்பட்டு வரும் எல்லாத் தீங்கும், கேடும், வேதாகமத்தில் பொய்யனென்றும், வஞ்சகன் என்றும் விவரிக்கப்பட்டிருக்கிற சாத்தானிடமிருந்து ஆரம்பமாகிறது ( யோவான் 8 : 44 ). பெரும்பாலான மக்கள் தங்களை பல்வேறுபட்ட பாவங்களுக்கும், துன்மார்க்கத்திற்கும் ஒப்புக்கொடுத்து அதையே விளைவுகளாக அறுத்துக் கொண்டிருக்கும்போது, இந்த உலகத்தில் அதிகமான யுத்தங்களும், குற்றங்களும், காயங்களும், துக்கங்களும் காணப்படுவதில் ஏதாவது ஆச்சிரியம் இருக்கிறதா?

கிறிஸ்தவ தேசம் என்று ஒரு காலத்தில் அழைக்கப்பட்ட அமெரிக்காவில் கூட பாவத்தின் தீமைகள் அதிகமாக ஆட்சி செய்கின்றன. பாதித் திருமணங்கள் விவாகரத்தில் போய் முடிகின்றன. கருத்தரிக்கப்படும் குழந்தைகளில் மூன்றில் ஒரு பகுதி கருக்கலைப்பு செய்யப்படுகின்றன. பிறக்கும் பிள்ளைகளில் நான்கில் ஒன்று தவறான முறையில் பிறக்கின்றன. பிரிந்த குடும்பங்களில் வன்முறையும், துஷ்பிரயோகமும் வழக்கமான ஒன்றாகிவிட்டது. குடும்பங்கள் பிரிந்து போவதாலும், குடும்ப மதிப்பு குன்றிப் போவதாலும் தேசத்தின் முக்கியமான அமைப்பே அழிந்து போகிறது. சரியான மாற்றம் துரிதமாக வரவில்லையென்றால், நிச்சயமாக விளைவு இன்னும் அதிகமாக இருக்கும்.

இப்படி ஆபத்தான பிரச்சனைகளை உள்ளடக்கிய நாடு அமெரிக்கா மட்டுமல்ல. உலகம் முழுவதும் பொல்லங்கனுக்குள் கிடக்கிறது.

பாவம் மனிதனுக்குள் சமூக வாழ்க்கையில், குடும்பத்தில், மதத்தில், அரசியலில், வியாபார விவகாரங்களில் ஆளுகை செய்கிறது. மனிதன் பதவிப் பசி பிடித்தவன், தேவைக்கேற்ப லஞ்சம் மற்றும் ஊழல் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. தேசங்களுக்குள், தேசங்களின் மத்தியில் போர் வெடிக்கிறது, இது பலமுள்ள நாடு, பலவீனமான நாட்டை ஒடுக்குவதில் போய் முடிகிறது. இது, பட்டினி, மரணம் மற்றும் அழிவைக் கொண்டு வருகிறது, இது, அரிதாகக் கிடைக்கும் சமாதானத்திற்காக ஏங்கச் செய்கிறது.

மத உலகம்கூட கேடானதாகத்தான் இருக்கிறது. எண்ணற்ற கள்ள போதகர்களைக் கொண்ட தவறான மார்க்க பிரிவினைகள் இருக்கின்றன ( மத்தேயு 24 : 24 ). அநேகர், மனுஷருடைய போதனைகளுக்கும், கட்டளைகளுக்கும் கீழ்ப்படிகிறார்கள், அவர்கள் தேவனை வீணாக ஆராதிக்கிறார்கள். பெரும்பாலானோர் நித்திய அழிவுக்கு அழைத்துச் செல்கிற விரிவான வழியில்தான் செல்கிறார்கள்.

இப்படி உலகில் எல்லாமே தவறானவைகளாயிருக்க ஒருவர் ஏமாற்றமடையவும், குழப்பமடையவும் சாத்தானிடத்திலும், அவனுடைய மிகப்பெரிய சேனையினிடத்திலும் சரண் அடைந்துவிடுவது எளிதாகிவிடுகிறது. நம் உணர்வு இப்படியாகக் கூட இருக்கலாம், என்ன பயன்? நமக்கு எதிராக இருக்கிற சக்திகள் மிகப் பெரியது. கடைசியாக, எல்லாப் போராட்டமும் முடிந்த பிறகு நாம் தோற்றுப் போவோம் என்று ஒரு வேளை நாம் நினைக்கலாம். ஆனால், இன்னும் நம்பிக்கை இருக்கிறது.

நம் பரலோகத்தின் தேவன் இவ்வுலகத்தின் அதிபதியை விட மிகப் பெரியவர். மனித இனம் தகுதி இல்லாதிருந்தும் கூட நித்திய சிருஷ்டிகர் கீழ்ப்படிகிறவர்கள் இரட்சிக்கப்படும்படி இரக்கம் பாராட்டி, பாவமான மனிதனுக்காக சிலுவையில் மரிக்கும்படி இந்த உலகத்துக்கு இயேசுவை அனுப்பி வைத்தார். கிறிஸ்து மூலமாக நம்முடைய பாவங்களுக்கான மன்னிப்பு பற்றி அறிந்து கொள்ள முடியும். மேலும், அவர், அந்தகார லோகாதிபதியோடும், அவனுடைய சேனைகளோடும் ஆவிக்குரிய போராட்டத்தை வெற்றிகரமாகப் போராடுகிற சேனை என்று விவரிக்கப்படுகிற அவருடைய ஆவிக்குரிய குடும்பத்தில் நம்மைச் சேர்த்துக் கொள்வார்.

கிறிஸ்தவ ஜீவியம் கடினமான ஒன்றாகச் சிலரால் சித்தரிக்கப்பட்டாலும், சாத்தான் ஒருவனுக்குத் தருவதை விட அதிகமாகவே தருகிறது.

நாம் குறைவான எண்ணிக்கையில் இருக்கலாம். ஆனால், கர்த்தர் எப்பொழுதும் நம்முடனே இருப்பார் என்கின்ற வாக்குத்தத்தம் நமக்கு இருக்கிறது. (மத்தேயு 28 : 20). நம் உதவிக்காக கூப்பிட பரமப்பிதா நமக்கு இருக்கிறார். நாம் இந்த உலகத்தை எதிர்க்க நமக்கு சகோ தரர்கள், சக போர்ச் சேவகர்கள் இருக் கிறார்கள். நம்மை வழி நடத்த தேவ னுடைய வார்த்தையும், நம்மைத் தாங்க கிறிஸ்துவுக்குள் சகல ஆவிக் குரிய ஆசீர்வாதங்களும் இருக் கின்றன. எல்லாவற்றையும் விட, புதிய உலகத்தில் நித்திய ஜீவனுக்கான நம்பிக்கை நமக்கு உண்டு. அந்தப் புதிய உலகில் நாம் என்றென்றுமாய் கர்த்தருடனே கூட இருப்போம்.

நம் அனைவருக்கும் என்னுடைய வேண்டுகோள் என்னவென்றால், நாம் ஒருபோதும் விசுவாசத்தை விட்டு விட வேண்டாம், வெளியேற வேண்டாம், உண்மை யற்றவர்களாகிவிட வேண்டாம் அல்லது பொல்லாங்கனிடத்தில் சரண் அடைந்து விட வேண்டாம். நம்மிடத்தில் கர்த்தருடைய வாக்குத்தத்தம் இருக்கிறபடியால் இறுதியில் நாம் வெற்றி பெறுவோம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இந்த வாழ்க்கையில் நாம் எப்படிப்பட்ட பாடுகளை, துன்பங் களை அனுபவித்தாலும் சரி, நாம் எதிர் கொள்ளப்போகிற சவால்களைப் பற்றிக் கவலைப்படாமல், போராட வேண்டிய போராட்டங்களைப் பற்றிக் கவலைப்படாமல் இருக்கிற கிறிஸ்தவனுக்கு வெற்றி நிச்சயிக்கப் பட்டிருக்கிறது. அதை நாம் ஒரு போதும் மறந்து விடக்கூடாது.

ஆகவே, நம்மை நாம் தூய்மையாக வைத்துக்கொண்டு, தேவ பக்தியாக இருந்து, சத்தியத்திற்காகவும், தேவனுக்காகவும் தொடர்ந்து நின்று, உலகத்திற்கு சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, உண்மையாக அவரை ஆராதித்து, எப்போதும் அவருக்கு சேவை செய்ய வேண்டும். தேவன் நம்மை ஆசீர்வதித்து, இந்த சரீரப்பிரகாரமான வாழ்க்கையில் அனுதினமும் வருகின்ற சவால்களை எதிர்கொள்வதற்கு உதவிசெய்வார். மேலும், வருகின்ற உலகத்தில் அவரோடு இருப்பதற்கு ஒரு நித்திய வீட்டையும் நமக்கு வாக்குத்தத்தம் செய்திருக்கிறார் (வெளி. 2:10).

அப்போஸ்தலனாகிய பவுல் இவ்விதமாகச் சொன்னார். "ஆதலால் இக்காலத்துப்பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத் தக்கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன்" (ரோமர் 8 : 18).

இத்தோடு, கிறிஸ்துவின் நாமத்தினாலே ஆமென், ஆமென் என்று சொல்கிறோம்.

✝

# விசுவாசம்

# Faith

Philemon Rajah

கிறிஸ்தவத்தின் அடிப்படையான காரியங்களில் ஒன்று, ' விசுவாசம் '. இந்த விசுவாசம் என்பது கிறிஸ்தவத்தின் ஆணிவேரைப் போன்றது. ஒரு தனி மனிதனுக்கும் தேவனுக்கும் உள்ள உறவினை பெலப்படுத்துவது மட்டுமல்லாமல், அந்த நபரை தேவனிடம் சேர்க்கும் பாலமாகவும் விசுவாசம் உள்ளது.

ஆபேல், நோவா, ஆபிரகாம், மோசே, தாவீது, தானியேல் போன்ற பலர் தேவனிடத்தில் கொண்டிருந்த உறுதியான **விசுவாசத்தினால்,** மிகப்பெரிய காரியங்கள் செய்ததை நாம் வேதாகமம் முழுவதும் படிக்கலாம்.

அன்பு, விசுவாசம், பரிசுத்தம் என்பவைகள் வேதாகமத்தில் முக்கனி போன்று முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. இவ்வளவு மேன்மையான விசுவாசத்தினைப் பற்றி நாம் தியானம் செய்வோம்.

**1. விசுவாசம் தவறாக புரிந்து கொள்ளபப்படுகிறது...**

" விசுவாசம் " என்பது அநேக வேளைகளில் தவறாக புரிந்து கொள்ளப்படுகிறது. அதைப் பற்றி வித்தியாசப்பட்ட, முரண்பாடான கருத்து உலாவுவதால் தவறாக புரிந்து கொள்ளப்படுகிறது.

எந்த ஒரு தவறான புரிந்துக்கொள்ளுதலும் சரியான விளைவுகளை ஏற்படுத்த முடியாது. அது சில நேரங்களில் மிகவும் மோசமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடியதாகிவிடும். அற்புதம் செய்து, பிசாசுகளைத் துரத்தி, தீர்க்க தரிசனம் பேசுகின்றவர்கள் இப்படிப்பட்ட செயல்களை விட பரலோக பிதாவின் சித்தம் செய்வது மிக முக்கியம் என்பதை புரிந்துகொள்ளாமல் போனபடியினால், ஆண்டவர் இயேசு அவர்களுக்கு மிகப்பெரிய எச்சரிக்கை செய்தார். மத் 7 : 21 –

23 " பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே ! கர்த்தாவே ! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே ! கர்த்தாவே ! உமது நாமத்தினாலே தீர்க்க தரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன் ". மற்றும் இதே போன்ற தவறான புரிந்துக் கொள் ளுதல் கொண்ட வேதபாரகர், பரிசேயர், சதுசேயர், என்பவர்களும் ஆண்டவர் இயேசுவினால் அநேக முறை கடிந்துக் கொள்ளப்பட்டதையும் ( மத்தேயு 23 ) நாம் வாசிக்க முடியும்.

தவறான புரிந்துக்கொள்ளுதல் நமக்குள் தப்பான எண்ணத்தை விதைத்து, தவறான முடிவுகளை நோக்கித் தவறாக வழி நடத்திவிடும். மத் 22 : 29, 30 " இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: நீங்கள் வேதவாக்கியங்களையும், தேவனுடைய வல்லமையையும் அறியாமல் தப்பான எண்ணங்கொள்ளு கிறீர்கள். உயிர்த்தெழுதலில் கொள்வினையும் கொடுப்பனையும் இல்லை; இவர்கள் பரலோகத்திலே தேவதூதரைப்போல் இருப்பார்கள் ".

சிலர், நம் இருதயங்களிலும், சிந்தனைகளிலும் நேரடியாகவே பரிசுத்த ஆவியினால் விசுவாசம் உண்டாக்கப்படுவதாக போதிக்கின்றனர். வேறு சிலர் பைபிளின் மூலம் கடவுள் நம் இருதயங்களில் விசுவாசத்தை தோற்றுவிக்கிறார், அல்லது உண்டாக்க பயன்படுத்துகிறார் என்று கூறுகின்றனர்.

நிச்சயமாகவே, இருவேறு கருத்துக்களுமே சரியாக இருக்க முடியாது. இந்த " விசுவாசம் " பற்றிய எந்த வகை கேள்விகளுக்கும் பைபிள் மட்டுமே சரியாக நமக்கு போதிக்க முடியும். விசுவாசம் என்பது பக்தி சம்பந்தப்பட்டது; எனவே, பைபிள் மட்டுமே நமக்கு சரியாக வழிகாட்ட முடியும்.

**2. விசுவாசம் விளக்கப்படுகிறது...**

விசுவாசம் பற்றி வேதாகமம் போதுமான மற்றும் தெளிவான விளக்கத்தை நமக்குத் தருகிறது. பரிசுத்த ஆவியின் உதவியுடன் நாம் அதை நேர்மையாகப் புரிந்துகொள்ள முடியும்.

எபி 11 : 1 " விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படா தவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது ".

விசுவாசம் என்பது, எதிர்நோக்கி இருப்பவை கிடைக்கும் என்னும் உறுதி மற்றும் கண்ணுக்கு புலப்படாதவைகளை பற்றிய ஐயமற்ற நிலையாக இருக்கிறது.

நாம் நம்புகிறவற்றின் மீது கொண்டுள்ள உறுதிதான் விசுவாசம். நம் கண்களால் பார்க்காவிட்டாலும் கூட, உண்மையான ஒன்றை நம்புவதுதான் விசுவாசமாகும்.

மத்தேயு 16 : 1 - 4 " பரிசேயரும் சதுசேயரும் அவரைச் சோதிக்கும்படி அவரிடத்தில் வந்து; வானத்திலிருந்து ஓர் அடையாளத்தைத் தங்களுக்குக் காண்பிக்க வேண்டும் என்று கேட்டார்கள். அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: ....இந்தப் பொல்லாத விபசார சந்ததியார் அடையாளம் தேடுகிறார்கள்; யோனா தீர்க்கத்தரிசியின் அடையாளமேயன்றி வேறே அடையாளம் இவர்களுக்கு கொடுக்கப்படுவதில்லை... "

விசுவாசம் என்பது அடையாளத்தையும், ஆதாரத்தையும் தேடுவது அல்ல; அப்படிப்பட்டவர்களை இயேசு கடிந்துகொண்டார். ஏனெனில், விசுவாசம் என் பது ஒருவருடைய வாழ்வில் மிகப்பெரிய ஆதாரமாகவும், அவரை உலகிற்கு அடையாளமாகவும் மாற்றுகிறதாயிருக்கிறது (ரோமர் 4 : 11, 12).

எபிரேயர் 11ம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட, மேகம் போன்ற திரளான சாட்சியாளர்கள் எல்லாம், " விசுவாசத்தினாலே " அடையாளமாக ( முன்மாதிரி யாக ) இருக்கிறார்கள். ஆயினும், தேவன் நம்மை கண்மூடித்தனமாக அவரை விசுவாசிக்கும்படி தூண்டாமல், அவருடைய வார்த்தையினை ஆதாரமாகக் கொண்டே நம்மை விசுவாசிக்கும்படி அழைக்கிறார் ( ரோ 10 : 17 : மத் 4 : 4). நூற்றுக்கதிபதியிடம் காணப்பட்ட இப்படிப்பட்ட விசுவாசம் ஆண்டவர் இயேசுவை பிரமிக்க செய்தது, மற்றும் அவரை மகிழ்ச்சியடைய செய்தது (மத் 8 : 8, 10).

**3. நாம் விசுவாசம் பற்றி சரியாகப் புரிந்திருக்க வேண்டும்**

அப்படியானால், நம் இருதயங்களில் விசுவாசம் எப்படி உருவாக்கப் படுகிறது? விதைக்கப்படுகிற விதையின் மூலம். அந்த விதை வேத வசனமே! லூக்கா 8 : 12 " வழியருகே விதைக்கப்பட்டவர்கள் வசனத்தைக் கேட்கிறவர்களா யிருக்கிறார்கள்...

அப்போஸ்தலர்களால் போதிக்கப்பட்ட வசனங்களின் மூலம் விசுவாசம் உண்டாக வேண்டும். யோவான் 17 : 20 " நான் இவர்களுக்காக வேண்டிக் கொள் ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக் கிறவர்களுக்காகவும் வேண்டிக் கொள்ளுகிறேன் ".

நற்செய்தியை கேட்பதினால் (I கொரி 15 : 1 - 4). வேத வாக்கியங்களை ஆராய்வதினால் (அப் 10 : 11, 12). வசனத்தை கேட்பதினால் (ரோமர் 10 : 13 - 17) "விசுவாசம் " வருகிறது.

விசுவாசத்தைப் பற்றிய சரியான அல்லது நேர்மறையான புரிந்து கொள் ளுதல் நமக்கு அவசியம். ஏனெனில், அன்பில்லாதவரால் தேவனை அறிய முடி யாது (I யோ 4 : 8), பரிசுத்தமில்லாதவரால் தேவனை தரிசிக்க முடியாது (எபி 12 : 14). ஆனால், விசுவாசமில்லாமல் ஒருவர் அன்பாகவும், பரிசுத்தமாகவும் (எபி 11 : 22, 24, 25) இருக்கவே முடியாது. ஆகையால், நாம் நிச்சயமாக கர்த்தருடைய வார்த்தையின்படி ( ரோமர் 10 : 17 ) விசுவாசத்தை சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

**4. விசுவாசம் என்பது முக்கியமான ஒன்று...**

எபி 11 : 6 **விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரி யம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம் மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்.**

மிக மிக முக்கியமான கருத்து இது. விசுவாசம் இல்லாமல் எவரொருவரும் தேவனுக்குப் பிரியமாயிருக்க முடியாது! தேவனிடத்தில் வருகிறவர் உண்மை யாகவே தேவன் இருக்கிறார் என நம்பிக்கை கொள்கிறார்; அதோடு தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் கொடுப்பார் என்றும் நம்பிக்கை கொள்ள வேண்டும். அதாவது, நம்பிக்கையினாலன்றி யாரும் கடவுளுக்கு உகந்த வராயிருக்க முடியாது. ஏனெனில், கடவுளை அணுகிச் செல்வோர், அவர் இருக்கி றார் என்பதையும், அவரைத் தேடிச் செல்வோருக்குத் தக்க கைமாறு தருகிறார் என்றும் நம்பிக்கைக் கொள்ள வேண்டும்.


வெளி 21 : 8 " **பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப் பானவர்களும், கொலைபாதகரும், விபசாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் என்றார்** ". விசுவாசம் நம்மை தேவனுக்கு நேராக பரலோகத்தை நோக்கி வழி நடத்துகிறது; அவிசுவாசம் என்பதோ நம்மை தேவனுக்கு எதிராக நரகத்தை நோக்கி வழி நடத்துகிறது.

யோவான் 20 : 30 - 31 " இந்தப் புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமாரனுமாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது ".

**5. மனித இருதயங்களில் விசுவாசத்தை உண்டாக்குவது எப்படி?**

உண்டாக்குவது என்றால், எழுதப்பட்ட வேத வார்த்தைகளின் மூலமாக மட்டும் ஒருவரில் விசுவாசத்தை உண்டாக்க முடியும்.

வேத வசனங்களை போதிப்பதின் மூலம் உண்டாக்க வேண்டும். நினிவே மக்கள் போதிக்கப்பட்ட கர்த்தருடைய வார்த்தையை விசுவாசித்து மாறினார்கள். யோனா 3 : 4, 5 " யோனா நகரத்தில் பிரவேசித்து, ஒரு நாள் பிரயாணம் பண்ணி; இன்னும் நாற்பது நாள் உண்டு, அப்பொழுது நினிவே கவிழ்க்கப்பட்டுப்போம் என்று கூறினான். அப்பொழுது நினிவேயிலுள்ள ஜனங்கள் தேவனை விசுவாசித்து, உபவாசஞ் செய்யும்படி கூறினார்கள்; பெரியோர்கள் முதல் சிறியோர் மட்டும் இரட்டுடுத்திக் கொண்டார்கள் ".



ஒருவரது சூழ்நிலைகளினாலோ ( எல்லா வற்றையும் வணங்கிவிட்டேன் ஒன்றும் நடக்க வில்லை ), மற்றும் அவரை சுற்றி நடப்பவை களினாலோ ( நான் வேண்டிக் கொண்டேன், அது நடந்துவிட்டது ) விசுவாசம் ஏற்படுவதாக இருக்க கூடாது. மாறாக, அவர் கர்த்தருடைய வசனத்தை கேட்பதினால், வசனத்தை மையமாக கொண்டு ஏற்பட வேண்டும்.

II தீமோ 3 : 16, 17 " வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது ". வேத வாக்கியங்கள் எல்லாம் விசுவாசத்தினாலே நம்மை மாற்றும்படியாக, நம்மைத் தேறினவராகவும், எல்லாவித நற்கிரியையும் செய்யத் தகுதியானவர்களாக பரிசுத்த ஆவியானவரால் கொடுக்கப்பட்டுள்ளது.

**முடிவுரை**

பிரியமானவர்களே! விசுவாசம் என்பது கர்த்தருடைய வார்த்தைகளைச் சரியாக புரிந்து கொண்டு, நேர்மையாக ஏற்றுக்கொள்ளப்படுவதினால் ஒருவருக்குள் உண்டா னால் அவருடைய வாழ்வை தேவனுடைய ஆசீர்வாதத்தினால் நிறைந்ததா கவும், தேவனுக்கு உகந்ததாகவும் மாற்றிவிடக் கூடியது. ஆகையால், இவ்வளவு மேன்மையான விசுவாசம் நம்மை இரட்சிக்கும் விசுவாசமாக இருக்க வேண்டுமானால், நம் விசுவாசம் கீழ்படியும். விசுவாசமாக இருக்க வேண்டும் (யாக் 2). ✝

# நீதியின் கனிகள்

## Fruits of Righteousness

B. Arjunan

ஒவ்வொரு கிறிஸ்தவனும் தன்னுடைய வாழ்க்கையில் அதிகமான கனிகளைக் கொடுக்கவேண்டுமென கர்த்தர் எதிர்பார்க்கிறார். கனிகள் இல்லாத வாழ்க்கை கால் வாழ்க்கை என்றே சொல்லவேண்டும். **" தேவனுக்கு மகிமையும் துதியும் உண்டாகும்படி இயேசுகிறிஸ்துவினால் வருகிற நீதியின் கனிகளால் நிறைந்தவர்களாகி "** என பிலி.1:10-ல் வாசிக்கிறோம். ஒருவருக்குள்ளாக ஆவிக்குரிய கனிகள் எங்கிருந்து வருகிறது என்றால்; இயேசுகிறிஸ்துவின் மூலமாக வருகிறது. ஆவிக்குரிய வசனங்களுக்கு அவன் செவி கொடுக்கும்போது ஆவிக்குரிய கனிகளைக் கொடுக்கமுடியும். இதைக்குறித்து அநேகர் சிந்திப்பதில்லை. ஏதோ, சபைக்குப் போனால் போதும். ஒரு கிறிஸ்தவராக வாழ்ந்து மரித்தால்போதுமென நினைக்கின்றனர். வேதாகமம் தேவனுக்கு மகிமையாகவும் துதியாகவும் ஜீவிக்கவேண்டியவர்களாக இருக்கிறோம் என போதிக்கிறது. வாசனைத் திரவியங்களை எங்கே வைத்தாலும் அந்த வாசனை வெளிப்படும். அது அந்த வாசனையை தன்னுள் அடக்கிவைத்துக்கொள்ளாது. அதைப்போல ஒவ்வொரு கிறிஸ்தவனும் நீதிக்குரிய வாசனையை வெளிப்படுத்துகிறவனாயிருக்கிறான். அப்படி வெளிப்படுத்தும்போது அவன் குடியிருக்கிற இடமுழுவதும் கிறிஸ்தவ வாசனையை வெளிப்படுத்துகிறவனாயிருக்கிறான். கரடு முரடான வழிகளில் நடக்கிறவர்கள் அன்பின் பிரமாணத்தையும், தேவனுடைய தயவையும், இரக்கத்தையும் அறிந்துகொள்ள முடியும்.

இயேசு சொல்கிறார்; **" நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள் ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது "** என்கிறார் (யோவா.15:5). கிறிஸ்துவானவர் இல்லாமல் நாமாக கனிகளைக் கொடுக்க முடியாது. அப்படி ஒருவர் கொடுக்கிறேன் என்று சொல்வாரானால்

அவர் நிச்சயமாக ஒரு கிறிஸ்தவராக இருக்கமாட்டார் என்பது உண்மை. இயேசு தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட திராட்சச்செடியாக இருக்கிறார். நாம் ஒவ்வொருவரும் அந்த திராட்சச்செடியில் நிலைத்திருந்து கனிகளைக் கொடுக்கவேண்டியவர்களாயிருக்கிறோம். அவரில் நாம் நிலைத்திருக்கும்போது நிச்சயமாக அதிகமான கனிகளை தேவனுக்கு மகிமையாகவும், துதியாகவும் கொடுக்கமுடியும். தேவனால் படைக்கப்பட்ட மரம் செடி கொடிகளைப் பாருங்கள்; எல்லாமே கனிகளைக் கொடுத்துக்கொண்டிருக்கிறது அல்லது வேறுவகையில் பயனுள்ளதாக இருக்கிறது. அவைகள் என்ன நோக்கத்தோடு படைக்கப்பட்டதோ அந்த நோக்கத்தை ஒவ்வொரு நாளும் நிறைவேற்றிக்கொண்டே இருக்கிறது. ஆனால், மனிதன் மட்டும் தான் படைக்கப்பட்ட நோக்கத்தை மறந்தவனாக தன் இஷ்டம்போல் வாழ்ந்துகொண்டிருக்கிறான். நாம் தேவனுடைய சித்தத்தை அறிந்துகொண்டு வாழும்போது மெய்யான வாழ்வை கர்த்தருக்குள் பெற்றுக்கொள்ளுவோம்.

ஆவிக்குரிய கனிகள் ஒன்பது; " அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்; இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை " (கலா.5 : 22, 23). இந்த ஒன்பது கனிகள் நிறைந்ததுதான் நீதியின் கனிகள். இவைகளை ஒவ்வொரு கிறிஸ்தவனும் தங்களுடைய வாழ்க்கையில் கொடுத்துக்கொண்டே இருக்க வேண்டும். கனிமரங்கள் எப்போதும் கனிகளை கொடுத்துக்கொண்டே இருக்காது. அந்த அந்த சீசனில் கனிகளைக் கொடுக்கும். ஆனால், கிறிஸ்தவர்கள் அப்படியல்ல நன்மை தீமை அறியும் பருவம் வந்ததிலிருந்து வாழ்நாட்களிளெல்லாம் கொடுத்துக்கொண்டே இருக்கவேண்டுமென தேவன் எதிர்பார்க்கிறார். இவ்விதமாக ஒன்பது கனிகளைக் கொடுக்கும்போது நாடும் வீடும் சமாதனம் பெறும். தேவபிரசன்னத்தை அவர்கள் பெற்று அனுபவிக்கமுடியும். தேவன் அப்படிப்பட்ட வீட்டையும், நாட்டையும் தொடர்ந்து ஆசீர்வதிப்பார். வீட்டிலே ஒரு பிரச்சனை என்றால் அந்த வீட்டிலே ஒவ்வொரு நாளும் நடைபெறுகிற வேலைகள் தடைபடுகிறது அல்லவா! அதைப்போல தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றாத எந்த ஒரு வீட்டிலும், சமாதானமும், தயவும் இல்லாமற்போகும். இவைகளை நாம் நிறைவேற்றும்போது எல்லையில்லா சந்தோஷத்தையும், சமாதானத்தையும் அடைய முடியும். உங்களுடைய ஜீவியத்தில் ஆவிக்குரிய கனிகள் ஒன்பதையும் கொடுங்கள்.

நீதியின் கனிகளால் நாம் நிரப்பப்படுவதற்கான நோக்கம் இருக்கிறது. கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வருகையை சந்திக்கும்படியாகவும், அதற்கு ஆயத்தமுள்ளவர்களாயிருப்பதற்கும் இவைகள் நம்மை ஆயத்தப்படுத்துகிறது. இதைக்குறித்து பவுல் சொல்லும்போது; '' நீங்கள் கிறிஸ்துவின்

நாளுக்கென்று துப்புரவானவர்களும் இடறலற்றவர்களுமாயிருக்கவும் வேண்டுதல் செய்கிறேன் " என்கிறார் (பிலி.1:11). துப்புரவானவர்களும், இடறலற்றவர்களும் என இரண்டு வார்த்தைகளை நாம் இந்த வசனத்தில் காண்கிறோம். துப்புரவு என்பது தூய்மையை குறிக்கிறது; இடறல் என்பது மற்றவர்களுக்கு இடையூறு இல்லாமலிருப்பதைக் குறிக்கிறது. நீங்கள் இந்த இரண்டு விஷயத்தில் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்களா? நாம் மனந்திரும்பும்போது முழுமையாக மனந்திரும்புகிறோம், அதைப்போல எதையாகிலும் கர்த்தருக்காக செய்தாலும் அதை முழுமையுமாகச் செய்கிறோம். ஏனெனில், அவரிடத்தில் முழுமனதோடும், முழுபெலத்தோடும் அன்புகூரவேண்டும் என்ற கட்டளையை நாம் பெற்றவர்களாயிருக்கிறோம். ஆகையால், முழுமையாக எதைச் செய்தாலும் கர்த்தருக்குச் செய்கிறோம். மேலும் நாம் வாசிக்கும்போது; " **சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக** " (1தெச.5:23). இந்த வசனத்தில் குற்றமற்றதாயிருக்கும்படி என பார்க்கிறோம். எது குற்றமற்றதாயிக்கவேண்டும்? மூன்றுமே குற்றமற்றதாயிருக்க வேண்டும். ஆவி, ஆத்துமா, சரீரம் இம் மூன்றும். சிலர் ஆவியில் நன்றாக இருப்பார்கள். ஆனால் உள்ளான ஆத்துமாவில் தவறு செய்துகொண்டிருப்பார்கள் அல்லது சரீரத்தில் தேவனுக்கு விரோதமான காரியங்களில் ஈடுபட்டுக்கொண்டிருப்பார்கள். நீங்கள் ஒரு ஆவிக்குரிய கிறிஸ்தவராயிருப்பீர்களானால் இம்மூன்றிலும் குற்றமற்றவர்களாக இருந்துகொண்டு இவ்வுலகத்தில் வாழவேண்டியவர்களாயிருக்கிறீர்கள். எவ்வளவு காலமென்றால்; கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்வரை அல்லது உங்களுடைய மரணபரியந்தமும் நீங்கள் குற்றமற்றவர்களாக வாழவேண்டும். உங்களை குற்றப்படுத்தும்படியாக பிசாசும், அவனுடைய கூட்டாளிகளும் ஆயத்தமாயிருக்கிறார்கள் என்பதை அறிந்துகொள்ளுங்கள். ஆகையால் " **யாருவரோடும் சமாதானமாயிருக்கவும், பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள்; பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே** " (எபி.12:14). ஒருமுறை கர்த்தர் நம்முடைய பாவத்தை மன்னித்து ஏற்றுக்கொள்ளுகிறார். எப்பொழுது என்றால்; நாம் மனந்திரும்பி, கர்த்தராகிய இயேசுவை தேவனுடைய குமாரன் என்று வாயினாலே அறிக்கையிட்டு, தண்ணீரில் முழ்கி ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும்போது கர்த்தரால் அவருடைய சபையில் சேர்க்கப்படுகிறோம். மேலும், கிறிஸ்தவர்கள் என்ற நாமத்திற்கு சொந்தக்காரர்களாகவும் மாறுகிறோம்.

மேலும், ஒவ்வொருவரும் நீதியின் கனிகளைக் கொடுக்க பவுல்

வேண்டுவதாக சொல்லுகிறார். " நான் பிரதானமாய் சொல்லுகிற புத்தியென்ன வெனில், எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்கலளையும் ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும் " (1தீமோ. 2 ; 2). ஒரு சபையின் வளர்ச்சிக்கு அந்த சபையினுடைய போதகன் மற்றும் சுவிசேஷகர்களுடைய விண்ணப்பம் மிகவும் முக்கியமானதாயிருக்கிறது. ஜெபமில்லாத இடம் கூரையில்லாத இடத்தைப் போன்றது. ஜெபம் நம்முடைய விசுவாசமாகிய தோட்டத்திற்கு வேலியைப்போன்றது. அதனால் நாம் பாது காக்கப்படுகிறோம். மற்றவர்கள் இரட்சிக்கப்படவும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவில் தேர்ச்சியடையவும், அவர்கள் நீதிக்குரிய கனி களைக் கொடுக்கவும் அவர்களுக்காக ஜெபிக்கவேண்டும். பொதுவாக தனக்கா கவும் தன்னுடைய ஜனங்களுக்காகவுமே அதிகமாக ஜெபிப்பார்கள். மேற்கண்ட வசனத்தில் பவுல் எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பம் பண்ணவேண்மென குறிப்பிடுகிறார். ஆண்டவர் இயேசு உலகத்தை இரட்சிக்கும்படியாக சிலுவையில் பாடுபட்டார். ஒரு குறிப்பிட்ட ஜனங்களை மட்டும் இரட்சிக்கும்படியாக அல்ல. அநேகர் யூதர்களை இரட்சிக்கும்படியாக யூதர்களுக்காக கிறிஸ்து வந்தார். அவர் யூத மதத்தை சார்ந்தவர் என நினைக்கின்றனர். அப்படியல்ல உலகத்தையே இரட்சிக்கும்படியாக பிதாவாகிய தேவன் அவரை உலக ரட்சகராக அனுப்பினார். ஒருவரும் கெட்டுப்போவது பிதாவின் சித்தமல்ல. எல்லோரும் இரட்சிக்கப்படவேண்மென அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்.

மேலும் பவுல் எழுதும்போது; " அவர் உங்களுக்குப் பிரகாசமுள்ள மனக் கண்களைக் கொடுக்கவேண்டுமென வேண்டிக்கொள்ளுகிறேன் " என்கிறார் (எபே.1:19). ஆம், இந்தக் காரியங்களை அறிந்துகொள்வதற்கு ஒருவருக்கு பிரகாசமுள்ள மனக்கண்கள் வேண்டும். ஏனெனில், இவைகளைப் பார்க்கக் கூடாதபடி இவ்வுலகத்தின் பிசாசு அவர்களுடைய மனக்கண்களை குருடாக்கி வைத்திருக்கிறான். அப்படிப்பட்டவர்களுக்கு நாம் சாந்தமாய் உபதேசிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். தேவன் அவர்களுக்கு இவைகளைப் பார்க் கக்கூடிய மனக்கண்களை கொடுக்கவேண்டுமென நாமும் பிதாவை நோக்கி வேண்டிக் கொள்ளவேண்டியவர்களாயிருக்கிறோம். இயேசு கிறிஸ்துவின் மூலமாக வரக்கூடிய இந்த நீதியின் கனிகளை நீ பெற்றுக் கொண்டாயா? அவைகள் உன் ஆவி ஆத்துமா சரீரம் குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப் படுவதற்கு உதவியாயிருக்கும். அவைகளால் நீ நிறைந்து காணப்படும்போது; தேவனுடைய மெய்யான ஆசீர்வாதத்தை நீ பெறமுடியும். அது உன்னை நித்தியத்திற்கு வழிநடத்தும். இன்றே இயேசுவின் மூலமாக வருகின்ற நீதியின் கனிகளை உன்னில் பெற்று தேவனுக்கு ஏற்ற மகனாக, மகளாக வாழும்படி உன்னை ஒப்புக்கொடு.

கிறிஸ்துவினுடையவர்கள் தங்களுக்கு வரக்கூடிய இச்சையை எப்படி மேற்கொள்ளுகிறார்கள்? இன்றைக்கு தங்களுக்கு வரக்கூடிய இச்சைகளை மேற்கொள்ள முடியாமல் அநேகர் அதற்கு மயங்கி தங்களுடைய வாழ்க்கையைப் பாவத்திற்கு விற்றுப்போடுகிறார்கள். இதனால் பாவம் அவர்களை ஆட்கொண்டு முடிவில் மரணத்தை சந்திக்கிறார்கள். ஆனால், இயேசுவின் இரத்தத்தால் கழுவப் பட்டவர்கள் " தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள் " (கலா.5:24). ஆனபடியால், அவர்களால் பாவத்தை ஜெயிக்கமுடிகிறது. மேலும், அவர்கள் கிறிஸ்துவுக்குள் இருக்கிறார்கள். கிறிஸ்து அவர்களோடிருக்கிறார். அவர் இல்லாமல் ஒரு காரியத்தையும் ஒருவராலும் செய்யமுடியாது என்பதை அறிந்து கொள்ளுங்கள். நீங்கள் ஒரு கிறிஸ்தவரா? ஆவிக்குரிய கனிகள் உங்களிடம் காணப்படுகிறதா? இவைகளைப் பெற்றுக்கொள்ள உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

✝

## கிறிஸ்துவின் சபை, புதிய ஏற்பாட்டு சபை என்பதற்கான 5 காரணங்கள்

- இதற்கென்று கொள்கைப் புத்தகம் எதுவும் கிடையாது, இதன் அங்கத்தினர்கள் கிறிஸ்துவின் பெயரைத்தான் தரித்திருக்கிறார்கள் ( I பேதுரு 4 : 16 ; அப்போஸ்தலர் 11 : 26)
- கிறிஸ்துவின் சபை வேதாகமம் எங்கே பேசுகிறதோ அங்கே பேசுகிறது; வேதாகமம் எங்கே மௌனமாயிருக்கிறதோ அங்கே மௌனமாயிருக்கிறது (I பேதுரு 4 : 11)
- கிறிஸ்துவின் சபை கிறிஸ்துவை மாத்திரம் சபைக்குத் தலையாக உயர்த்திக் காட்டுகிறது (கொலோ 1 : 18)
- கிறிஸ்துவின் சபையின் ஆராதனை முறைமை புதிய ஏற்பாட்டு மாதிரியை கொண்டு தான் அமைந்திருக்கிறது ( யோவான் 4 : 24; அப்போஸ்தலர் 20 : 7; எபேசியர் 5 : 19; I கொரிந்தியர் 16 : 2; அப்போஸ்தலர் 2 : 42)
- கிறிஸ்துவின் சபை சமரசம் இல்லாமல் ஆவிக்குரிய ஒற்றுமை சாத்தியம் என்று போதிக்கிறது (I கொரிந்தியர் 1 : 10; யோவான் 17 : 21)

# நீங்களே தீர்ப்பளியுங்கள்

## You Yourself Judge

Bro. E.Z. Selvanayagam

தற்காலத்தில் செய்தித்தாள்களைத் திறந்தால் முதலில் நம்முடைய கண்களில் படுவது, " கட்சியில் பிளவு " கட்சியை உடைக்கக் கோடிக்கணக்கான பணம் கைமாறியது " என்பன போன்ற செய்திகள் தான். இது ஏதோ புதுமை என்று திகைக்காதீர்கள். சாத்தான் நீண்ட நாட்களாகவே இப்போர்முறையை பயன்படுத்தி, இயேசுகிறிஸ்து தம் சொந்த இரத்தத்தைச் சிந்திக் கட்டிய (மத் 16 : 18) தம் சரீரமாகிய சபையை சின்னாப்பின்ன படுத்தி மகிழ்ந்து கொண்டிருக்கிறான் . அதன் சிறப்பு அம்சம் என்னவென்றால், அவர் பெயரால் இயங்குகின்ற ஸ்தாபனங்களையும், நபர்களையும் கொண்டே இக்காரியத்தை இலாவகமாகச் செய்து விடுகிறான்.

அநீதத்தின் கூலிக்கு ஆசைப்பட்டு மோசம் போன இந்த நபர்கள் அப்போஸ்தலருடைய உபதேசங்களைத் திரித்தும், சிதைத்தும், நீட்டியும் , குறுக்கியும் மக்களுக்கு விநியோகித்து குழப்பமுண்டாக்குகின்றார்கள். அவைகளில் சிலவற்றை உங்கள் முன்வைக்கிறோம் , நீங்களே தீர்ப்பு கூறுங்கள்.

அற்புத அடையாளங்கள் நடைபெற்றன என்று கூறும் அதே வேதாகமம், அது ஒருகுறிப்பிட்ட கால கட்டத்தில் முடிந்து போயிற்று என்றும் கூறுகிறது. அற்புத அடையாளங்கள் நடைபெற்றன என்று ஒருவர் விசுவாசிப்பாரானால், அது முடிந்து போயிற்று என்று கூறுவதையும் விசுவாசிக்க வேண்டும் அல்லவா?

தேவன் தம் நோக்கத்தை நிறைவேற்றும்படியால், தேவைப்படும் போதும் அற்புதங்கள் செய்கிறார். நோக்கமும் தேவையும் முடிந்த பின்னர் இயற்கைச் சட்டத்துக்கு ஒப்புக்கொடுத்து விடுகிறார்.

1. தேவன் முதல் மனிதனாகிய ஆதாமை மட்டுமே அற்புதமாகப் படைத்தார். ஆனால், அதற்கு அடுத்து வந்த மனிதர் அனைவருமே இயற்கை விதிகளுக்குட் பட்டே பிறந்து வளர்ந்தனர். உங்களையே எடுத்துக் கொள்ளுங்களேன்! உங்கள் சரீரம் அற்புதமாகப் படைக்கப்பட்டதா? இல்லை தானே! அதேபோல்தான் தேவன் ஒரு காரியத்தின் ஆரம்பத்தில் செய்த அற்புதத்தைத் தொடர்ந்து செய்து கொண்டிராமல் இயற்கை விதிகளுக்கு ஒப்புக்கொடுத்து விடுகிறார்.

2. பரிசுத்த வேதாகமம் அற்புதமாய் எழுதப்பட்டது. பரிசுத்த ஆவியானவர்

துணை கொண்டு பரிசுத்த மனிதர்கள் வேதாகமத்தை அற்புதமாய் எழுதினார்கள். (II பேது 1 : 21). தாங்கள் ஒரு போதும் கற்றறியாத மொழிகளில் பிரசங்கித்தார்கள் ; தீர்க்கதரிசனம் உரைத்தார்கள். ( அப். 2 : 4 ). ஆனால், பரிசுத்த வேதாகமம் முழுமையாக எழுதப்பட்ட பிறகு அற்புதமான முறைகள் நிறுத்தப்பட்டுவிட்டன. ஏனெனில், தேவன் மனிதர்களுக்கு அளிக்க வேண்டிய அருட்செய்திகள் அனைத்தையும் பரிசுத்த வேதாகமத்தில் பொறிக்கப்பட்ட பிறகு அற்புதமான முறைகள் தேவைப்படவில்லை. (வெளி 22 : 18 - 19 ; யாக் 1 : 25) இப்பொழுது நம்மைப்போன்ற சாதாரண மனிதர்கள் முழுமையாய் எழுதி முடிக்கப்பட்ட வேதாகமத்திலிருந்து தேவனுடைய அருட்செய்திகளை மக்க ளுக்குப் போதித்து வருகின்றனர்.

ஆனால் ஒரு சிலர் தேவன் தங்களுக்கு புதிய புதிய வெளிப்பாடுகளை கொடுக்கிறார் என்று தங்கள் அபிப்பிராயங்களுக்கு தேவவாக்கு என்னும் சாயத் தைப் பூசி பாமர மக்களை ஏமாற்றுகின்றனர். ஒருநாள் ஒரு நரிக்குறவர் இனத் தைச் சேர்ந்த ஒரு நண்பர் நரிக்கொம்பு வியாபாரம் செய்து கொண்டு இருந்தார். நரிக்குக் கொம்பு இருக்கிறதா என்பது முதல் கேள்வி. இரண்டாவது, இத்தனை கொம்புகள் எப்படிக்கிடைத்தன என்று ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்த வேளை யில், அனுபவப்பட்ட (?) ஒருவர் நரிப்பல்லுக்குப் பசை போட்டு சில முடிகளைச் சுற்றிலும் ஒட்டி ஏமாற்றுகிறான் என்று உண்மையை உடைத்தார். அந்த ஆள் அவரை முறைத்துப்பார்த்து விட்டு நைசாக நழுவிவிட்டான். இந்தப் புதிய வெளிப் பாட்டுக்காரர்களைப் பார்த்தால் அவனுடைய ஞாபகம் தான் வருகிறது. இவை களையெல்லாம் தெரிந்துதான் தேவன் கூட்டாதே, குறைக்காதே என்றும் (வெளி 22 : 18 , 19) வானத்திலிருந்து வந்த தூதனாயினும் சரி, அவன் சபிக்கப்பட்டவன் என்றும் ஒன்றுக்கு இரண்டுமுறை சொல்லுகிறாரோ? (கலா 1 : 6 - 9).

3. வனாந்தர யாத்திரையின் போது நாற்பது ஆண்டு காலமாக இஸ்ரவேல் மக்கள் மன்னாவை ஆகாரமாகப் புசித்து வந்தார்கள். யாத் 16 : 35. ஆனால், அவர்கள் கானான் தேசத்துக்கு வந்து விவசாயம் செய்து முதல் பலனைப் புசிக்கத் துவங்கிய மறுநாளிலே மன்னா பெய்வது நின்றுவிட்டது (யோசுவா 5 : 12 )அவர்கள் இயற்கை நியதிக்குட்பட்டு உழைத்து விளைவித்து உண்டனர்.

4. பரிசுத்த ஆவியானவர் இயேசுவின் மேல் வந்த பொழுது புறா வடிவில் வந்தார். ( யோவான் 1 : 32 - 34 ) அவர்தான் தேவகுமாரன் என்றும் அவரே பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைக் கொடுக்கிறவர் என்றும் யோவான் ஸ்நானகனுக்குத் தெரிவிக்கவும் அது அவ்வாறு நடந்தது என்று வேதாகமம் கூறுகிறது. அந்த நோக்கம் நிறைவேறின பின்பு வேறு எவருக்கும் , ஒரு போதும் அப்படிப்பட்ட முறையில் பரிசுத்த ஆவி அருளப்படவில்லை.

பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்கள் மீது இறங்கினதைப் போல என்மீதும் இறங்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது விவேகமாகாது.

அப்போஸ்தலருக்கு மட்டுமே கொடுக்கப்பட்ட சில வாக்குத்தத்தங்கள் எனக்கும் மற்றும் இந்நாட்களில் வாழும் அனைத்து கிறிஸ்தவர்களுக்கும் பொருந்தும் என்று வாதிடுவது அறியாமை. அவர்கள் வேதாகமத்தில் உள்ள அனைத்து உண்மைகளையும் எழுதுவதற்கான கட்டளை பெற்றிருந்தார்கள் ( யோவா 16 : 13 ) அவர்களுக்குக் கட்டுதவற்கான அதிகாரமும் கட்டவிழ்ப்பதற்கான அதிகாரமும் கூட உண்டு. ( மத். 18 : 18 ). தேவன் சபையில் முதலாவதாக அப்போஸ்தலர்களை ஏற்படுத்தினார் ( 1 கொரி 12 : 28 ) அப்போஸ்தலர்கள் சபையின் அஸ்திபாரங்கள் ( எபே 2 : 20 ) அப்படி நாம் எல்லோருமே அஸ்திபாரங்களா? இல்லையே, அப்படியிருக்க அப்போஸ்தலருக்குச் சிறப்பாகக் கொடுக்கப்பட்ட சில அதிகாரங்கள் உரிமைகள் எனக்கும் ஏன் இருக்கக்கூடாது என்று வாதிடுவது பொருந்துமா? அக்கினி மயமான நாவுகள் போன்ற நாவுகள் அப்போஸ்தலர்கள் ஒவ்வொருவர் மீதும் அமர்ந்தனவே (அப் 2 : 3). அதை தேவன் அவர்களுக்கு ஒரு நோக்கத்துக்காகக் கொடுத்தார் (மாற்கு 16 : 20). நாம் அதை இச்சித்து, தேவனுக்கு எரிச்சல் உண்டாகக் கூடாது.

அப்படியானால் இன்றும் அற்புத அடையாளங்கள் நடக்கிறது என்று கூறுகிறார்களே, அது எப்படி?

சாத்தான் பொய்யான அற்புதங்களைச் செய்து ஏமாற்றுவான்.

II தெசா 2 : 9-12 ல் சாத்தான் வல்லமையோடும், பொய்யான அற்புதங்களோடும் வருவான் என்று எச்சரிக்கிறது. சத்தியத்தின் மேலுள்ள அன்பை அவர்கள் அங்கீகரியாமற் போனபடியால் சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாகக் கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்குள் அனுப்புவார் என்று கூறுகிறது. மேலும், வெளி 13 : 13 ல் அன்றியும் அது மனுஷருக்கு முன்பாக வானத்திலிருந்து பூமியின் மேல் அக்கினியை இறங்கப் பண்ணத்தக்கதாக பெரிய அற்புதங்களை நடப்பிப்பார்கள் என்று கூறுகிறது. மத் 7 : 22 ல் கூட இக்கள்ளத் தீர்க்கதரிசிகள்' 'உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புத அடையாளங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள் என்றும் அவர்களை ஆண்டவர் ' <u>அக்கிரமச் செய்கைக்காரரே</u> ' என்று பட்டம் சூட்டி விரட்டித் துரத்தி விடுவார் என்றும் வாசிக்கிறோம். II கொரி 11 : 13 - 15 வசனப் பகுதியில் அப்படிப்பட்டவர்களை கள்ள அப்போஸ்தலர்கள், கபடமுள்ள வேலையாட்கள்; கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலரின் வேஷத்தைத்

தரித்துக் கொண்டவர்களாயிருக்கிறார்கள். அது ஆச்சரியமல்லவே. சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக் கொள்வானே, ஆகையால், அவனுடைய ஊழியக்காரரும் நீதியின் ஊழியக்காரருடைய வேஷத்தைத் தரித்துக்கொண்டால் அது ஆச்சரியமல்லவே. அவர்கள் முடிவு அவர்களுடைய கிரியைகளுக்குத் தக்கதாக இருக்கும் என்கிறது.

அப்படியானால் அசலையும், போலியையும் எவ்வாறு அடையாளம் கண்டு கொள்வது? சோதித்துப் பார்த்து தெரிந்து கொள்ளவேண்டும் என்று வேதாகமம் ஆலோசனை கூறுகிறது. I யோவான் 4 : 1 ல் பிரியமானவர்களே, உலகத்தில் அநேகங் கள்ள தீர்க்கதரிகள் தோன்றியிருப்பதனால் நீங்கள் எல்லா ஆவி களையும் நம்பாமல் அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று 'சோதித்தறியுங்கள்' என்று கூறுகிற அறிவுரையின்படி அவர்களைச் சோதித்துப் பார்ப்பதே சிறந்தவழி. ஆறாம் வசனத்தில் அப்போஸ்தலர்கள் தேவனுடையவர் கள் என்றும், தாங்கள் எழுதிவைத்துள்ளவைகள் தேவனுடைய வசனங்கள் என்றும் தேவனை அறிந்தவன் தங்களுக்குச் செவி கொடுக்கிறான். எனவே, இதனாலே சத்திய ஆவி இன்னதென்றும், வஞ்சக ஆவி இன்னதென்றும் அறிந் திருக்கிறோம் என்றும் கூறுகிறது.

தற்காலத்தில் செய்யப்படும் அற்புத அடையாளங்கள் வேதாகம அற்புத அடையாளங்களைப் போல தெளிவும் திட்டமுமாக இல்லை.

அப் 2 : 6 , 8 - ல் பேசப்படுகிற அந்நிய மொழிகள் உண்மையாகவே ஒரு குறிபிட்ட மொழி என்று தெரிகிறது. அதை பவுலும் உறுதி செய்கிறார் (I கொரி 14 : 10 ) ஆனால், தற்காலத்தில் அந்நிய பாஷை என்ற பெயரில் தத்துபித்து என்ற உளறிக்கொண்டு, ஆவேசம் வந்தவர்கள் போல் உடம்பை அலட்டிக்கொண்டு, கூச்சல் போடுகின்றனர் I கொரி 14 : 19 - ல் அந்நிய பாஷைகளைப் பேசுவதைப் பார்க்கிலும் மற்றவர்களை உணர்த்தும்படி என் கருத்தோட ஐந்து வார்த்தை களைப் பேசுவது சிறந்தது என்ற பவுல் கூறுகிறார். ஆனால், தற்காலத்தில் அந்நிய பாஷை பேசுகிறோம் என்று சொல்லுபவர்கள் உளறலில் பெருமை பாராட்டுகிறார்கள். 1 யோவான் 4 : 6 - ன்படி அவர்கள் வஞ்சக ஆவியினால் பீடிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. தயவு செய்து அவர்களுக்காக ஜெபியுங்கள். அவர்களுக்காவும் கிறிஸ்து மரித்தாரே.

அதேபோன்று தற்கால தெய்வீக சுகம் என்பதும் வெறும் விளம்பரமே.

அப் 3 : 2 - ல் சொல்லப்பட்டிருக்கிற முடவன் யாராலும் சுகப்படுத்த முடியாத அளவுக்கு பிறவியிலேயே முடவன். அவனைப் பேதுருவும் யோவானும், அனை வரும் பார்த்துக்கொண்டிருக்கும் போதே சுகமாக்கினார்கள். அவனும் நடந்து

குதித்து நடந்து பார்ப்பவர்களை பிரமிக்க வைக்கிறான். தற்கால தெய்வீக சுகம் கொடுக்கிறோம் என்று கூறும் நபர்கள் வியாதி இருக்கிறதா? இல்லையா? என்று மக்கள் புரிந்து கொள்ள முடியாத சந்தேகக் கேசுகளைத் தெரிந்து கொண்டு பழைய ஏற்பாட்டுப் பாகால் தீர்க்கதரிசுகளைப் போல் ஆட்டம் போட்டு கூச்சல் பண்ணிக் கும்மாளம் அடித்து, ரகளை பண்ணி புறவினத்தார் கிறிஸ்துமேலே கொண்டிருக்கிற கொஞ்சம் நஞ்சம் மரியாதையையும் கெடுத்து வருகிறார்கள். அப்போஸ்தலர்கள் வியாதிகளைச் சுகப்படுத்தின பொழுது எதிரிகள் கூட மறுத்துப் பேசமுடியவில்லை. (அப். 4 : 16) என்பதை வாசித்துப் பார்த்து இவர்களை அடை யாளம் கண்டு கொள்ளுங்கள்.

மேலும், அப்போஸ்தலர்கள் தங்களிடத்தில் கொண்டு வரப்பட்ட அனைத்து நோயாளிகளையும் சுகப்படுத்தினார்கள் அப் 5 : 6 , ஆனால், தற்காலத்தில் இந்தப் பேர்வழிகள் கும்பகோணத்தில் கூட்டம் போட்டுக் கோயமுத்தூரில் சுகம டைந்தவர்களைப் பற்றிச் சொல்லுவார்கள். சேலத்தில் கூட்டம் போட்டு செங்கல் பட்டில் சுகமடைந்தவர்களின் பட்டியலை வாசிப்பார்கள். பல கூட்டங்களுக்கு வந்து கொண்டேயிருக்கிறேன் ; எனக்கு இன்னம் சுகம் கிடைக்கவில்லையே' என்று ஏக்கத்தோடு கேட்கும் ஏழையைப் பார்த்து, " உனக்கு விசுவாசம் இல்லை அதனால் சுகம் கிடைக்கவில்லை" என்று பழிபோட்டுவிடுவார்கள் அல்லது சுகம் மெல்லத்தான் ஆகும் என்று மழுப்புவார்கள். எங்கள் பாஸ்டருக்கு ஆண்டவர் டெலிபோன் பேசுவார். அதுவரையிலும் நீ உபவாசம் இருந்து ஜெபம்பண்ணு ; சுகம் கிடைத்தால் எங்கள் பத்திரிகையில் சாட்சி எழுதுவேன் என்று பொருத்தனை பண்ணிக்கொள் என்று பேரம் பேசுவார்கள். பிரேதக்குழியில் கிடந்த லாசருக்கு எந்த விசுவாசம் இருந்தது? என்று கேட்கத் தெரியாத அப்பாவி மக்களிடம் தானே, இவர்கள் வியாபாரம் எல்லாம். ( யோவான் 11 : 39 - 44 ). நாங்கள் அப்போஸ்தலர்களைவிட ஒன்றும் குறைந்தவர்கள் இல்லை, என்று வீராப்புக் பேசும் இந்த நண்பர்கள் அப்போஸ்தலர்களைப் போல மரித்தவர்களை எழுப்பு வார்களா? (அப் 20 : 10 ,12) கொடிய விஷ ஜந்து தீண்டினாலும் மரிக்காமல் இருப் பார்களா? (அப் 28 : 3 - 6) நீர் மேல் நடப்பார்களா? (மத் 14 : 29) மாட்டார்கள். ஏனெனில், அவர்களால் முடியாது. ஏன் முடியவில்லை? ஏனெனில் அவைகள் என்ன நோக்கத்துக்காகக் கொடுக்கப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேறி விட்டது (மாற்கு 16 : 20) இனிமேல் 20 நூற்றாண்டுக்கு பிறகு இவர்கள் எதை உறுதி செய்ய இப்படி அலட்டிக் கொள்கிறார்களோ தெரியவில்லை. அப்படிப்பட்ட மக்களைக் கண்டால் வெறுத்து ஒதுக்காதீர்கள். அது அவர்களுடைய குற்ற மன்று ; அந்த பொல்லாத பிசாசு–தேவனுக்கும் மனுஷனுக்கும் சத்துரு அவர்களுடைய மனதைக் குருடாக்கிவிட்டான்.(II கொரி 4 : 4 ) அவர்களுக்கு பிரகாசமான மனக் கண்களைக் கொடுக்கும்படி பிதாவினிடம் வேண்டிக் கொள்ளுங்கள் (எபே 1 : 19).

✠

# கிறிஸ்துவின் சிந்தை உடையவர்களாயிருப்போம்

# LET US HAVE HIS MIND OF CHRIST

Benny Martin

இந்த உலகத்திலே நாம் எல்லா வகையான பிரச்சனைகளையும் நாம் பார்க்கி றோம். உதாரணமாக, பகை, போர், கொலைகள், கருக்கலைப்பு, பாலியல் பலாத்காரங்கள், சமுதாயப் பின்னணி, மதப் பின்னணி மற்றும் பதவிப் பின்ன ணியை அடிப்படையாக வைத்து பட்சாதாபம் காட்டுதல், வியாபா ரங்களில் ஏமாற்று, மோசடி, திருட்டுப் போன்ற காரியங்கள் இந்த உலகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இது போன்ற காரியங்கள் நம்மை அதிகமாக துக்கப்படுத் துகின்றன. இவைகளின் முடிவைக்காண நாம் விரும்பு கிறோம். ஒருவேளை நாம் இந்த உலகத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கும் காரியங்களைப் போல நம் கிறிஸ்தவர்கள் மத்தியில் நடைபெறுவதில்லை என்று நினைக்கத் தோன்றும் ஆனால், இதைப்பற்றி நீங்கள் ஆழமாக சிந்தித்துப்பார்க்க வேண்டும் என்று உங்களை நான் கேட்கிறேன். உலகம் முழுவதையும் நாம் பார்க்கும் போது கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாகிய சபையை பிரிவினை, மாய்மாலம், கள்ள உபதேசங்கள், கிறிஸ்தவர்கள் உலகத்தாரைப் போன்று வாழ்க்கை நடத்துதல், பொய், ஏமாற்று, சபை காரியங்களில் ஈடுபாடின்மை போன்ற காரியங்கள் சீரழித்து வருகின்றன. மேலும், இன்றைய நாட்களில் அநேக கிறிஸ்தவர்கள் இல்லங்களில் வேத வாசிப்பும், ஜெபமும் கிடையாது. அதுமாத்திரமல்லாமல், கிறிஸ்தவர்கள் அனுதினமும் தங்கள் குழந்தைகளுக்கு வேதாகமத்தைப் போதிப்பதில்லை. இன்னும் அநேக கிறிஸ்தவர்கள் தேவனையும், அவருடைய ராஜ்யத்தையும் விட அதிகமாக உலகப் பொருள்களை நேசிப்பதும், தேவனுடைய ராஜ்யம் விரிவடைவதற்காக கொடுக்க வேண்டிய அளவிற்கு காணிக்கைகளைக் கொடுக்காமல் இருப்பதுமாய் இருக்கிறார்கள்.

கிறிஸ்தவர்கள் மத்தியில் நடைபெறும் இதுபோன்ற காரியங்கள் நம்மை அதிகமாக துக்கப்படுத்த வேண்டும். சபையிலே இதுபோன்ற காரியங்களைக் களைந்தெறிய நாம் பாடுபட வேண்டும். இதுபோன்ற பிரச்சனைகள்

உலகத்திலும், சபையிலும் ஏன் காணப்படுகின்றன? அநேகப் பிரச்சனைகள் ஜனங்கள் சரியாக சிந்திக்காமல் இருப்பதால் தான் ஏற்படுகின்றன. நாம் எப்படிப் சிந்தையுடையவர்களாய் இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறாரோ அப்படி சிந்தியாமல் இருப்பதால் அநேக பிரச்சனைகளை நாம் சந்திக்கிறோம்.

உலகத்தில் இருப்பவர்கள் மாம்சப்பிரகாரமாக சிந்திக்கிறார்கள். இன்றைய நாட்களில் அநேக விசுவாசிகள் உலகத்தில் உள்ளவர்களைப் போல் சிந்திக்கிறார்கள். அநேக கிறிஸ்தவர்கள் " எல்லோரும் இப்படித்தான் நினைக்கிறார்கள், சொல்கிறார்கள், செய்கிறார்கள் " என்றெல்லாம் பேசக் கேட்டிருக்கிறோம். பிரியமான வாலிப நெஞ்சங்களே! தேவன் நாம் இப்படித்தான் சிந்திக்க, பேச, செயல்பட வேண்டும் என்று விரும்புகிறாரா? இந்தக் கேள்விகளுக்கு வேதவசனங்களின் துணை கொண்டு நான் பதிலளிக்க விரும்புகிறேன். ரோமர் 12 : 2ல் " நீங்கள் இப்பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய பரிபூரண சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமா குங்கள் " என்று நாம் வாசிக்கிறோம். அதாவது, தேவன் நாம் இந்த உலகத்தின் மக்களிலிருந்து வித்தியாசமாயிருக்க வேண்டும் என்று விரும்புகிறார். நாம் இந்த உலகத்திலிருந்து வித்தியாசமாயிருக்க வேண்டும் என்றால் நீங்களும், நானும் வித்தியாசமாயிருக்க வேண்டும். நாம் உயிர்வாழ தேவன் இந்த உலகத்தைத்தான் நமக்குத் தந்திருக்கிறார் ஆயினும், நாம் " கிறிஸ்தவர்கள் " என்ற தனித்தன்மையை இந்த உலகத்தில் பதிக்க வேண்டும். இது நாம் கிறிஸ்துவின் சிந்தையை உடையவர்களாய் இருந்தால் சாத்தியமாகும். பிலிப்பியர் 2 : 5ல் " கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது " என்று வாசிக்கிறோம். இதன் அர்த்தம் என்னவென்றால், நாம் கிறிஸ்துவைப் போலவே சிந்திக்க வேண்டும். அவருடைய மனப்பான்மையைக் கொண்டிருக்க வேண்டும். அவருடைய உணர்வுகளைக் கொண்டிருக்க வேண்டும். அவரைப் போலவே நோக்கம் உடையவர்களாய் இருக்க வேண்டும். இது தேவனிடத்திலிருந்து நமக்கான கட்டளையாயிருக்கிறது.

**கிறிஸ்துவின் சிந்தையை எப்படி வளர்த்துக் கொள்வது?**

முதலாவது, கிறிஸ்துவைப்போல சிந்திக்க நமக்குத் தீவிரமான, உண்மையான ஆசை இருக்க வேண்டும், நம்முடைய மனதை நாம் அடக்க வேண்டும். அவருடைய வார்த்தைகளை நாம் படிக்க வேண்டும், தியானிக்க வேண்டும், நம் மனதை இயேசுவின் வார்த்தைகளால் நிரப்ப வேண்டும். சரி, அடுத்ததாக கிறிஸ்துவின் சிந்தையின் தன்மைகளைப் பார்ப்போம்.

**I தாழ்மை :**

அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக்

கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார் ( பிலிப்பியர் 2 : 6, 7 ). நம்முடைய அருமை இரட்சகராகிய இயேசு கிறிஸ்து தாழ்மைக்கு சிறந்த முன் மாதிரியாக இருக்கிறார். பெருமையும், கர்வமும் பிடித்த இந்த உலகத்தில் ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தாவுமாகிய இயேசு தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலானார். நாமெல்லாரும் இயேசு கிறிஸ்துவின் மாதிரியைப் பின்பற்ற கட்டளைப்பெற்றிருக்கிறோம். இந்த பெருமையானது கர்த்தர் வெறுக்கும் காரியங்களில் ஒன்றாக இருக்கிறது. மனமேட்டிமையுள்ளவனெவனும் கர்த்தருக்கு அருவருப்பானவன் என்று நீதிமொழிகள் 16 : 5ல் நாம் வாசிக்கிறோம்.

வேதாகமத்தில் தேவனுக்கு விரோதமாகப் பெருமை பாராட்டியவர்கள் ஒன்று மில்லாமல் போயிருக்கிறார்கள். பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மை உள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார் என்பதை நாம் நன்றாக உணர்ந்து செயல்படவேண்டும். எகிப்தின் அடிமைத் தனத்திலிருந்து இஸ்ரவேல் ஜனங்களை வழிநடத்திச் சென்ற மோசே ஒரு மகாபெரிய தலைவனாயிருந்தும் தன்னை முற்றிலுமாக தாழ்த்தினான் என்று பார்க்கிறோம். எண்ணாகமம் 12 : 3ல் மோசேயானவன் பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்தகுணமுள்ளவனாயிருந்தான் என்று நாம் வாசிக்கிறோம். எனவே, நாம் ஏற்ற காலத்திலே தேவன் நம்மை உயர்த்தும் படிக்கு அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருக்க வேண்டும்.

II **அன்பு :**

" அன்பில்லாதவன் தேவனை அறியான்; தேவன் அன்பாகவே இருக்கிறார் " (1யோவான் 4 : 8). அன்பான தேவனை பெற்றுக் கொண்டிருக்கிற நாம் அன் பிலே குறைவுள்ளவர்களாயிருக்கிறோம். முன்பு ஒரு காலத்தில் கிறிஸ்தவர்கள் அன்புக்கு பேர்போனவர்கள், நான் முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருக்கிறேன். ஆதிக் கிறிஸ்தவர்கள் தங்கள் நிலங் கள், உடைமைகளையெல்லாம் விற்று இல்லாதவர்களுக்கு கொடுத்து உதவி செய்தார்கள், எனவே, சகோதரர்கள் மத்தியில் சமத்துவம் ஏற்பட்டது. ஆனால், இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்கள் மத்தியில் அன்புக்கு மிகப்பெரிய குறைச்சல் ஏற்பட்டுள்ளது. கிறிஸ்து எவ்வளவு அன்பும் மனதுருக்கமும் உடைய வராக இருந்தார். எனவே, கிறிஸ்துவை பின்பற்றுகிறோம் என்று சொல்லிக் கொண்டு அன்பில்லாமல் இருந்தால் அப்படிச் செய்வது வீணான காரியமாகும். யோவான் 13 : 34, 35 வசனங்களில் இயேசு " நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும்

ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன் நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர் களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்து கொள்வார்கள் என்றார். " நாம் மற்றவர்களிடம் அன்பு செலுத்து வதினால் கிறிஸ்துவின் நாமத்தை நிச்சயமாகவே மகிமைப்படுத்த முடியும். இந்த உலகமானது கிறிஸ்தவர்களிடமிருந்து அதிகமான காரியங்களை எதிர் பார்க்கிறது. ஏதோ ஒரு தவறான காரியத்தை கிறிஸ்தவர்கள் செய்துவிட்டால் இவர்களா இப்படிச் செய்தார்கள் என்று ஆச்சரியத்தோடு கேட்பதுண்டு. ஏனென்றால், கிறிஸ்துவைப்பற்றியும், கிறிஸ்துவின் போதனைகளைப் பற்றியும் உலகத்தாருக்குக்கூட ஓரளவு தெரியும் எனவேதான், நம்மிடமிருந்து நற்குணங்களை அவர்கள் அதிகமாக எதிர்பார்ப்பார்கள். எனவே தான், கிறிஸ்தவர்களாகிய நாம் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால் நாம் கிறிஸ்துவின் சீஷர்களென்று இந்த உலகம் அறிந்து கொள்ளும். அதினால் தேவனுடைய நாமம் மகிமைப்படும். ஆவியின் கனியைக் கொடுக்க கிறிஸ்தவர்களாகிய நாம் கடமைப்பட்டிருக்கிறோம். ஆவியின் கனியில் அன்புதான் முதலிடத்தைப் பிடிக்கிறது. அன்பானது, எல்லா நற்காரி யங்களுக்கும் ஊற்றும், உறைவிடமுமாயிருக்கிறது. நாம் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கும்போது மற்றவர்களுடைய தப்பிதங்களை நாம் மன்னிக்கும் குணாதிசயத்தை உடையவர்களாய் காணப்படுவோம். இது தேவன் நம்முடைய தப்பிதங்களை மன்னிக்க வகைச் செய்யும், அது மாத்திரமல்ல, நாம் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கும்போது நிச்சயமாகவே நாம் தேவனிடத்தில் அன்பு கூறுவோம். அப்போது அவருடைய கற்பனைகளையும் கைக்கொள்ளு வோம். தேவன் நாம் இந்த உலகத்தாரை விட வித்தியாசமாயிருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். எனவே, உலகத்திலும், சபையிலும் ஏற்படும் பிரச்சனைளைத் தவிர்க்க நாம் கிறிஸ்துவின் சிந்தையை உடையவர்களாய் காணப்படுவோம், கிறிஸ்தவர்களாய் இருந்து உலகத்திலே ஒரு தாக்கத்தை ஏற்படுத்துவோம். தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்துவோம் கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக ஆமென்!

✝

**ஒளி**

ஓர் நொடிக்கு 186000 மைல் வேகத்தில் பயணிக்கிறது, ஆவிக்குரிய ஒளி மனதுக்குள் அதைவிட வேகமாகப் பயணிக்க முடியும். ஆனால், அடைக்கப்பட்ட மனதுக்குள் ஆவிக்குரிய ஒளியால் பயணிக்க முடியாது.

# "தேவன் சட்டத்தின்படி நடக்க எதிர்பார்ப்பவரல்ல !"

# GOD IS NOT A LEGALIST !

Betty Burton Choate

**வே**தாகம உபதேசங்க ளுக்குப் பலர் தங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்கிறார்கள். தேவன் பிரமா ணங்களை நாம் அப்படியே கடை பிடிக்க வேண்டுமென்று விரும்பு பவரல்ல. அவர் ஞானஸ்நானம் போன்ற காரியங்களுக்கு முக்கியத் துவம் கொடுப்பவரல்ல! பாவமன் னிப்புக்காக முழுக்கு ஸ்நானம் பெற்றவர்கள் மாத்திரம் இரட்சிக் கப்படுவார்கள் என்று என்னை உங்களால் நம்பவைக்க முடியாது என்றெல்லாம் கூறுகிறார்கள்.

எங்களுக்குத் தெரிந்த எத்த னையோ நல்லவர்கள், தேவ னுக்குப் பயந்தவர்கள் ஞானஸ் நானம் பெறாதவர்களாயிருக் கிறார்கள். பல நூற்றாண்டுகளாக தேவன் பேரிலுள்ள விசுவா சத்திற்காக, மரித்தவர்கள் தெளிப்பு ஞானஸ்நானம் மட்டுமே பெற்றார் கள். ஏனென்றால், அவர்களுக்கு அது மாத்திரமே போதிக்கப்பட்டது. அப்படிப்பட்டவர்கள் இழந்துபோயி ருக்கிறார்கள் என்று சொல்வதை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது. அவர்களுடைய விசுவா சமும் அன்பும் இன்றைய மக்க ளைவிட அதிகமாகத்தான் இருந்தது. தேவனுக்கான அர்ப்பணிப்போடு ஒப்பிடும்போது ஞானஸ்நானம் போன்ற காரியங்கள் எல்லாம் முக்கியமானதல்ல என்கிறார்கள்.

தேவனுக்கு நம் இருதயங்கள் தான் தேவை. அற்பமான இந்த பிரமாணங்களையெல்லாம் அவர் கண்டுகொள்வதேயில்லை. இப்பிரமாணங்களைக் கொண்டு நீங்கள் ஒவ்வொருவரையும் கட்டுப்படுத்தப் பார்க்கிறீர்கள் என்றும் கூறுகிறார்கள்.

**மனித காரணகாரியங்கள், மனித நியாயம்**

தேவனுடைய சித்தத்தை திரித்துப் பேச மனிதனுக்கு யார் உரிமையைக் கொடுத்தது? ஆம்,

ஞானஸ்நானம் நமக்கு அற்பமாகத் தெரியலாம். ஏனென்றால், அது செய்யப்படுவதற்கு எளிதானதும், நம்மிடமிருந்து குறைவானதை எதிர்பார்க்கிறதுமாயிருக்கிறது.

ஒருவேளை பாவமன்னிப் புக்கென்று இவைகளையெல்லாம் செய்யவேண்டுமென்று தேவன் பெரிய காரியங்களைச் சொல்லியி ருந்தால் எப்படி இருக்கும். " பாவத்தின் சம்பளம் மரணம் ". எனவே, ஒருவர் தானாகவே முன் வந்து தன்னைத் தாழ்த்தி, மரிப்பதற்கு ஒப்புக்கொடுத் தால் " அவன் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளத்தக்க தாக அவனை நான் உயிரோடு எழுப்பு வேன், அப்போது நான் அவனை " என் கிருபையால் " மூடி அவனுடைய பாவங்களை மன்னிப்பேன்".

இன்னும் நாம் தேவனுடைய கிருபையை பெற்றுக்கொள்ளவேண் டுமென்றால், நம்முடைய சரீர மர ணத்தைக் கிரயமாக தேவன் கேட் டால், அதை நாம் அற்பமான காரிய மாக எண்ணுவோமா?. ஒருவேளை, மாற்கு 16 : 16 – " விசுவாசமுள்ளவ னாகி கொல்லப்படுபவன் இரட்சிக்கப் படுவான் " என்று சொல்லியிருந்தால் அக்கட்டளையை நாம் அற்பமான சட்டப்பூர்வ அபிப்பிராயம் என்று அதைக் கண்டுகொள்ளாமல் மனித விருப்பத்தின்படி நடந்துகொள்ளு வோமா?

நிச்சயமாக இல்லை என்பது தான் பதில். சரீர மரணம் தான் இரட் சிப்புக்கு அவசியமென்று கட்டளை யிருந்திருக்குமானால், அது மனிதன் யோசிக்கக்கூடிய மிகப்பெரிய கேள்வியாக இருந்திருக்கும். மேலும், அது கீழப்படிதலுக்கும், கீழ்ப்படி யாமைக்கும் இடையே மிகப்பெரிய எல்லைக்கோட்டை வகுத்திருக்கும். இப்படி இரண்டு எல்லைக்கோடுக ளுக்கிடையே நாம் எதைத் தெரிந்து கொள்வது என்ற நிர்பந்தமான சூழ்நி லையால் சூழப்படும்போது நாம் இரண்டில் ஒன்றைத் தான் தெரிந்து கொள்ள முடியும். நாம் நம் பாவங் களுக்காக நம் ஜீவனை கிரயமாகச் செலுத்தி இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ள முடியும் அல்லது தேவனு டைய பிரமாணங்களை அலட்சியம் செய்து இழந்து போக முடியும். இரண்டிற்கும் இடைப்பட்ட நிலை என்று எதுவும் கிடையாது. நம் ஆத்துமாவை மரணத்திற்கு ஒப்புக்கொடுத்துவிட்டு, கடைசியாக தேவனுடைய கிருபை தன்னை இரட்சிக்கும் என்று நீதிமானாகவும், அதேநேரத்தில் கீழ்ப்படியாதவ ராகவும் ஒருவர் இருக்க முடியாது.

மாற்கு 16 : 16 - விசுவா சமுள்ளவனாகி கொல்லப்படுபவன் இரட்சிக்கப்படுவான் " என்று தான் எழுதப்பட்டிருக்கவேண்டும். ஏனென் றால், மனிதர்களாகிய நாம் பாவி களாயிருக்கிறோம். அந்தப் பாவங்க ளுக்காக யாரோ ஒருவர் மரிக்க வேண்டியதாயிருந்தது. தேவனு

டைய இரக்கம் மன்னிக்க ஏங்கியது. ஆனால், அவருடைய நீதி கிருபையின் கதவுகளை அடைத்து விட்டது. அதினிமித்தம், பாவத்திற்கான விலை கொடுக்கப்பட வேண்டியதாயிருந்தது.

இதனிமித்தம், நம்முடைய பாவங்களுக்காக நாம் மரிப்பதற்கு பதிலாக இயேசு கிறிஸ்து, நமக்குப் பதிலாக அவராகவே முன்வந்து மரித்தார். தேவன் தம்முடைய சொந்த குமாரனுக்குக் கூட இரக்கம் காட்ட முன்வரவில்லை என்று நினைக்கிறீர்களா? அப்படியல்ல, நீதி அவரை இரக்கம் காட்ட விடாமல் தடுத்தது.

இயேசு, அந்த கெத்சமனே தோட்டத்தில் தம்மை முற்றிலுமாகத் தாழ்த்திக் கீழ்ப்படிந்து, அவர் நம்முடைய இடத்தில் இருந்து நமக்காகத் தன் ஜீவனைக் கொடுக்க முன்வந்த போது, அவர் அந்த வேதனைகளைச் சகித்தது போதுமானதாக இருந்ததா? அங்கே கெத்செமனே தோட்டத்தில் கிறிஸ்துவின் அர்ப்பணிப்பை மனதில் கொண்டு, தேவன் மனம்மாறி, " இப்போது நீர் மரணத்திற்கு ஆயத்தமாயிருக்கிறீர். ஆகவே, நீர் உண்மையாகவே மரிப்பது முக்கியமல்ல " என்று இயேசுவைப் பார்த்துச் சொன்னாரா? " உம் இருதயம்தான், இங்கே முக்கியம், பாவத்திற்குக் கிரயமாக உம் ஜீவனைக் கொடுக்க வேண்டியதில்லை " என்றும் தேவன் சொன்னாரா?

அப்படி எதையும் தேவன் சொல்லவில்லை. மேலும், அர்ப்பணிப்பு மாத்திரம் போதுமானதல்ல, மனிதனுடைய பாவத்திற்காக கிறிஸ்து தம் ஜீவனைக் கொடுப்பதற்கு குறைவானதொன்றும் தேவனால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

தேவனுடைய பார்வையில் ஞானஸ்நானம் அற்பமான காரியமா? இல்லை. ஏனென்றால், அது மரணத்தைப் போன்றே பெரிதானது. அது நம்முடைய ஜீவியத்தில் தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துவின் மரணத்திற்கு ஒப்பானது. தேவன் தம்முடைய நீதியில் கிறிஸ்து நமக்காக மரிப்பதற்கு தம்மைத் தாமே அர்ப்பணித்ததை மனதில் கொண்டு அவரை விட்டு விடவில்லை. தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை நமக்காகப் பலியாக்கினார். தேவன் தம்முடைய இரக்கத்தில் நாம் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கும், கிறிஸ்துவின் மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்படத் தக்கதாகவும் நமக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நாம் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிய வேண்டுமென்று தேவன் தமது பரிசுத்த எழுத்துகளில் கட்டளையிட்டிருக்கிறார்.

✞

# நம் ராஜா வருகிறார்

## *Our King is Coming*

Bobby Key

நம் கர்த்தர் மனிதர்களோடு இருந்தபோது, " நான் மறுபடியும் வருவேன் " என்று வாக்குத்தத்தம் செய்தார். கிறிஸ்து இவ்வாக்குத்தத்தத்தை உரைத்துப் பல நூற்றாண்டுகள் உருண்டோடிய பிறகும்கூட, இது பல நூற்றாண்டுகளைக் கடந்து இன்னும் நம் காதுகளில் எதிரொலித்துக் கொண்டிருக்கிறபடியால், பாடுபடும் பரிசுத்தவான்களுக்கு அது ஆறுதலாக இருக்கிறது. " கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படிக்கு ஒரேதரம் பலியிடப்பட்டு தமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார் " (எபி. 9 : 28). கிறிஸ்து, புதிய ஏற்பாட்டில் முந்நூறுக்கும் மேற்பட்ட முறை, நான் மறுபடியும் வருவேன் என்று வாக்குத்தத்தம் செய்திருக்கிறார்.

ஆம், நம் ராஜா வருகிறார். முடிசூடி ராஜரீகத்தைத் தொடங்குவதற்கல்ல, தம்முடைய ராஜரீகத்தை முடித்துக்கொண்டு தம்முடையவர்களைத் தமக்காக சேர்த்துக்கொள்ளுவதற்காக! இப்போது நாம் அவருடைய வருகையின் சில தன்மைகளைக் காணலாம்.

**வருகை மகிமை பொருந்தினதாயிருக்கும்.**

" அன்றியும் மனுஷகுமாரன் தமது மகிமை பொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது, தமது மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பார் " (மத். 25 : 31)

**வருகை திடீரென்றிருக்கும்.**

" மனுஷகுமாரன் வரும் நாளையாவது, நாழிகையையாவது நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள் " (மத். 25 : 13). " நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்; ஆதலால், நீங்களும் ஆயத்த மாயிருங்கள் " (மத். 24 : 44).

**வருகை ஆயத்தத்தின் முடிவாயிருக்கும்**

" அப்பொழுது சகல ஜனங்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப் படுவார்கள். மேய்ப்பனானவன் செம்மறியாடுகளையும், வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரிக்கிறது போல அவர்களை அவர் பிரித்து " (மத். 25 : 32). "அந்தப்படி இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள் என்றார் " (மத். 25 : 46).

**வருகை சிலருக்கு உச்சகட்ட மகிழ்ச்சியின் ஆரம்பமாயிருக்கும்.**

" அப்பொழுது ராஜா தமது வலது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து: வாருங்கள் என் பிதாவினால் ஆசிர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்கு ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற ராஜ்ஜியத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள் " என்பார் (மத். 25 : 34).

**வருகை சிலருக்கு மிகுந்த துக்கத்தின் ஆரம்பமாயிருக்கும்.**

" அப்பொழுது இடதுபக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து அவர்: சபிக்கப்பட்ட வர்களே, என்னைவிட்டு, பிசாசுக்காகவும், அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள் " என்பார் (மத். 25 : 41).

நம் ராஜா மறுபடியும் வருகிறார் !

## கர்த்தர் ஏற்கனவே அழைத்துவிட்டார்

ஞாயிற்றுக்கிழமை காலையில் ஓர் அழைப்பு வந்தது. " காலையில் அம்மாவை ஆராதனைக்குப் போக வேண்டாம் என்று சொல் நாங்கள் வருகிறோம் " என்று , ஆனால், அந்த அம்மா வேத பாட வகுப்புக்கும், ஆராதனைக்கும் சென்றுவிட்டார். அந்த அம்மாவின் மகன் வீட்டிற்கு வந்த போது, அவரை வரவேற்க வீட்டில் யாருமில்லை. அதனால் அவன் கடுங்கோபமடைந்தான். தாய் வீட்டிற்குத்திரும்பி வந்தபோது மகன் தாயைப்பார்த்து " நான் உங்களை தொலைபேசியில் அழைத்து நான் வருவதாகச் சொன்னேன் அல்லவா? ஆனால், நீங்கள் ஆராதனைக்குச் சென்று விட்டீர்கள் " என்று கோபங்கொண்டான். அதற்கு அந்த தாய், " நான் அதற்காக வருந்துகிறேன் செல்லமே, ஆனால், என் கர்த்தர் உனக்கு முன்பாகவே என்னை அழைத்து விட்டாரே " என்று பதிலளித்தாராம்.

# தேவனும், அன்பும்


## God and love

Greg Well

" எல்லாவற்றிற்கும் மேலாக ஒருவரிலொருவர் ஊக்கமான அன்புள்ளவர்களாயிருங்கள்; அன்பு திரளான பாவங்களை மூடும் " ( I போதுரு 4 ; 8) அன்பு என்பது கிறிஸ்தவ நற்பண்புகளுள் ஒன்றுமட்டுமல்ல அது கிறிஸ்தவ மார்க்கத்தின் மைய விதியாகவும் இருக்கிறது.

நம்முடைய இரட்சிப்பு கூட தேவன் இவ்வுலகத்தின் மீது வைத்த அளவற்ற அன்பின் நிமித்தமாக தம்முடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவைக் கிருபாதார பலியாக இவ்வுலகத்திற்கு அனுப்பியதால் உண்டானதுதான் தேவன் நம்மீது வைத்த அன்பின் நிமித்தமாகத்தான் நாம் நம்முடைய பாவங்களிலிருந்து மன்னிக்கப்பட்டிருக்கிறோம். இச்சத்தியம் வேதவாக்கியங்களில் மறுபடியும் மறுபடியும் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. இதுவே நம் இரட்சிப்பின் இறுதி உறுதியாயிருக்கிறது.

தேவன் அன்பாகவே இருக்கிறார். தேவபக்தியாயிருப்பதென்று நம் ஒவ்வொரு நோக்கத்தையும் விருப்பத்தையும் இயக்குகிற அவருடைய அன்புடன் சிந்திப்பதும் செயல்படுவதுமாயிருக்கிறது. தேவனுடைய பிரமாணம் இரண்டு கட்டளைகளில் இருக்கிறது. தேவனிடத்தில் அன்புகூரவேண்டும் ; தேவனிடத்தில் ஒருவரிலொருவர் அன்புகூரவேண்டும்.



மனிதர்கள் எல்லோரும் மரிக்கக்கூடியவர்கள். பாவம் செய்வதற்கு ஏதுவானவர்கள். நாம் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்யத் தவறுகிறோம் நாம் செய்யக்கூடாத காரியங்களை தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறோம்.

நம்முடைய திரளான பாவங்களுக்கு அப்பால் நம் மனிதத் தன்மை நம் புரிந்து கொள்ளுதலுக்கு எல்லை வகுத்து நம்மை நேர்மையான பாதையில் வழி நடத்தினாலும் பல தவறுகளை செய்து விடுகிறோம்.

நாம் தொடர்ந்து நம்முடைய பாவங்களிலிருந்தும் தோல்விகளிலிருந்துதும் மன்னிப்பைப்பெற தேவனுடைய அன்பை சார்ந்திருக்கிறோம்.

அதுபோலவே, தேவனுடைய அன்பு நம்மைச் சுற்றிலும் இருக்கிற வர்களை மன்னித்து. அவர்களுடைய குறைகளை மூடத்தக்கதாக வழி நடத்த வேண்டும். நம் ஒவ்வொருவரிடத்திலும் நிறைய குற்றங்கள் தவறுகள் உண்டு. எனவே, நாம் ஒவ்வொருவரும் எல்லோருக்காகவும் கிருபையை நாடுகிறவர்களாக இருக்கவேண்டும். ✝

---

# இது எப்படி?

ஒரு நாள் பள்ளிக்கூடத்திலிருந்து ஒரு சிறு பெண் வீட்டிற்கு திரும்பி வந்து தன் அம்மாவைப் பார்த்து, " அம்மா, இன்று நான் பள்ளியில் செய்யாத ஒன்றுக்காக தண்டிக்கப்பட்டேன் " என்று சொன்னாள்.

அப்பெண்ணின் தாய் ஆச்சரியத்துடன், '' இது பயங்கரமாயிருக்கிறதே! இதைக்குறித்து உன் ஆசிரியரிடம் நான் கேட்கப்போகிறேன். நீ செய்யாத ஒன்று எது? என்று கேட்டார். அதற்கு அச்சிறு பெண் வீட்டுப்பாடம் ( Home work ) என்றாளாம்.

---

குமார் தன் நண்பன் மணியிடம் எடை குறைப்பதற்காக 100 ரூபாய் கொடுத்து வாங்கிய புத்தகத்தைக் குறித்து பேசிக்கொண்டிருந்தான். அப்போது மணி குமாரைப் பார்த்து " நீ எவ்வளவு இழந்திருக்கிறாய் ? " என்று கேட்டான். அதற்கு குமார் " 100 ரூபாய் " என்று சொன்னான்.

# தேவனை விசுவாசிப்பது மட்டும் போதுமானதல்ல

# Belief In God Is Not Enough

Kyle Butt

தேவன் உண்டென்று விசுவாசிக்கவில்லையென்றால் பரலோகம் போவது கூடாத காரியம் ( எபிரெயர் 11:6). தேவன் இருக்கிறார் என்னும் உண்மையை மனதளவில் ஏற்றுக் கொள்வது மாத்திரம் ஒருவருடைய ஆத்துமாவை இரட்சிக்கப் போதுமானதல்ல. உண்மையில் சொல்லப்போனால், யாக்கோபு புத்தகம்: " தேவன் ஒருவர் உண்டென்று விசுவாசிக்கிறாய் அப்படிச்செய்கிறது நல்லது தான்; பிசாசுகளும் விசுவாசித்து, நடுங்குகின்றன " என்று சொல்கிறது (யாக். 2:19).

ஒருவர் தேவன் இருக்கிறார் என்பதை நிரூபிக்கத் தாராளமாக, ஏராளமாக இருக்கும் ஆதாரங்களை ஆராய்ந்து பார்க்கும் போது, அவர் அந்த விசுவாசத்தை ஆசையாகத் தொடர்ந்து, சிருஷ்டிகருக்குக் கீழ்ப்படியத் தீர்மானிக்க வேண்டும். எங்கள் அலுவலகத்திற்கு வந்த ஒரு இமெயில் இக்கருத்தை நன்றாக விளக்குகிறது. தேவன் இருக்கிறார் என்பதற்கு ஆதரவாக நாங்கள் எழுதிய ஒரு கட்டுரையை வாசித்த பின் ஒருவர் எங்களுக்கு இப்படியாக ஒரு இமெயில் அனுப்பினார்: " பல ஆண்டுகளாக எல்லா மதங்களும் போலியானவைகள் என்று ஒதுக்கித் தள்ளிவிட்டேன். இன்னும் இந்த விஷயத்தில் முழுமையான முடிவுக்கு நான் வரவில்லை. ஆனால், இக்கட்டுரையை நான் வாசித்த பிறகு தேவன் இருக்கிறார் என்னும் உண்மையை மாத்திரம் நான் எதிர்கொள்ளவில்லை, அவரை விசுவாசியாமலிருந் தமைக்காக அவர் நிச்சயமாகவே என்மீது கோபமாக இருக்கிறார் என்பதையும் நான் உணர்கிறேன். சிருஷ்டிகர் இருக்கிறார் என்பதை ஏற்றுக்கொள்வது தேவ கோபாக்கி னையைக் குறைப்பதின் முதல்படி யாகும். ஆனால், அதுவே முடிவாக

இருக்க முடியாது. உண்மையில், " நடைமுறை நாத்தியவாதி " என்னும் பதம் வேதத்தின் அடிப்படையில் தேவன் இருக்கிறார் என்பதை ஏற்றுக்கொண்டு, ஆனால் அந்த விசுவாசத்திற்கென்று எதையுமே செய்யாதவரை குறிக்கிறது.

ஒருவர் சிருஷ்டிகரில் விசுவாசம் வைத்த பிறகு தொடர்ந்து என்ன செய்ய வேண்டும்? அந்த நபர் தேவனுடைய சிருஷ்டிப்புக்கான தேவனுடைய செய்தியை முதலில் கண்டறிய வேண்டும். அவர் உண்மையாகவே தேவனுடைய காரியங்களை ஆராய்கிறவராக இருந்தால் வேதத்திலுள்ள 66 புத்த கங்களும் மனிதனுக்கான தேவ ஆவியினால் ஏவப்பட்ட புத்தகங்கள் என்பதை உணர்ந்து கொள்ளுவார். " வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. தேவனுடைய மனுஷன் தேறினவ னாகவும் எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதே சத்துக்கும் கடிந்துகொள்ளு தலுக்கும், சீர்திருத்தலுக்கும் நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜன முள்ளவைகளாயி ருக்கிறது " (II தீமோ. 3 : 16, 17).

மனித இனத்துக்கான தேவனு டைய செய்தி வேதாகமம் என்பதை கண்டுபிடித்த பிறகு வேத வாக்கி யங்களை நாம் ஜாக்கிரதையாகப் படித்தால் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட மேசியா, இயேசு கிறிஸ்து என்று வெளிப்படுத்தப்பட்டி ருக்கிறது:...... நானே அவர் என்று நீங்கள் விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களில் சாவீர்கள் என்றார். அதற்கு அவர்கள் நீர் யார் என்றார்கள். இயேசு அவர்களை நோக்கி: நான் ஆதிமுதலாய் உங்களுக்குச் சொல்லியிருக்கிறவர் தான். உங்களைக் குறித்துப் பேசவும் நியாயந்தீர்க்கவும் எனக்கு அநேக காரியங்களுண்டு. என்னை அனுப்பி னவர் சத்தியமுள்ளவர்; நான் அவரி டத்தில் கேட்டவைகளையே உலகத் துக்குச் சொல்லுகிறேன் என்றார். பிதாவைக் குறித்துப் பேசினாரென்று அவர்கள் அறியாதி ருந்தார்கள். ஆதலால், இயேசு அவர் களை நோக்கி: நீங்கள் மனுஷகுமா ரனை உயர்த்தின பின்பு, நானே அவரென்றும் நான் என் சுயமாய் ஒன்றும் செய் யாமல் என் பிதா எனக்குப் போதித்த படியே இவை களைச் சொன்னேன் என்றும் அறி வீர்கள். என்னை அனுப் பினவர் என்னுடனே கூட இருக்கிறார் பிதாவுக்குப் பிரியமான வைகளை நான் எப்பொழுதும் செய்கிறபடியால் இவர் என்னைத் தனியேயிருக்க விட வில்லை என்றார். இவைகளை அவர் சொல்லுகையில் அநேகர் அவரி டத்தில் விசுவாசம் வைத்தார்கள். இயேசு தம்மை விசுவாசித்த யூதர் களை நோக்கி: நீங்கள் என் உப தேசத்தில் நிலைத்திருந்தால் மெய் யாகவே என் சீஷராயிருப்பீர்கள்;

சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார்.

இயேசு கிறிஸ்துவின் போதனைகளைப் பின்பற்றும் ஒருவர் அவர் கட்டளையிட்டபடியே இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ளும் எல்லோருக்கும் அவர் இரட்சிப்பின் கதவுகளை திறந்திருக்கிறார் என்பதை உணர்ந்து கொள்கிறார். " சகலமும் என் பிதாவினால் எனக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது; பிதா தவிர வேறொருவரும் குமாரனை அறியான்; குமாரனும், குமாரன் எவனுக்கு அவரை வெளிப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ அவனும் தவிர, வேறொருவனும் பிதாவை அறியான். வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக் கொண்டு என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்து மாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக் கும். என் நுகம் மெதுவாயும் என் சுமை இலகுவாயும் இருக்கிறது என்றார் " ( மத்தேயு 11:27 - 30).

ஒருவர் தவறான நாத்தீக அபிப்பிராயங்களை விட்டு தெய்வீகச் சிருஷ்டிக் கர்த்தாவாகிய தேவனைத் தழுவிக்கொள்ளும்போது அது நமக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. இருந்தபோதிலும் இத்தகைய மனரீதியான மாற்றம் நித்திய ஜீவனுக்கான முதல் முக்கிய படியாகத் தான் இருக்கிறது. அவ்விசுவாசத் தோடே மனந்திரும்பிய இருதயமும், தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப் படியும் உண்மையுள்ள வாழ்க் கையும் சேர்ந்து கொண்டால் அது உண்மையான நித்திய மதிப்புள்ள ஒன்றாயிருக்கும். ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கப்பட்ட விசுவாச முள்ள பிசாசுகளுக்கும் இரட்சிக் கப்பட்ட மனிதர்களுக்கும் இடையே உள்ள வேறுபாடு மனிதர்கள் அவ்விசுவாசத்தை தங்கள் கீழ்ப்படிதலில் காட்டினார்கள் என்பதாயிருக்கிறது. ✝

---

## விசுவாசம்

**விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது. அதினாலே முன்னோர்கள் நற்சாட்சி பெற்றார்கள்.**

# பரிசுத்த வசனங்களின் முக்கியத்துவம்

# The Importance of the Holy Scriptures

Wayxne Jackson

பல காரணங்களுக்காக வேதவாக்கியங்களில் உள்ளடங்கியிருக்கிற தகவல்கள் முக்கியமானது. கீழ்க்காணும் காரியங்களைச் சிந்தித்துப்பாருங்கள்.

முதலாவது, வேத அறிவில்லையென்றால் நம் சிருஷ்கரின் குணாதிசயங் களைப்பற்றி நம்மால் முழுமையாக விவரமாக தெரிந்துகொள்ள முடியாது. தேவனுடைய ஞானம் மற்றும் வல்லமையைக் குறித்து ஆச்சரிய மூட்டும் இயற்கையின் சிக்கலான தன்மைகளை கவனிக்கும் போதும் அண்டசராசரங் களின் மிகப்பெரிய தன்மையை உற்று ஆராய்ந்து பார்க்கும்போதும் நாமாகவே சில காரியங்களைக் கற்றுக்கொண்டாலும்கூட தேவனுடைய தயை (தீத்து3 : 5) அன்பு ( யோ 4 : 8 ) கிருபை ( எபேசியர் 2 : 8 ) நீதி ( ரோமர் 1 : 16, 17 ) போன்றவைகளைக் குறித்து நமக்கு போதிப்பதற்கு வார்த்தை வடிவத்தில் நமக்கு உறுதியான தகவல் தொடர்பு அவசியப்படுகிறது. இத்தெய்வீக புத்தகம் தேவனைப் பற்றிய நம் கண்ணோட்டத்தை விரிவுபடுத்தியது.

இரண்டாவது, வேதாகமத்தின் வரலாற்றுப் பதிவுகள் நிராகரிக்கப்படும்போது மனிதன் தன் ஆரம்பத்தைப்பற்றிய எந்த அறிவுமில்லாமல் விடப்படுகிறான். குழப்பமும் முரண்பாடும் நிறைந்த பரிணாமக் கொள்கை நம்மை பிரம்மிக் கத்தக்க அதிசயமாய் உண்டாக்கிய தேவனைப்பற்றி மகிமையாய் விவரிக்கும் ஆதியாகமப் புத்தகத்திற்கு எவ்விதத்திலும் ஈடாகாது (சங். 139 : 14 ; ஆதியாகமம் 1 : 16) தான் பரிணாம வளர்ச்சியில் வளர்ந்த ஒரு மிருகம் என நினைக்கும் எந்த ஒரு மனிதனும் பரிதாபத்திற்குரியவன்.

மூன்றாவது, நம் உண்மையான ஆவிக்குரிய நிலையை வெளிப்படுத்த பரிசுத்த வேத வாக்கியங்கள் அவசியமாயிருக்கிறது. மனித நிலையில் ஏதோ

தவறு இருக்கிறது என்பதை மனித இனம் அறிந்திருக்கிறது என்பது சந்தேகமற்ற உண்மையாயிருக்கிறது. ஒரு பழங்கால சீனப்பழமொழி இவ்விதமாகச் சொல்கிறது. நல்லவர்கள் இரண்டுபேர் இருக்கிறார்கள். ஒருவன் மரித்துப் போய்விட்டான். மற்றொருவன் இன்னும் பிறக்கவில்லை. ரோம தத்துவஞானி Jeneca சொல்லும் போது, " நாம் எல்லோரும் பாவம் செய்திருக்கிறோம் சிலர் அதிகமாக பாவம் செய்கிறார்கள், சிலர் குறைவாக பாவம் செய்கிறார்கள். ஆனால் எது சரியானது எது தவறானது என்பதைப்பற்றிய துல்லியத்தன் மையை நாம் எவ்வாறு விளக்குகிறோம்? அவிசுவாசம் இதற்கான பதிலைக் கொடுக்க முடியாது. அவிசுவாசியான Russell மற்றவர்களுக்கு துக்கத்தைக் கொண்டுவருபவனை விட மற்றவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொண்டுவருபவன் சிறந்தவன் என்று சொல்லிவிட்டு இதற்கு நியாயமான காரணம் எதுவும் தனக்கு தெரியவில்லை என்று சொன்னார். ஆனால், இன்னொரு கேள்வியிருக்கிறது. மனிதனுடைய பரிதாபகரமான இந்நிலைமைக்குப் பரிகாரம் என்ன? ஏராளமாக முயற்சித்தும் விடை காண முடியவில்லை. மனிதனுடைய உண்மையான ஒழுக்கம் மற்றும் பக்தி ரீதியான நிலையை காணத் தெய்வீக வெளிப்பாடு அவசியமாகிறது.

மனிதனுடைய உண்மையான நிலையை பிரதிபலிக்கும் கண்ணாடியைப் போல ( யாக். 1 : 23 ) வேதாகமம் நேரடியாக பகுத்தறிவுள்ள மனிதன். தேவ னுடைய உறவிலிருந்து பிரிந்து போய் விட்டான் என்று சொல்கிறது (ரோமர் 3 : 10 - 18 ; 23). நம்மை உண்டாக்கின தேவனோடு நாம் கொண்டிருந்த நெருக்கமான உறவிலிருந்து பாவம் நம்மைப் பிரித்து விட்டது என்று ( ஏசாயா 59 : 1, 2 ) சொல்கிறது. நான் ஆவிக்குரிய பிரகாரமாகப் பேசுகிறேன் நாம் மரித்த நிலையில் இருந்தோம் ( எபே. 2 : 1). வேதவாக்கியங்களின் ஒட்டுமொத்த வரலாறு எல்லா நீதிக்கும் ஆதாரமாயிருக்கிற தேவனிடமிருந்து வழிவிலகிப்போனதின் தொகுப்பாயிருக்கிறது. நம்முடைய வீழ்ச்சியின் விளைவாக பூமி ஏகமாய்த் தவித்துப் பிரசவ வேதனைப்படுகிறது ( ரோமர் 8 : 20 - 23 ). வேதாகமத்தின் சாட்சியங்களை சட்டைப்பண்ணுகிறவர்களும், எல்லா காரியங்களுக்கும் அளவுகோலாக உயரிய மனிதன் இருக்கிறான் என்றும் கருத்தை ஆதரிக் கிறவர்களும் ஆவிக்குரிய நிலை மற்றும் உணர்வுப்பூர்வமான குழப்பம் ஆகிய வற்றிற்கு இடையே சிக்கித் தவிக்கிறார்கள். நாம் நம் பிதாவோடு ஒப்புரவாகும்படி பல வேத வாக்கியங்கள் நம்மை வலியுறுத்துகின்றன.

நான்காவது, மனித வரலாற்றின் மமையாக இயேசு கிறிஸ்து இருக்கிறார். அவிசுவாசிகள்கூட அவருக்கு மரியாதையைச் செலுத்தியிருக்கிறார்கள். தேவனை விசுவாசியாத தத்துவஞானியான John Stuaut Mill என்பவர் நசரேயனாகிய இயேசு மிகச்சிறந்த உயரிய மனிதர்களுடைய பட்டியலில்

முதலிடத்தை இயேசுவுக்கு கொடுக்க வேண்டும், அவரைக் குறித்து மனித இனம் பெருமைப்பட வேண்டும். ஆனால், தெய்வீக வெளிப்பாட்டைத் தவிர கிறிஸ்துவைப் பற்றி நமக்கு என்ன தெரியும்? வேதாகமத்தில் மட்டுமல்லாமல் வரலாற்றிலும் இயேசு கிறிஸ்துவைப் பற்றி (Josephus Tactius) போன்றோர் குறிப்பிட்டிருக்கிறார்கள். இருந்தபோதிலும், இவைகள் நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றியோ, அவருடைய குணாதிசயங்களைப் பற்றியோ, அவருடைய மீட்பின் பணி பற்றியோ எதையும் வெளிப்படுத்தவில்லை.

வேத வாக்கியங்கள் தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் வெளிப்பாடாயிருக்கிறது. அவைகளில் நாம் கிறிஸ்து மானிடப் பிறவி எடுப்பதற்கு முன்பாகவே வார்த்தையாக இருந்தார் என்று அவருடைய நித்தியத்தன்மை வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது ( மீகா 5 : 2 ; யோவான் 1 : 1). பழைய ஏற்பாடு முழுவதும் மேசியாவின் வருகையைப் பற்றிய தகவல்களை நாம் காணமுடியும். மனித உருவில் தெய்வீக வழிப்பாட்டை பழைய ஏற்பாட்டில் பல இடங்களில் நாம் காணமுடியும். மனித உருவில் தெய்வீக வழிப்பாட்டை பழைய ஏற்பாட்டில் பல இடங்களில் நாம் காணமுடியும் (ஆதி 18 : 11; 32 : 24). அதேபோல் அந்த வார்த் தை மாம்சமாகி நமக்குள்ளே வாசம் செய்யப்போகிற கிறிஸ்துவின் வருகையைப் பற்றிய செய்தியை உள்ளடக்கியதாகத்தான் பழைய ஏற்பாட்டு வசனங்கள் பல உள்ளன, பல பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்கள் கிறிஸ்துவைப் பற்றி விவர மாக விளக்கி உள்ளன (ஏசாயா 53 ; மீகா 5 : 2 ; தானியேல் 9 : 24). பழைய ஏற்பாட்டு வசனங்கள் கிறிஸ்துவின் வருகையைப் பற்றிய தகவல்களை வெளிப் படுத்தி மக்கள் மனதை தயார்படுத்தின. பிறகு, காலம் நிறைவேறின பிறகு தேவன் தம்முடைய குமாரனை இவ்வுலகத்திற்கு அனுப்பினார் (கலாத்தியர் 4 : 4).

ஐந்தாவதுது, புதிய ஏற்பாடு இல்லையென்றால் நசரேயனாகிய இயேசுவின் ஊழியத்தைப் பற்றிய ஆரம்பகால தகவல்களையும், பிரசங்கங் களையும் நாம் கேட்டிருக்க முடியாது. சுவிசேஷ எழுத்தாளர்கள் தேவ குமாரனு டைய வார்த்தைகளையும், கிரியைகளையும் பதிவு செய்திருக்கிறார்கள். அவரு டைய அற்புத செயல்பாடுகள் அவர் வானத்திலிருந்து இறங்கி வந்து மனித இனத்தின் ஆவிக்குரிய தேவைகளை சந்திக்க வந்தார் என்பதற்கு ஆதரவாக உள்ளது (யோ 6 : 33) மேலும், அவருடைய அற்புத கிரியைகள் அவர் தேவ னால் அங்கீகரிக்கப்படுவர் என்பதை உறுதிசெய்கின்றன (அப்போஸ்தலர் 2 : 22). அவருடைய உயரிய வார்த்தைகள் துக்கத்திலும் நம்பிக்கையற்ற நிலையி லும் சிக்கித்தவிக்கும் இவ்வுலகிற்கு ஆறுதலையும், நம்பிக்கையையும் கொண்டு வருகிறது. உண்மையாகவே, அந்த மனுஷன் பேசுகிறது போல ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை" (யோவான் 7 : 46 ; மத்தேயு 7 : 28 , 29).

புதிய ஏற்பாட்டுப் பதிவேடுகள் இல்லையென்றால், இருபது நூற்றாண்டு

களுக்கு முன்பு எருசலேம் பட்டணத்தில் என்ன நடந்தது என்பதைப் பற்றிய துல்லியமான அறிவு நமக்கிராது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மரணத்தைப் பற்றியும், அவருடைய மகத்தான உயிர்த்தெழுதலைப்பற்றியும் நமக்கு துல்லியமான உண்மைகள் தெரிந்திருக்காது (I கொரி 15 : 1 - 4). அது மட்டுமல்லாமல், அவர் சிலுவையிலறையப்பட்டதின் தெய்வீக நோக்கத்தைப் பற்றிய தகவல்கள் நமக்கு கிடைத்திருக்காது. மேலும் மனிதனை பாவத்தின் கோரத்திலிருந்து தப்பிக்க தேவனுடைய திட்டத்தின் அங்கமாக அது இருந்தது (மத். 20 : 28 ; 26 : 28)

ஆறாவது, வேதவிளக்கங்கள் இல்லையென்றால் கிறிஸ்து இரத்தஞ்சிந்தி வாங்கின சபையைப்பற்றி எந்த அறிவும் நமக்கு இருக்காது (அப். 20 : 28). வேத வசனத்தின் வெளிச்சம் இல்லையென்றால் அச்சபைக்குள் எப்படி பிரவேசிப்பதென்பதைப் பற்றி நமக்கு எதுவும் தெரியாது ( எபே. 5 : 23 ; I கொரிந்தியர் 12 : 13 ) தேவனுக்குப் பிரியமான ஆராதனையை ஏறெடுப்பது எப்படி என்பதைப் பற்றி நமக்கு ஒன்றும் தெரியாது.

ஏழாவது, நம்மிடம் புதிய ஏற்பாடு இல்லாதிருந்தால், எது ஒழுக்கக்கேடு என்றும், சக மனிதர்களிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்றும் துல்லியமான ஒழுக்கநெறி எதுவுமே நமக்கு இருந்திருக்காது. ஒவ்வொருவரும் தனக்குத்தானே ஒழுக்கரீதியான காரியங்களுக்கு சர்வாதி காரியாக இருந்திருப்பார். இச்சந்ததியில் உள்ள இலட்சக்கணக்கான மக்கள் நடைமுறை வாழ்க்கையில் வேத வாக்கியங்களை நிராகரித்திருக்கிறபடியால் தெய்வீக வெளிப்பாடு இல்லாமல் தறிகெட்டு நடக்கிற சமுதாயத்தை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

அடுத்ததாக, நம்மிடம் வேதாகமம் இல்லையென்றால் கல்லறைக்கு அப்பால் ஒரு வாழக்கையை பற்றி ஏதாவது நமக்கு நம்பிக்கை இருந்திருக்குமா? நம் இரட்சகராகிய இயேசு கிறிஸ்து மரணத்தைப் பரிகரித்து ஜீவனையும் அழியாமையையும் சுவிசேஷத்தினாலே வெளியரங்கமாக்கினார் ( II தீமோ. 1 : 10 ). இவ்வுலக வாழ்க்கைக்கு அப்பால் ஒரு வாழ்க்கை உண்டு என்பதைப்பற்றி ஒரு நாத்திகனுக்கு என்ன தெரியும்? வேதாகமம் இல்லையென்றால் மனிதனுடைய இறுதி கணக் கொப்புவிப்பைப் பற்றியும், கீழப்படியாதவர்களுக்கு நித்திய ஆக்கினை வைக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பற்றியும் நமக்கு எப்படித் தெரியும்? ( மத். 25 : 46 ). வேத வாக்கியங்கள் மட்டுமே இப்படிப்பட்ட தகவல்களைத் தருகின்றன (லூக். 16 : 30, 31)

வேத வாக்கியங்கள் நம் கண்களைத் தெளிவிக்கிறதாயிருக்கிறபடியால் நாம் எவ்வளவு நன்றியுள்ளவர்களாயிருக்க வேண்டும். நாம் இப்பரிசுத்த புத்தகத்தை பொக்கிஷப்படுத்துவோம். நாம் அதன் வளமான சத்தியத்தை உள்வாங்கிக் கொண்டு பின்பு நன்றி நிறைந்த இருதயத்தோடு அதை மற்றவர்களுக்கு அறிவிக்க வேண்டும். ✠

# நித்தியமான காரியங்கள் மீது உங்கள் நம்பிக்கையைக் கட்டுங்கள்

## Build Your Hopes On Things Eternal

Maxle B. Boren

கி.மு. நான்காம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் மகா அலெக்சாண்டர் உலக முழுவதும் படையெடுத்து கிரேக்க கீர்த்திக்கு காரணமாயிருந்தான். அலெக்சாண்டர் கிரேக்க கலாச்சாரத்தையும், மொழியையும், செல்வாக்கையும் உலகெங்கிலும் பரப்புவதில் வெற்றி அடைந்தார். ஆனால், இப்போது பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு கட்டடச் சிதைவுகள்தான் அந்நாட்களின் மகிமையை நமக்குச் சொல்கின்றன.

செல்வச் செருக்குக்கு அடையாளமாக கிரேக்கர்களுக்கு முன்பாக வேறுசிலரும் இருந்தார்கள். உதாரணமாக, பார்வோன்களின் கீழ் எகிப்தும் செல்வப்பகட்டு போன்றவைகளுக்கு அடையாளமாக இருந்தது. அவர் களுடைய செல்வம் எவ்வளவு திரளாக இருந்தது! அவர்களுடைய ராஜ்யத்தின் மகிமை எல்லோராலும் அறியப்பட்டிருக்கிறது. ஆனால், இப்போது ஞாபகச் சின்னங்களால் நிரப்பப்பட்டிருக்கிற மியூசியங்களும் விவேகமாகக் கட்டப்பட்ட பிரமீடுகளும்தான் அந்த பழங்கால மகிமையை பறைசாற்றுகின்றன.

அநேகமாக ரோம சாம்ராஜ்யம்தான் எல்லாக்கால கட்டங்களிலும் பிரசித்திப் பெற்ற ஒன்றாக இருந்தது. ரோம சாம்ராஜ்யம் சுமார் ஐந்நூறு ஆண்டுகள் நீடித்தது! கி.பி முதல் இரண்டு மூன்று நூற்றாண்டுகளில் வாழ்ந்தவர்கள் இந்த சாம்ராஜ்ஜியத்திற்கு முடிவே வராது என்று நினைத்தார்கள். ஆனால், அது முடிவுக்கு வந்தது. அதன் மகிமை மங்கிப்போயிற்று. அதன் அழகான கட்டடங்கள், மாபெரும் கலையரங்குகள், விளையாட்டு அரங்கங்கள், சிலைகள் மற்றும் ஞாபகச் சின்னங்கள் காலத்தின் கட்டாயத்தினால் கடந்து போய்விட்டன. இன்று நாம் மீதமிருக்கிற சிதைவுகளைத்தான் பார்க்கிறோம்!

நான் அடிக்கடி உண்மையுள்ள கிறிஸ்தவராயிருக்கிற F.L. Eiland அவர்கள் எழுதிய பிரபலமான பாடலை ஆழ்ந்து சிந்திப்பேன். காலம் கடந்து போகிறது,

இப்பூமியில் ஒன்றும் நிலைத்திருக்கப் போவதில்லை. நித்தியத்தின் மீது உங்கள் நம்பிக்கையைக் கட்டுங்கள். தேவனுடைய மாறாத கரங்களைப் பற்றிக்கொள் ளுங்கள்! இது எவ்வளவு உண்மையாயிருக்கிறது.

ஜனங்கள் அதிக முக்கியத்துவம் கொடுக்கும் காரியங்கள் உண்மையில் பார்க்கப்போனால் அற்பமானவைகள் தான். நீண்டகால அடிப்படையில் பார்த் தால் நாம் எவ்வளவு அருமையான வீட்டில் வாழ்ந்தாலும் சரி, வங்கியில் நாம் எவ்வளவு பணம் வைத்திருந்தாலும் சரி, எவ்வளவு பொக்கிஷங்களைச் சேர்த்து வைத்திருந்தாலும் சரி அவைகள் என்றென்றும் நிலைத்திருப்பதில்லை. இறுதி யாக, நாம் ஆராய்ந்து பார்த்தால் : வாழ்க்கையில் முக்கியமான காரியம் என்ன வென்றால், நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்து அவருடைய கட்டளைக்குக் கீழ்ப் படிந்து நித்தியத்திற்கு நம்மை ஆயத்தப்படுத்தியிருக்கிக்கிறோமா இல்லையா? என்பதுதான்.

சகோதரர் Eiland அவர்கள் இந்த அழகான பாடலை ஞானமாக எழுதியிருக்கிறார். " தேவனுடைய மாறாத கரங்களை பற்றிக்கொள்ளுங்கள் " என்று இச்சிறு கட்டுரையை வாசிக்க வாய்ப்புப் பெற்றிருக்கும் உங்கள் யாவருக்கும் ஒரு காரியத்தை நினைவுப்படுத்த விரும்புகிறேன். நேரம் வேகமாக கடந்து சென்று கொண்டிருக்கிறபடியால், கடந்து போகின்ற ஒவ்வொரு நிமிடமும் நாம் நித்தியத்தை நோக்கி நெருங்கிக் கொண்டிருக்கிறோம். " இப்பொழுதே அனுக்கிர காலம். இப்பொழுதே இரட்சணிய நாள் " (II கொரி 6 : 2). ✝

---

## கர்த்தரின் பந்தி

கர்த்தரின் வார்த்தைகளின்படி

கர்த்தருடைய சபையில்

கர்த்தருடைய நாளில்

கர்த்தருடைய மக்களால்

கர்த்தருடைய மரணம் பற்றி

கர்த்தருடைய வருகை மட்டும்

வாரந்தோறும் நினைவு கூரப்படுகிறது.

# நீங்கள் மறுபடியும் பிறந்து விட்டீர்களா ? இல்லையென்றால், ஏன் இல்லை ?

# Have you Been born Again ? If Not, Why Not ?

George Funk

" இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு " (அப் 22 : 16). வாழ்க்கையில் மிக முக்கியமான வாழ்க்கையையே மாற்றுகிற முடிவை உங்கள் வாழ்நாளில் எடுப்பீர்கள் என்று நீங்கள் உணர்கிறீர்களா?

வாழ்க்கைப் பிரச்சனைகளுக்கான பதில் இயேசு கிறிஸ்துவில் இருக்கிறது. பல நூற்றாண்டுகளாக மனிதன் தன் விருப்பப்படி விடைகாண முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறான். ஆனால், தேவனில்லாமல் மற்றெல்லா தீர்வுகளும் தற்காலிகமானதும், வெறுமையானதாகவும் இருக்கிறது.

**நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; ; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்** (யோ 14 : 6) என்று இயேசு சொன்னார்.

நண்பர்களே, இயேசுதான் வழி! அவர் மூலமாக தேவன் நமக்கு வாக்குத்தத்தம் செய்திருக்கிற காரியங்களை கவனியுங்கள்:

1. " இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியா யிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின " ( II கொரி 5 : 17).

2. "உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று நீங்கள் அறியவும், தேவகுமாரனுடைய நாமத்தின் மேல் நீங்கள் விசுவாசமாயிருக்கவும், தேவகுமாரனுடைய நாமத்தின் மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்கு இவைகளை எழுதியிருக்கிறேன் " ( I யோவான் 5 : 13).

3. இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திக்கிறோம். குமாரனாகிய அவருக்குள் அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது ( கொலோ 1:13,14)

நாம் புதிய சிருஷ்டிகளாயிருக்கிறோம், நமக்கு நித்திய ஜீவன் உண்டு, நமக்குப் பாவமன்னிப்பு உண்டு, நாம் அன்பின் குமாரனுடைய ராஜ்ஜியத்திற்குள் உட்படுத்தப்பட்டிருக்கிறோம், பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெற்றிருக்கிறோம் ( அப் 2 : 38 ) போன்ற ஆசீர்வாதங்களையெல்லாம் உணர்ந்து பார்ப்பதும், அடையாளங் கண்டுகொள்வதும் பரவசமூட்டுகிறதாக இருக்கிறதல்லவா? இதைவிட நமக்கு வேறென்ன வேண்டும்? ஒரு விசுவாசிக்கு தேவனுடைய வாக்குத்தத்தங்கள் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

இந்த முழு உலகத்திற்கும் தேவனுடைய திட்டம் இரட்சிப்புதான் ( I தீமோ 2 : 4 ). எல்லோரும் மனந்திரும்பி இயேசுவுக்குள் ஞானஸ்நானம் பெறவேண்டுமென்பது தேவனுடைய சித்தமாயிருக்கிறது.

தண்ணீர் ஞானஸ்நானமானது ஒருவர் மனந்திரும்பிய பாவி கிறிஸ்துவோடு சிலுவையில் அறையப்பட்டு, மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு அவரோடு கூட உயிர்த்தெழுவதை ( மறுபடியும் பிறப்பதை ) அடையாளப்படுத்துகிறது ( யோ 3 : 5 ). ஞானஸ்நானத்திற்குப் பிறகு பழையவைகள் எல்லாம் ஒழிந்து போகும்; எல்லாம் புதிதாகும்.

நீங்கள் இன்னும் தண்ணீர் ஞானஸ்நானம் பெறவில்லையென்றால் வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிற அந்த ஆரம்பகால விசுவாசிகளின் மாதிரியைப் பின்பற்றி மறுபடியும் பிறக்கும்படியாக நான் உங்களை உற்சாகப்படுத்துகிறேன் ( கலா 3 : 27 ). ஞானஸ்நானத்தில் கிறிஸ்துவை நாம் தரித்துக் கொள்கிறோம். அவரோடுகூட நாம் மரித்து அடக்கம் பண்ணப்பட்டு உயிர்த்தெழுகிறோம். அதன்மூலம் தேவனுடைய பிள்ளையாக மாறுகிறோம். ஓ! அவருடைய பிள்ளைகள் எவ்வளவு முக்கியமானவர்கள்!

---

**உங்களுக்குத் தெரியுமா?**

***ஒரு தரம் பிறப்பவன் இரண்டு தரம் மரிக்கிறான்!***

***இரண்டு தரம் பிறப்பவன் ஒரு தரம் மரிக்கிறான்!***

# ஒருவர் சபையில் இருக்கத்தான் வேண்டுமா?

# Must One Be in The Church ?

E. Claude Gardner

" **இல்லை இரட்சிக்கப்படுவதற்கு ஒருவர் சபையில் இருக்க வேண்டிய அவசியமில்லை** " என்பது நாம் அடிக்கடி கேட்கும் ஒன்றாக இருக்கிறது. உலகி லுள்ள பெரும்பாலான மார்க்கப்பிரிவினைக் கூட்டத்தாரின் நிலை இதுதான். சபையில் இருப்பது ஆவிக்குரிய வளர்ச்சிக்கு முக்கியமானது. ஆனால், இரட்சிப்புக்கு அவசியமில்லை என்று நம்புகிறார்கள். கிறிஸ்துவும், அவரை தனிப்பட்ட முறையில் விசுவாசிப்பது தான் அத்தியாவசியமானது. அதன் பிறகு ஒருவர் விரும்பும் சபையில் சேர்ந்து கொள்ளலாம் என்று தான் போதித்தார் என மார்க்கப் பிரிவினைக் கூட்டத்தார் போதிக்கிறார்கள். அவர்கள் தங்கள் உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க முழு முயற்சி எடுக்கிறார்கள். ஆனால், அந்த முயற்சி இரட்சிப் போடு தொடர்புபடுத்தப் படுவதில்லை. இவ்வாக்கியத்தை சந்தேகிக்கிறவர்கள் அவர்களுடைய பிரசங்கியார்களை அழைத்து உறுதி செய்து கொள்ளலாம்.

ஆம், கர்த்தருடைய சபையில் அங்கம் வகிப்பது அவசியமானது. கர்த்த ருடைய சபையைப் பற்றி நாம் வேதாகமத்தில் வாசிக்க முடியும். மற்ற மார்க்கப் பிரிவினைக் கூட்டங்களில் அங்கம் வகிப்பது அவசியமான ஒன்றல்ல, ஏனென் றால், மார்க்கப் பிரிவினைக் கூட்டத்தைப்பற்றி புதிய ஏற்பாட்டில் எங்குமே குறிப்பிடப்படவில்லை. வேத வாக்கியங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிற கர்த்தரு டைய சபை ஒருபோதும் மார்க்கப் பிரிவினைக் கூட்டமாக இருந்ததில்லை. இன் றைய நாட்களில் கிறிஸ்துவின் சபை மறைந்திருக்கவில்லை. வெளிப்படை யாகவே அது வியாபித்திருக்கிறது.

கர்த்தருடைய சபை கிறிஸ்து மூலமாக இரட்சிப்பின் திட்டமாயிருக்கிறது. இது

கி.பி 33ல் சபை ஸ்தாபிக்கப்பட்ட முதல் நாளிலிருந்தே தெளிவாயிருக்கிறது. கிறிஸ்துவின் மரணம், அடக்கம் உயிர்த்தெழுதல் போன்றவைகள் வல்லமையாகப் பிரசங்கிக்கப்பட்ட பிறகு, அதன் பதில் அல்லது விளைவு " சகோதரரே நாங்கள் என்ன செய்ய வேண்டும் " என்பதாயிருந்தது. பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள் என்றார் (அப். 2 : 38). தேவனுடைய வார்த்தையை சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றையத்தினம் ஏறக்குறைய மூவாயிரம்பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். பேதுருவால் கொடுக்கப்பட்ட எளிய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்தவர்கள் பாவமன்னிப்பைப் பெற்றுக் கொண்டார்கள். இவர்களெல்லோரும் அந்நாளில் ஆரம்பிக்கப்பட்ட கர்த்தருடைய சபையிலே சேர்க்கப்பட்டார்கள் ( அப்போஸ்தலர் 2 : 41, 47 ). சபையின் பிறந்தநாளில் கிறிஸ்துவால் இரட்சிக்கப்பட்டவர்கள் அவருடைய சபையின் அங்கத்தினர்களானார்கள். புதிய ஏற்பாட்டுக் காலக்கட்டங்களில் கிறிஸ்துவைச் சார்ந்தவர்கள், சபையைச் சார்ந்தவர்களாகத்தான் இருந்தார்கள். இன்னும்கூட நாம் பேதுருவின் உபதேசத்தைப் பின்பற்றினால் நாம் இரட்சிக்கப்படுவோம். தேவன் நம்மைத் தாமாகவே தம்முடைய சபையில் சேர்த்துக் கொள்ளுவார். கி.பி. 33ல் எருசலேமில் முழுக்கு ஞானஸ்நானம் பெற்று பாவமன்னிப்படைந்த ஒவ்வொரு விசுவாசியுமே சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்.

எபிரெயர் புத்தகம் ஒருவர் தேவனுடைய பிள்ளையாக இருந்தால் அவர் சபையில் இருக்கிறார் போன்ற வாசகங்களை உள்ளடக்கியிருக்கிறது. எபிரெயர் 2 : 10 " உம்முடைய நாமத்தை என் சகோதரருக்கு அறிவித்து சபை நடுவில் உம்மை துதித்துப்பாடுவேன் " என்று சொல்கிறது. இது சங்கீதம் 28 ல் இடம்பெற்றுள்ள தீர்க்கத்தரிசனத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது. இங்கே சபை, சகோதரர்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஒருவர் கிறிஸ்துவுக்குள் சகோதரராக இருந்தால் அவர் கர்த்தருடைய சபையில் இருக்கிறார். ஒருவர் தன்னை சகோதரன் என்று சொல்லிக்கொண்டு சபையில் இல்லாமல் இருந்தால் அந்த நபர் ஏற்றுக்கொண்ட இரட்சிப்பின் திட்டத்தைக் கேள்விகேட்க வேண்டும்.

எபிரெயர் 3 : 6 " கிறிஸ்துவோ அவருடைய வீட்டிற்கு மேற்பட்டவரான குமாரனாக உண்மையுள்ளவராயிருக்கிறார்; நம்பிக்கையினாலே உண்டாகும் தைரியத்தையும் மேன்மை பாராட்டலையும் முடிவு பரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருப்போமாகில், நாமே அவருடைய வீடாயிருப்போம் " என்று சொல்கிறது. " கிறிஸ்தவர்கள் வீடாயிருக்கிறார்கள் " கிறிஸ்துவுக்குச் சொந்த வீடு

இருக்கிறது, அது சபையாயிருக்கிறது ( I தீமோத்தேயு 3 : 15). இங்கே " நாம் " என்பது சபையில் இருக்கும் இரட்சிக்கப்பட்டவர்களைக் குறிக்கிறது.

எபிரெயர் 10 : 21 " தேவனுடைய வீட்டின்மேல் அதிகாரியான மகா ஆசாரியர் நமக்கு ஒருவர் இருக்கிறபடியினாலும் '' என்று பதிவு செய்கிறது ''. கிறிஸ்தவர்களின் பிரதான ஆசாரியர் கிறிஸ்துவாக இருக்கிறார் (எபிரெயர் 4 : 15). ஆனால், இந்த வசனத்தில் சபையாகிய தேவனுடைய வீட்டின் மேல் கிறிஸ்து மகா ஆசாரியராக இருக்கிறார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒருவர் சபையில் அங்கம் வகிக்கவில்லையென்றால், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும் பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரைப் பெற்றுக் கொள்ள முடியாது.

எபிரெயர் 12 : 23, " பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற் பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபையினிடத்திற்கும், யாவருக்கும் நியாயாதிபதியாகிய தேவனிடத்திற்கும் பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளினிடத்திற்கும் " என்று சொல்கிறது. சபையில் அங்கம் வகிப்பவர்களின் பெயர்கள் பரலோகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. ஒருவருடைய பெயர் ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்படவில்லையென்றால் பரலோகத்தில் பிரவேசிக்க முடியாது ( வெளி 21 : 27 ) ஆனால், ஜீவபுஸ்தகத்தில் யாருடைய பெயர்கள் எழுதப்பட்டிருக்கிறதோ அவர்கள் வேதாகமத்தில் எந்த சபையைப் பற்றி வாசிக்க முடிகிறதோ அவர்கள் அந்த சபையைச் சார்ந்தவர்கள். ஒருவர் வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிற சபையைச் சேர்ந்தவராக இல்லையென்றால் அவர் ஆத்தும ஆராய்ச்சியில் ஈடுபட்டு வேதாகம இரட்சிப்பின் திட்டத்தைப் படிப்பது அவசியமாகிறது.

சபை அவசியமில்லை என்னும் கொள்கையை ஏற்றுக்கொள்வதன் மற்றுமொரு விளைவு சபை கூடி வருதலில் தெரிகிறது. சபை முக்கியமில்லையென்றால் பொழுதுபோக்கு, விளையாட்டு, பயணம், குடும்ப விழாக்கள், வியாபாரம் போன்றவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து சபை கூடிவருதலை அங்கத்தினர்கள் விட்டுவிடுவார்கள். ஒருவர் சபை யாரையும் இரட்சிப்பதில்லை கிறிஸ்துதான் இரட்சிக்கிறார் என்று சொன்னால் அதற்கான சரியான பதில்: " ஆம், கிறிஸ்துதான் ஒரே இரட்சகராயிருக்கிறார், ஆனால் சபையை இரட்சிப்பதாகத்தான் அவர் வாக்குரைத்திருக்கிறார் ''. பவுல் கிறிஸ்துவைப் பற்றி சொல்லும்போது கிறிஸ்து சரீரத்திற்கு இரட்சகராயிருக்கிறார் என்றே சொல்கிறார்.

✞

# ஓ, தேவனுடைய மனுஷனே எழுந்திரு!

## RISE UP O MEN OF GOD!

Stan Mitchell


சபையில் பெண்ணின் பங்கு பற்றிய வேதாகமப் பாடத்தை படிக்க ஆரம் பிக்கும்போது ஒரு பெண் எப்படிப்பட்ட தலைமைத்துவத்தை ஏற்றுக்கொள்ள முடியும்; அவர்கள் வேத பாடங்களில் வழிநடத்தலாமா? பிரசங்கிக்கலாமா? மூப்பர்களாகலாமா? போன்ற கேள்விகளைச் சுற்றியே பிரச்சனை எழும்பும் என்று நாம் எளிதாக யூகித்துவிடலாம். ஆனால், சபையில் இது அவசரத் தேவை இல்லை என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். உண்மையான பிரச்சனை என்னவென்றால் சபையில் ஆண்களின் தலைமைத்துவமாகும். சபையில் தலைமைப் பொறுப்பை ஏற்க ஆண்கள் அழைக்கப்பட்டி ருக்கிறார்களா? அப்படியென்றால் அவர்கள் எங்கே ? அவர்கள் ஏன் தலைமைப் பொறுப்பை ஏற்க மறுக்கிறார்கள்?

ஆண்கள் வீட்டிலும், சபையிலும் ஆவிக்குரிய தலைவர்களாக இருக்க வேண்டுமென்று வேதாகமம் போதிக்கிறது ( I தீமோத்தேயு 2 : 8, 11 , 12 ; எபேசியர் 5 : 28 - 24 ). இருந்தபோதிலும் பல ஆண்கள் ஏனோ தலைமைத்துவத்தை ஏற்க மறுக்கிறார்கள்? ஏன் காரியம் இப்படியாக இருக்கிறது?

சிலர் மோசேயைப் போல் எரேமியாவைப் போல் தாங்கள் கர்த்தருடைய வேலைக்குத் தகுதியானவர்களல்ல என்று சொல்கிறார்கள் (யாத். 4 : 10 , 11 ; எரே. 1 : 4 – 10). ஆனால், தேவன் ஆண்களை எந்த இடத்தில் வைக்க வேண்டு மென்று விரும்பினாரோ அதை அவர் அறிந்திருந்தார். “ தேவன் தமது சித்தத் தின்படி அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார் (I கொரிந்தியர் 13 : 18).

நான் சபையில் ஆண்கள் கர்த்தருக்காக எழும்பவேண்டு மென்று சொல் லும்போது, எல்லா ஆண்களும் பிரசங்கியாராக, வேதாகம ஆசிரியராக வெளிநாடுகளுக்குச் சென்று ஊழியம் செய்பவர்களாக இருக்கவேண்டுமென்று

சொல்லவில்லை. இருந்தபோதிலும் ஒவ்வொரு ஆணும் ஒவ்வொரு வாரமும் சபையில் இரண்டு வேலைகளையாவது செய்தால் அது சபையில் எப்படிப்பட்ட வித்தியாசத்தை ஏற்படுத்தும் என்று சற்று கற்பனை செய்து பாருங்கள்.



சிலர் சபையில் பலர் மாய்மாலம் செய்கிறபடியால் இடறலடைந்து விட்ட தாகவும் அதனால் தலைமைப்பொறுப்பை ஏற்க விரும்பவில்லை என்றும் சொல்கிறார்கள் (மத்தேயு 6 : 5 - 8). ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து மதபோத கர்களின் மாயமாலத்தைக் கண்டித்திருந்தாலும்கூட சிலருடைய மாயமாலத் தினால் நாம் தேவனுக்கு சேவை செய்வதை விட்டுவிட வேண்டுமென்று ஒரு போதும் சொல்லவில்லை. மனிதனுடைய வாழ்க்கையில் மாய்மாலம் இருப்பத னால் நாம் நம் பொறுப்புகளிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியாது. உண்மை யுள்ள மனிதர்கள் மற்றவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதைப்பற்றிக் கவலைப்படாமல் தாங்கள் சரியானதையே செய்ய விரும்புவார்கள்.

இன்னும் பலர், தங்களுக்குக் கர்த்தருக்கென்று வேலைசெய்ய நேரமில்லை யென்றும், தாங்கள் பரபரப்பாக இருப்பதாகவும் சொல்கிறார்கள். பிரியமான வர்களே ! பாவம் மாத்திரம் நாம் தேவனுக்கென்று வேலை செய்ய நம்மை தடுப்பதில்லை என்பதை புரிந்துகொள்ளுங்கள். பெரும்பாலும் நாம் இவ்வுலக காரியங்களான வேலை, பொழுது போக்கு, போன்றவைகள் நம் வாழ்க்கையில் முதலிடத்தை பிடிக்க அனுமதித்து நாம் கர்த்தருக்காகச் செய்ய

வேண்டிய வேலையில் பின்தங்கிவிடுகிறோம்.( மத்தேயு 12 : 28 ; 6 : 31, 32 ), நாம் ஆவிக்குரிய காரியங்களுக்கும் உலகக் காரியங்களுக்கும் இடையில் உள்ள வேறுபாட்டைக் காணவேண்டும். நாம் ஆவிக்குரிய காரியங்களை முதன்மைப்படுத்துவதில் வளர்ச்சி அடைய வேண்டும்.

சிலர் "சபையில் நான் அவசியம் என்பதை அறியாதிருந்தேன்" என்று சொல்லி கையை விரித்துவிடுவார்கள். நாம் ஒவ்வொருவரும் நமக்கானவை களை மட்டுமல்ல பிறருக்கானவைகளையும் நோக்கும் மனப்பான்மையை வளர்த்துக் கொள்ள வேண்டும். ( பிலிப்பியர் 2 : 2 - 4 ) அன்பானவர்களே! உங்கள் கண்களைத் திறந்து பாருங்கள்! எல்லா இடங்களிலும் தேவைகள் இருக்கிறது.

நாம் பொறுப்பைத் தட்டிக்கழிப்பதற்கு சொல்லும் சாக்குபோக்குகளில் மிகப் பெரியது என்னுடைய வேலை அல்ல என்பதாகும். காயீன் தன் சகோதர னைக் குறித்துச் சொன்னதுபோல் " என் சகோதரனுக்கு நான் காவலாளியோ " என்று சொல்லி நம் பொறுப்பை நாம் தட்டிக் கழிக்கிறோம்.

அச்சுறுத்தல் ஒருபோதும் பெரிதாய் இருந்ததில்லை

சகோதரர்களே, நம் குழந்தைகளைக் குறித்து சிந்தித்து பாருங்கள். நாம் வாழும் சமுதாயம் நம்மை பயமுறுத்துகிறதா? இன்றைய நாட்களில் போதை வஸ்துக்கள் அதிகமாகக் கிடைக்கிறதா? உலகத்தன்மை பலரோடு பாலியல் உறவு வைத்துக்கொள்வது போன்றவைகள் அதிகரித்திருக்கிறதா? குழந்தை வளர்ப்பை நமக்குப் பதிலாக தொலைக்காட்சிப் பெட்டியும், வலைத்தளங்களும் வசப்படுத்திவிட்டன. குழந்தைகளின் சிந்திக்கும் திறனையும் ஒழுக்க நெறிகளையும் அவைகள் முடிவு செய்கின்றன. உங்கள் குழந்தைகள் வீடு திரும்பும்போது ஓரினச் சேர்கை தவறு என்று குற்றப்படுத்தக்கூடாது என்று அவர்கள் சொன்னால் என்ன செய்வீர்கள்? ஏனென்றால், உங்கள் பிள்ளைகள் பள்ளிக்கூடங்களில் கிறிஸ்தவர்களல்லாத ஆசிரியர்களால் ஓரினச்சேர்க்கை தவறில்லை என்றுதான் போதிக்கப்படுகிறார்கள்.

சபையும் பாதிப்புக்குட்பட்டதுதான். முந்தைய தலைமுறையினருக்கு வயதாகும் போது அவர்களுடைய ஆற்றலும் குன்றிப்போகிறது. அப்போது அவர்களுடைய இடத்தை யார் பிடிப்பார்கள்? நாம் கட்டும் சந்ததியாக இருக்கிறோமா அல்லது விமர்சிக்கும் சந்ததியாக இருக்கிறோமா? நாம் மற்றவர்களுடைய செயல்பாடுகளை குறைகூறுகிறவர்களாகத்தான் பெரும் பாலும் இருக்கிறோம். நாம் நம் குடும்பங்களுக்கத் தேவையான ஆவிக்குரிய பாதுகாப்பை அளிக்கத்தக்க தலைமைப் பொறுப்பை ஏற்க ஆயத்த மாயிருக்கிறோமா?. ✝

சபை

# ஓர் உறுப்பினர்

# One Member

Justin Hopkins

“ தேவன் தமது சித்தத்தின்படி அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார் ” (I கொரிந்தியர் 12 : 18).



வாரமுழுவதும் ஆராதனையிலும், வேதபாடவகுப்புகளிலும் எத்தனைபேர் கலந்து கொண்டார்கள் என்பதைக் குறித்து வருகைப் பதிவேட்டில் பதிவு செய்வது பல சபைகளில் பழக்கமாக இருக்கிறது. இந்த எண்களிலிருந்து ஒருவர் சபையில் எத்தனை சதவீதத்தினர் ஒழுங்காக சபையை நாடி வரு கிறார்கள். எத்தனை சதவீதத்தினர் சபைக் காரியங்களில் ஈடுபடுவதில்லை என்பதைப் பற்றிய புள்ளி விவரங்களை ஒருவர் தயார் செய்ய முடியும். இது சபையின்

ஒட்டுமொத்த ஆவிக்குரிய ஆரோக்கியத்திற்கு அடையாளமாக இருக்கிறது. இருந்தபோதிலும் சில வேளைகளில் இப்புள்ளி விவரங்கள் நமக்குள் மெத்தனப்போக்கை ஏற்படுத்தி கர்த்தருக்காக அதிகம் உழைக்க தடையாக வந்து விடுகிறது.

வேதாகமம் உறுப்பினரைப் பற்றி மட்டும் பேசாமல் உறுப்பினர்கள் அல்லது அங்கத்தினர்களைப் பற்றியும் பேசுகிறது. யோவான் 3 : 16ல் ஒட்டுமொத்த உல கத்தின் மீது தேவனுடைய அன்பு கிறிஸ்துவை சிலுவையில் மரிக்க ஏவியது. அப்போஸ்தலருடைய நடபடிகள் 20 : 28ல் இக்கருத்து விரிவாக விளக்கப்பட்டுள்ளது. அதாவது, அங்கே நாம் கிறிஸ்துவின் இரத்தம் சபையை வாங்கியிருக் கிறது என்று குறிப்பாக நாம் பார்க்கிறோம். வெளிப்படுத்தின விசேஷம் 1 : 6ல் இயேசு கிறிஸ்து நம்மிடத்தில் அன்புகூர்ந்து தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களைக் கழுவியிருக்கிறார் என்று சொல்கிறது. இதன் மூலம் கிறிஸ்து நம் ஒவ்வொருவருக்காக மரித்தார் என்று கற்றுக்கொள்கிறோம்.

ஆமோஸ் 5 : 14, 15 வசனங்களில் நாம் தீமையை வெறுத்து நன்மையை விரும்ப வேண்டுமென்று வாசிக்கிறோம். வேறுவிதமாகச் சொன்னால் தேவன் எதை விரும்புகிறாரோ அதை நாமும் விரும்ப வேண்டும். அவர் எதை வெறுக்கிறாரோ அதை நாமும் வெறுக்க வேண்டும். இது உண்மையாயிருக்க தேவனுடைய அன்பின் மைய நோக்கத்தினிடத்திற்கு உங்கள் கவனத்தைத் திருப்புமாறு உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். ஆதியாக மத்திலிருந்து வெளிப்படுத்தின விசேஷம் வரை ஒட்டுமொத்த தேவனுடைய திட்டத்தின் மையநோக்கம் சபையாகத்தான் இருக்கிறது.

அப்போஸ்தலனாகிய பவுல் மனித சரீரத்திற்கும், சபைக்கும் இடையே உள்ள ஒற்றுமையையும் கிறிஸ்தவர்களின் தனித்துவம் வாய்ந்த பங்களிப் பையும் விவரித்துப் பேசியிருக்கிறார். பவுல் எபேசியர் 5 : 29 தன் சொந்த மாம் சத்தைப் பகைத்தவன் ஒருவனுமில்லையே; கர்த்தர் சபையைப் போஷித்துக் காப் பாற்றுகிறது போல ஒவ்வொருவனும் தன் மாம்சத்தைப் போதித்துக் காப்பாற்று கிறான். இவ்வசனத்தை சிந்தித்துப் பார்க்கும்போது, எனக்கு ஓர் எண்ணம் தோன்றுகிறது. உதாரணமாக, என் உடலிலுள்ள கணயம் என்ன வேலைச் செய்கிறது என்பது எனக்குத் தெரியாது, இருந்த போதிலும் எனக்கு ஒரு கணயம் இருக்கிறது என்பதைக் குறித்து மகிழ்ச்சியடைகிறேன். ஆனால், அது செயல்படத் தவறினால் எனக்கு ஏற்படும் இழப்பை உணர்ந்து உடனடியாக மருத்துவ உதவியை நாடுவேன். கிறிஸ்து எதை விரும்புகிறாரோ அதை விரும்பும் கிறிஸ்தவர்களாகிய நாம், ஒருவரிலொருவர் அதேவிதமான அன்பையும், மரியாதை யையும் வெளிப்படுத்த வேண்டும்.

ஆதலால், ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவயவங்களும் கூடப் பாடுபடும். ஒரு அவயவம் மகிமைப்பட்டால் எல்லா அவயவங்களும் கூடச் சந்தோசப்படும் (I கொரிந்தியர் 12 : 26). ஒரு கிறிஸ்தவன் சபை கூடி வரத் தவறும் போது அதன் காரணமாக மற்ற அங்கத்தினர்கள் பாடுபடுகிறார்கள் அவர்கள் சபை நாடாத அந்த நபரை மறுபடியும் சபைக்குக் கொண்டு வரவேண்டும். சில வேளைகளில் நாம் முக்கியமற்றவர்களாக உணருகிறோம். ஆனால், நாம் ஒட்டு மொத்த சரீரத்தாலும் நேசிக்கப்படுகிறோம், ஒட்டுமொத்த சரீரத்திற்கும் நாம் அவசியப்படுகிறோம். எனவே, நாம் தேவன் எதை விரும்புகிறாரோ அதை நாமும் விரும்பி மற்றவர்கள் ஆவிக்குரிய பிரகாரமாக வளர நாம் உதவுவோம். அதன் மூலம் சபை எப்படியிருக்கவேண்டுமென்று தேவன் விரும்புகிறாரோ அப்படியிருக்க நாம் உதவி செய்ய முடியும்.

எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி, எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்.

✝

## இரண்டு நண்பர்களிடமிருந்து ...

இரண்டு நண்பர்கள் பாலைவனத்தின் வழியாய் நடந்து கொண்டிருந்தார்கள். பாலைவன பயணத்தின் ஒரு கட்டத்தில் அவர்களுடையே வாக்குவாதம் ஏற்பட்டது. ஒருவன் மற்றொருவனுடைய கன்னத்தில் அறைந்துவிட்டான். கன்னத்தில் அடிவாங்கியவனுக்கு சற்று காயம் ஏற்பட்டுவிட்டது. ஆனால், அவன் ஒன்றுமே சொல்லாமல் மணல் மீது இவ்விதமாக எழுதினான் :

" இன்று என் அருமையான நண்பன்
என் கன்னத்தில் அறைந்து விட்டான் "

தொடர்ந்து அவர்கள் நடந்து போகையில் ஒரு பாலைவனச் சோலையைக் கண்டார்கள், அங்கே இருவரும் குளிக்க முடிவெடுத்தார்கள். குளித்துக் கொண்டிருக்கும்போது அடிவாங்கினவன் சேற்றில் சிக்கி மூழ்கத் தொடங்கிவிட்டான், ஆனால், அப்போது கன்னத்தில் அறைந்த நண்பன் அவனைக் காப்பாற்றினான். அப்போது காப்பாற்றப்பட்டவன் கல்லின்மீது கீழ்க்கண்டவாறு செதுக்கினான்.

" இன்று என் அருமையான நண்பன்
என் உயிரைக் காப்பாற்றினான் "

# உயிர்த்தெழுதல் - நம் நம்பிக்கை

## *Resurrection - Our Hope*

Hans J. Dederscheck

சுவிசேஷத்தின் அடிப்படை உபதேசம் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதல் ஆகும். உண்மை யாகவே அது நற்செய்திதான். அது தான் நம்பிக்கையாயிருக்கிறது. நம்முடைய முடிவு கல்லறையில் இல்லை! நமக்கு ஜீவன் உண்டு. அது நித்திய ஜீவனாயிருக்கிறது. கிறிஸ்தவ உபதேசம் இம்மைக்காக மாத்திரம் மக்களுக்கு நம்பிக் கையைக் கொண்டுவந்தால் கிறிஸ் தவர்கள் எல்லா மனுஷரைப் பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக் கவர்களாயிருப்பார்கள் (I கொரி. 15 : 19 ) பவுல் இதை ஒத்துக்கொண்டு இவ்விதமாகச் சொல்லுகிறார் " அழிவுள்ளதாகிய இது அழியாமை யையும் சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக் கொள்ளும் போது மரணம் ஜெய மாக விழுங்கப்பட்டது என்று எழுதி யிருக்கிற வார்த்தை நிறைவேறும் " மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே? (I கொரிந்தியர் 15 : 5455 ). ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இப்படிச்சொன்னார் " இதைக் குறித்து நீங்கள் ஆச்சரியப்பட வேண்டாம்; ஏனென்றால், பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்கும் காலம் வரும். அப்பொழுது நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படியும் தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படியும் எழுந்திருக் கிறவர்களாகவும் புறப்படுவார்கள் " ( யோவான் 5 : 28 , 29 ). உயிர்த்தெழுதலைப் பற்றி கிறிஸ்து தாமே ஓர் உதாரணத்தைத் தந்திருக்கிறார்.

தேவனுடைய புதிய உலகம் நித்திய ஜீவனுக்குப் பாத்திரமான வர்களோடு தான் ஏற்படுத்தப்படும். அதாவது, இவ்வுலகில் அவருக்கு

கீழ்ப்படிந்தவர்களோடு எற்படுத் தப்படும்.

அப்போஸ்தலர்கள் கிறிஸ்து வின் உயிர்த்தெழுதலுக்கு சாட்சிகளாயிருந்தார்கள். அதன்பின்பு அவர் 500 பேருக்கு அதிகமான சகோதரருக்கும் ஓரேவேளையில் தரிசனமானார். பின்பு யாக்கோபுக்கு தரிசன மானார். கடைசியாக, உயிர்த் தெழுந்த கிறிஸ்து அப்போஸ்த லனாகிய பவுலால் காணப்பட்டார் (I கொரி. 15 : 5,8 ). மேற்சொல்லப் பட்டவர்களெல்லாம் கிறுஸ்துவின் உயர்த்தெழுதலுக்கு சாட்சிகளா யிருந்தார்கள். அப்போஸ்தலர்கள் யோவான் பேதுரு, பவுல் போன்றோர் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை வரலாற்று உண்மையாக எடுத்துரைத் தார்கள். அவர்கள் அவருடைய உயிர்த்தெழுதலை நேரில் பார்த்த சாட்சிகளாயிருந்தார்கள் (ரோமர் 1 : 4 ; லுக்கா 14 : 14 ). தோமாவும் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு மிகச்சிறந்த சாட்சி ஆவார் ( யோவான் 20 : 26 -29 ). அப்போஸ்தலனாகிய பவுல் உயிர்த் தெழுந்த கிறிஸ்துவைத் தான் பிரசங் கித்தாகச் சொன்னார் ( I கொரிந்தியர் 15 : 13 - 16).

மகதலேனா மரியாளும் கிறிஸ்துவின் கல்லறையை காலியாகக் கண்டாள் (மாற்கு 16 : 9 - 10). இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்கு மூன்று முறை தரிசனமானார் (யோவான் 21 : 12 -14 ) கிறிஸ்து வேறு இரண்டு பேருக்கும் தரிசனமானார் (லூக்கா 24 : 13 - 27 ; மாற்கு 16 : 12).



''அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போலிருந்தார். இப்பொழுதோ மனந்திரும்பவேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார். மேலும் ஒரு நாளைக் குதித்திருக்கிறார். அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார். அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப் பண்ணினார் '' ( அப்போஸ்தலர் 17 : 30 , 31 ). கிறிஸ்துவே இவ்வுலகின்

நியாயாதிபதியாக இருப்பார்.

சிலர் மரித்தவர்கள் எப்படி மறுபடியும் உயிரோடு வாழ முடியும்? அது அசாத்தியம் என்று சொல்கி றார்கள். அப்படி சொல்கிறவர் களுடைய கண்ணோட்டம் முற்றிலும் உலகத்தன்மை வாய்ந்தது என்பதுதான் பிரச்சனையே, மனிதப் பிறிவி எத்தனை ஆச்சரியமானது என்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள். மனித உடல் எவ்வளவு சிக்கலானது! அப்படியென்றால் மரித்தவர்களுக்கு ஏன் புதிய ஜீவனைக் கொடுக்க முடியாது? இப்பூமியில் நமக்கு சரீரப்பி ரகாரமான ஜீவனைத்தர தேவனால் முடிந்தது. அப்படியென்றால் அவ்வாழ்க்கைக்குப் பிறகு ஆவிக் குரிய ஜீவனைதருவது அவரால் கூடாத ஒன்றல்ல. அப்படித்தானே! கர்த்தர் லாசருவை நான்கு நாட்களுக்குப் பிறகு எழுப்பினார். " பரிகரிக்கப்படும் கடைசி சத்துரு மரணம் '' என்று வேதாகமம் தெளிவாகப் போதிக்கிறது. (I கொரி 15 : 26 ). கிறிஸ்து மரணத்தைப் பரிகரித்து, ஜீவனையும், அழியாமையையும் சுவிசேஷத் தினாலே வெளி யரங்கமாக்கினார் (I தீமோத்தேயு 1:10 ).

மோசம்போகாதிருங்கள்; ஆகாத சம்பாஷணைகள் நல்லொ ழுக்கங்களைக் கெடுக்கும். நீங்கள் பாவஞ் செய்யாமல் நீதிக்கேற்க விழித்துக்கொண்டு தெளிந்தவர் களாயிருங்கள் " (I கொரிந்தியர் 15 : 33 - 34 ). இங்கே பவுல் தேவனுடைய ஜனங்கள் ஆவிக் குரிய காரியங்களைக் குறித்து அதிக மாகச் சிந்திக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறார்.

புதிய ஏற்பாட்டின் மிகச்சிறந்த வாக்குத்தத்தம் மரித்தோரின் உயிர்த்தெழுதலும், நித்திய ஜீவனும்தான்.

✝

---

*இயேசு முதல்முறை*
*இரட்சகராக வந்தார்*
*இயேசு*
*மறுபடியும்*
*நியாயாதிபதியாய்*
*வரப் போகிறார்.*

# இயேசு கிறிஸ்து வரும் போது...

# When Jesus Comes...

Owen Cosgrove

சமீபத்தில், ஒரு வீட்டிற்கு முன்பாக நடந்த வியாபார நிகழ்வில், " எடுத்துக் கொள்ளப்படுதல் நிகழ்வு 1988ல் நிகழ்வதற்கான 88 காரணங்கள் " என்னும் தலைப்பில் ஒரு புத்தகத்தைக் கண்டேன். எடுத்துக்கொள்ளப்படுதல் அல்லது பரவசக்கொள்கை பற்றி நாம் வேதாகமத்தில் படிக்க முடியாது. இப்பதம் I தெசலோனிக்கேயர் 4 : 17ல் பவுல் கிறிஸ்துவின் வருகையின் போது உயிரோடிருப் பவர்கள் கர்த்தருக்கு எதிர் கொண்டு போக மேகங்கள் மேல் அவர்க ளோடே கூட ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்படுவதை விவரிப்பதற்காக மனிதர்களால் எழுதப்பட்டது. ஆனால், இது தவறாகப் புரிந்து கொள்ளப்படுகிறது.

காலகாலமாக, மனிதர்கள் கர்த்தருடைய வருகையைப் பற்றி பல விதமாக யூகிக்க முயற்சித்திருக் கிறார்கள். அவைகளுள் குறிப்பிடத் தக்கவர் ( William Miller 1781 - 1849 ) இவர் கிறிஸ்து மார்ச் 21, 1843க்கும் மார்ச் 21, 1844க்கும் இடையே வருவார் என்று ஆயிரக்கணக்கான மக்களை நம்பச் செய்தார். அந்த தீர்க்கதரிசனம் தோற்றுப்போன போது அவருடைய ஆதரவாளர்கள் கிறிஸ்துவின் வருகை அக்டோபர் 22, 1844ல் இருக்கும் என்று உறுதியாகச் சொன்னார்கள். அந்த தீர்க்க தரிசனமும் தோற்றுப் போனபோது Millerன் மற்றுமொரு ஆதரவாளர் 1852ல் கிறிஸ்துவின் வருகை இருக்கும் என்று சொன் னார். அதுவும் நடக்காதபோது 1853 இலையுதிர் காலத்தில் அல்லது 1854 வசந்த காலத்தில் கர்த்த ருடைய வருகை இருக்கும் என்று அறிவிக்கப்பட்டது. மறுபடியும் அந்த முன்னறிவிப்பும் தவறாகிப் போனது.

கடைசியாக, மில்லரின் ஆதரவாளர்களில் ஒருவரான Ellen G. White என்னும் பெண் தன்னுடைய மெய் மறந்த நிலையில் தன்னை தேவன் மூன்றாவது வானத்திற்கு அழைத்ததாகவும் அங்கே பழைய ஏற்பாட்டு ஓய்வு நாள் கட்டளையைச் சுற்றி ஒரு மகிமையான வளையத்தைக் கண்டதாகவும் சொல்லிக் கொண்டார். திருமதி White Milleரின் மிக முக்கியமான ஆதரவாளராக மாறினார், அவருடைய முயற்சியி னால்தான் ஏழாம் நாள் சபை மிகப் பெரிய வளர்ச்சியை அடைந்தது.

அப்போஸ்தலனாகிய யோவான் நாம் எல்லா ஆவிகளையும் நம்பாமல் அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறிய வேண்டுமென்று கட்டளையிடுகிறார் (I யோவான் 4 : 1). அநேக வேத வசனங்கள் கள்ளத்தீர்க்க தரிசிகளைக் குறித்து ஜனங்களை எச்சரிக்கிறது. எனவே, ஒருவர் இயேசு கிறிஸ்து 1988ல் வருவதற் கான 88 காரணங்கள் என்று சொல்லி அதை நிறைவேறா போது பின்னாட்களில் கள்ளத்தீர்க்க தரிசனம் சொன்னவரை முட்டாளாக்குகிறது.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அந்த நாளையும் அந்த நாழிகையையும் பிதா ஒருவர் தவிர மற்றொருவரும் அறியான். பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள், குமாரனும் அறியார் என்று தெளிவாகத் தம்முடைய வருகையைப் பற்றி சொல்லியிருக்கிறார் ( மத். 24 : 30 ; மாற்கு 13 : 30). மறைமுகமாக குறிப்பிடப்பட்டிருக்கிற யுத்தங்களும் யுத்தத்தைப் பற்றிய செய்திகளும் அடையாளங்களே அல்ல. சிலர் இப்படிப்பட்ட அடையாளங்களை ஜனங்களை வஞ்சிப்பதற்காகப் பயன்படுத்துவார்கள் என்று சொன்னார் (மத்தேயு 24 : 3).

மத்தேயு 24ஆம் அதிகாரம் அந்தத் தலைமுறையில் எருசலேமின் அழிவைப் பற்றி முன்னறிவிக்கிறது ( 2, 34, 35 ), ஆனால், அதே நேரத்தில் கிறிஸ்துவின் வருகை எப்போது என்று நாம் அறியாதபடியால் ஆவிக்குரிய ஆயத்தத்தில் நாம் எப்போதும் இருக்க வேண்டுமென்று நம்மை எச்சரிக்கிறது (2, 42 - 51). எனவே, ஒருவர் கர்த்தரின் வருகையின் நாளை முன்னறிவித்தால் அவருக்கு மத்தேயு 24 : 36 என்ன சொல்கிறது என்று தெரியவில்லை அல்லது அவ்வசனத்தைப் பற்றி அவர் கவலைப்படவில்லை என்றுதான் பொருள். " உங்கள் ஆண்டவர் இன்ன நாழிகையில் வருவாரென்று நீங்கள் அறியாதிருக்கிறபடியினால் விழித்திருங்கள் " (மத். 24 : 42).

# இராஜ்யத்துக்குத் தூரமானவர்களல்ல

## Not Far From The Kingdom

Neal Pollard

இயேசு கிறிஸ்து தம்மிடம் விவேகமாய் உத்தரவு சொன்ன வேதபாரகனை நோக்கி : " நீ தேவனுடைய ராஜ்யத்துக்கு தூரமானவனல்ல " என்றார். பெயர் சொல்லப்படாத இந்த வேதபாரகனுக்கு தேவனுடைய ராஜ்யத்தின் தன்மை மற்றும் நோக்கத்தைப் பற்றிய ஒரு கண்ணோட்டம் இருந்திருக்கிறது. இவன் கிறிஸ்துவைத் தன் வாழ்க்கையை ஆளுகை செய்யும் ராஜாவாக்கினானா? இதைக்குறித்து வேதவசனங்கள் எந்த அடையாளத்தையும் கொடுக்கவில்லை. பல முறை நாம் இவ்வசனப்பகுதியை பார்த்திருக்கிறோம். ஆனால், இந்த வேதபாரகன் அப்படிச் செய்ததாக நம்மால் காணமுடியவில்லை.



இன்றைய நாட்களில் நம்மைச் சுற்றிலும் பல பெரிய மனிதர்கள் தேவனுடைய ராஜ்யத்துக்கு தூரமாயில்லை. நம் மத்தியில் பலர் நல்லவர்களாக ஒழுக்கமுள்ளவர்களாக பலருக்கு சேவை செய்யத் தங்களை அர்ப்பணித்தவர்களாக விவாகத்தை கனம் பண்ணி சமுதாயத்துக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்கிறவர்ளாயிருக்கிறீர்கள். அதேபோல், மார்க்கப்பிரிவினைக் கூட்டங்களில் பலர் கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களாக பலவிதங்களில் அவரைப் பிரியப்படுத்த

விரும்புகிறவர்களாக இருக்கிறார்கள். உலகிலுள்ள மற்ற மதங்களைச் சார்ந்தவர்கள் கூட மனிதாபிமான செயல்களில் மிகச்சிறந்து விளங்குகிறார்கள். அவர்கள் சமாதானம் பண்ணுகிறவர்களாக சமுதாயத்தைக் கட்டுகிறவர்களாக மிகச்சிறந்த முறையில் செயலாற்றி வருகிறார்கள்.

இன்னும் பலர் ஓரளவு விசுவாசம் உடையவர்களாய் கிட்டத்தட்ட இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றும் அளவுக்கு இருக்கிறார்கள். ஆனால், அவர்கள் யாரோ ஒருவர் அல்லது ஏதோ ஒன்று அடுத்த அடியை எடுத்து வைக்க விடாமல் தடுக்க அனுமதித்து விடுகிறார்கள். இவ்விதமாக பல ஆண்கள், பல பெண்கள் ராஜ்யத்துக்கு தூரமற்றவர்களாக மிக அருகில் இருக்கிறார்கள்.

ஆனால், தூரமில்லை மிக அருகில் போன்றவைகளெல்லாம் அங்கே அல்லது ராஜ்யத்தில் இருப்பதற்கு இணையாகாது என்பதை ஜெபத்துடன் நினைவில் கொள்ள வேண்டும். அப்படிப்பட்டவர்களை கரிசனையுடனும் அவசரமாகவும் போய் சந்திக்க நாம் ஊக்கப்படுத்தப்படுவோம். இராஜ்யத்துக்கு தூரமில்லாமல் இருந்தும் ராஜாவின் ஆசீர் பிரபஞ்சத்திற்கும், பாதுகாப்புக்கும் பங்காளிகள் இல்லாமல் இருப்பது மிகவும் துரதிருஷ்டமானதாகும். ✝

## வேதாகமத்திலுள்ள சில முக்கியமான கேள்விகள்

1. நீ எங்கே இருக்கிறாய்? – ஆதி. 3 : 9
2. மனிதன் தேவனுக்கு முன்பாக நீதிமானாயிருப்பது எப்படி? – யோபு 25 : 4
3. அப்படியானால் நாங்கள் என்ன செய்ய வேண்டும்? – லூக். 3 : 10
4. தேவனுக்கேற்ற கிரியைகளை நடப்பிக்கும்படி நாங்கள் என்ன செய்ய வேண்டும்? –யோவான் 6 : 28
5. சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும்? – அப். 2 : 37
6. ஆண்டவரே, நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர்? – அப். 9 : 6
7. இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்? – அப் 16 : 30
8. ஆண்டவரே, நான் என்ன செய்ய வேண்டும்? – அப். 22 : 10
9. கிறிஸ்துவைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? – மத். 22 : 42
10. இவர் யாரோ? காற்றும், கடலும் இவருக்குக் கீழ்ப்படிகிறதே – மாற்கு 4 : 41

# எல்லோருக்கும் சுவிசேஷம்

# The Gospel Is For All

Earl Edwards

இயேசு இப்பூமியில் வாழ்ந்த போது ஒரு முறை தம்முடைய சீடர்களிடம் " அறுப்புக்காலம் வருகிறதற்கு இன்னும் நாலு மாதம் செல்லும் என்று நீங்கள் சொல்லுகிறதில்லையா? இதோ, வயல்நிலங்கள் இப்பொழுதே அறுப்புக்கு விளைந்திருக்கிறதென்று உங்கள் கண்களை ஏறெடுத்துப் பாருங்கள் " என்று சொன்னார் (யோவான் 4 : 35).

இன்று இயேசு சபையில் இருக்கிற நம்மிடம் நேரடியாகப் பேசுகிறதாக இருந்தால் இவ்வுலகில் இருக்கும் பலருடைய ஆவிக்குரிய மோசமான நிலையைக் காண நம்முடைய கண்களை ஏறெடுக்க முதலில் சொல்வார் என்று நான் நம்புகிறேன். அவர்களுக்கு சுவிசேஷம் தேவை என்பது வெளிப்படையாக இருக்கிறது என்று சொல்வார். இரண்டாவதாக, நம் மாபெரும் தேவனிடத்திலுள்ள ஆவிக்குரிய உதவியை மறுமதிப்பீடு செய்ய நம் கண்களை ஏறெடுத்துப் பார்க்கும்படியாக நம்மிடம் சொல்வார் ( சங் 27 : 9, 10 ; 131 : 1 - 3, 8 ). ஆனால், அநேகமாக எல்லாவற்றையும் விட முதல் நூற்றாண்டு சீடர்களிடம் சொன்னது போல், " வயல் நிலங்கள் இப்பொழுதே அறுப்புக்கு விளைந்திருக்கிறதென்று உங்கள் கண்களை ஏறெடுத்துப் பாருங்கள் " என்று சொல்வார். நாம் சகல ஜாதிகளையும் சீஷராக்க வேண்டுமென்பது அவருடைய விருப்பம் என்பதையும் நமக்கு நினைப்பூட்டுவார் ( மத் 28 : 19 ). ஏனென்றால், சுவிசேஷம் என்பது எல்லோருக்குமானது.

ஆவிக்குரிய தேவையில் இருப்பவர்களும், அவர்களுடைய தேவைகளை பூர்த்தி செய்யும் தேவனும் ஒன்றாக இணைக்கப்பட வேண்டும், இது கிறிஸ்தவனிடமிருந்து ஆவிக்குரிய தரிசனத்தைப் பெற்ற ஒவ்வொரு கிறிஸ்தவனின் வேலையாயிருக்கிறது. நம் வசனப்பகுதியாகிய யோவான் நான்காம் அதிகாரத்திற்குத் திரும்பும்போது, இயேசு சரீரப்பிரகாரமான ஆகாரத்தை ஒரு பொருட்டாகவே எண்ணவில்லை, ஏனென்றால், அருகில் உள்ள சீகார் கிராமத்திலிருந்து

திரளான மக்கள் வருவார்களென்று அவர்களுடைய ஆத்துமாக்கள் மீது அவர் அக்கறை கொண்டிருந்தார் என்பதை நாம் கவனிக்க முடியும். இயேசு விளைநிலங்கள் அறுப்புக்கு விளைந்திருக்கிறதைக் காண்கிறார் (வ 35).

இன்று பல அவசர ஆவிக்குரிய தேவைகள் உண்டு. தொலைநோக்குப் பார் வை உள்ள ஒரு சபை உண்மையாகவே அது கிறிஸ்துவை உடைய சபையாக இருந்தால் செய்யப்பட வேண்டிய பணியின் அவசரத்தன்மையை உணர்ந்து கொள்ளும். அதேபோல், ஒருவர் உண்மையாகவே தொலைநோக்குப் பார்வை உடையவராக இருந்தால், முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவராயிருந்தால் அந்த அவசரத் தன்மையை உணர்ந்து கொள்வார்.

**அறுப்புக்கேற்ற விளைநிலங்கள் உலக முழுவதிலும் உள்ளன**

" நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள் " என்று ஆண்டவர் சொன்னார் ( மத் 28 : 19 ). முதிர்ச்சியடைந்த தனிப்பட்ட கிறிஸ்த வர்களும், கீழ்ப்படிதலுள்ள சபைகளும் நம் ஆண்டவர் சகல ஜாதிகள் அல்லது தேசங்களுக்குப் போக வேண்டுமென்று கட்டளையிடும்போது ஒரு தேசத்திற்குப் போவதில் திருப்தியடையமாட்டார்கள். ஆகவே, நாம் உலகமுழுவதிலுமுள்ள அறுப்பு நிலங்களை நம் கண்களைக் கொண்டு ஏறெடுத்துப் பார்க்க வேண்டும். " நாம் பவுல் செய்ததுபோல் கிறிஸ்துவின் நாமம் அறிவிக்கப்படாத இடங்களில் சுவிசேஷத்தை அறிவிப்பதன் மூலம் கிறிஸ்துவைப் பற்றிய செய்தியை அவர்கள் கேள்விப்படும்படியும், உணர்ந்துகொள்ளும்படியும் செய்ய முடியும் (ரோ 15 : 20, 21). கடந்த சில வருடங்களில் அப்படிப்பட்ட தேசங்களைப் போய் சந்திப்பதில் கிறிஸ்துவின் சபையார் முன்னேற்றம் கண்டிருக்கிறார்கள் என்பது உண்மை தான். சொல்லப்போனால், 1939ல் இரண்டாம் உலகப் போர் வெடித்தபோது ஐரோப்பா முழுவதும் சேர்த்தே குறைவான எண்ணிக்கையிலான கிறிஸ்துவின் சபைகளே இருந்தன, அதுவும் எல்லாமே இங்கிலாந்தில் தான் இருந்தன. ஆனால், 1977ல் ஐரோப்பாவிலுள்ள 20 நாடுகளில் 195 கிறிஸ்துவின் சபைகள் இருந்தன, அப்படிப் பார்க்கும்போது நாம் முன்னேற்றம் அடைந்திருக்கிறோம் ஆனால், இன்னும் செய்வதற்குப் பல வேலைகள் இருக்கின்றன. மேற்ச்சொல்லப்பட்ட இடங்களில் நாம் ஊழியத்தைப் பொறுத்தவரை வஸ்திரத்தின் ஓரத்தைத்தான் தொட்டிருக்கிறோம். உலகின் 133 நாடுகளில் கிறிஸ்துவின் சபைகள் உள்ளன, ஆனால், அவற்றுள் பாதி தேசங்களில் பணியை இப்போதுதான் தொடங்கியிருக்கிறோம். அந்த நாடுகளில் பலர் சுவிசேஷத்தைக் கேள்விப்பட்டதே இல்லை. ஆனால், உலகின் 242 நாடுகளை நாம் கணக்கில் எடுத்துக்கொண்டால் தேவை வெளிப்படையாகவும், அவசரமாகவும் இருக்கிறது.

**நாம் சுவிசேஷத்தை எல்லோரிடத்திற்கும் எடுத்துச் செல்ல வேண்டும்**

சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள் என்று இயேசு சொன்னதை நினைவில் கொள்ளுங்கள். எப்படிப் பார்த்தாலும் நாம் அந்த பணிக்கு எந்த அளவு அர்ப்பணிப்புடன் இருக்க வேண்டுமோ அந்த அளவு இல்லை. சகோதரன் J.M. Mccaleb என்பவர் கிறிஸ்துவின் சபையாரால் ஊழியத்திற்கென்று ஜப்பான் தேசத்திற்கு 1891 லிருந்து தோராயமாக 1941 வரை அனுப்பப்பட்டிருந்தார்.

ஜப்பானில் அவர் பல வருடங்கள் ஊழியம் செய்த பிறகு, அவருக்கு உதவி செய்த பல சபைகள் அவருடைய பொருளாதார உதவிகளை நிறுத்திவிட்டு அந்த தொகையை அமெரிக்காவிலுள்ள தேவனற்றவர்கள் மத்தியில் செலவழிக்க திட்டமிட்டுள்ளதாக அவருக்கு கடிதத்தின் மூலமாக தெரிவித்தனர். ஆனால் Mccaleb அர்ப்பணிப்புடையவராக காணப்பட்டபடியால் உலகப்பிரகாரமான வேலை ஒன்றை அவர் தெரிந்தெடுத்து தான் நேசித்த ஜப்பானியர்களுக்கு தொடர்ந்து போதித்தார்.

சகோதரர்களே! நம் தேவன் மிகப் பெரியவர், இந்த அழிந்துபோகின்ற உலகம் அவருடைய அன்பையும், இரக்கத்தையும் பற்றி கேள்விப்பட வேண்டும். இந்த அறுப்புக்கேற்ற விளைநிலங்களை சந்திக்க நம்மை நாம் ஒப்புக்கொடுத்தால் வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே உண்மையான பாக்கியம் என்பதை அனுபவத்தினால் நாம் கற்றுக்கொள்வோம் (அப் 20:35).

**நாம் மற்றவர்கள் மீது கவனத்தைச் செலுத்த வேண்டும்.**

நாம் தேவனுக்காக வேலை செய்கிற மக்களாக இருக்க வேண்டுமென்றால் அறுப்பு நிலங்களை நம் கண்களைக் கொண்டு ஏறெடுக்கத்தக்க ஞானமுள்ளவர்களாயிருக்க வேண்டும். நம்மீதே நாம் கவனம் செலுத்துவதை விட்டுவிட்டு மற்றவர்களைப் பற்றி சிந்திக்க வேண்டும். நாம் மற்றவர்களைப் பற்றி சிந்திக்க தேவன் உதவி செய்வார், நாம் அப்படிச் செய்யும்போது மற்றவர்களையும் அறுப்புக்கேற்ற நிலங்களை நோக்கி கண்களை ஏறெடுக்கச் செய்கிற தொலைநோக்கு பார்வையுடைய மக்களாக மாற்றுவோம், ஏனென்றால், சுவிசேஷம் எல்லோருக்கும் தேவை என்பது அவர்களுக்கும் தெரியும். ✞

---

**பாவம்**

ஏதேன் தோட்டத்தில் **பாவம்** ஆரம்பித்தது

கெத்சமனே தோட்டத்தில் **பாவ விமோசனம்** ஆரம்பித்தது.

வசன ஆராய்ச்சி

# ரோமர் 11 : 1 - 10

Jerry Bates



1. தேவன் இஸ்ரவேலர்களை முழுவதுமாக தள்ளிவிட்டாரோ ? (21)

2. பவுல் எந்த கோத்திரத்தில் பிறந்தார் ? (21)

3. தேவன் இஸ்ரவேலை முழுமையாக தள்ளிவிடவில்லை என்பதை எப்படி நிரூபிக்க முடியும் ?

4. பவுல் 11 : 3 ல் எந்த ஏற்பாட்டு வசனத்தை மேற்கோள் காட்டுகிறார் ?

5. பாகாலுக்கு முன்பாக முழங்கால்படியிடாதவர்கள் எத்தனைபேர் ? (24)

6. தேவன் ஏன் இதைச் சொன்னார் ?

7. ஒட்டுமொத்த இஸ்ரவேல் தேசத்துக்கும் என்ன நடந்துவிட்டதாக எலியா நினைத்தார் ?

8. பவுல் குறிப்பிடுகிற மீதியாயிருக்கிறது என்பதன் பொருள் என்ன ? (25)

9. எப்படி இந்த மீதியானவர்கள் தெரிந்துகொள்ளப்பட்டார்கள் ? (25)

10. பவுல் 11 : 6 ல் எந்த கிரியைகளைப் பற்றிப் பேசுகிறார் ?

11. இஸ்ரவேலர் தேடுகிற எதை தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் அடைந்தார்கள் ? (27)

12. இஸ்ரவேலர் எதை தேடிக் கொண்டிருந்தார்கள் ?

13. யூதர்களில் பெரும்பாலானோருக்கு என்ன நடந்தது ? (27)

14. பவுல் 11 : 8 ல் எந்த பழைய எற்பாட்டு வசனத்தை மேற்கோள்காட்டுகிறார் ?

15. அப்பழைய ஏற்பாடு வசனப்பகுதியின் பின்னணி என்னவாயிருந்தது ?

16. பவுல் 11 : 9, 10 ல் எந்தப் பழைய ஏற்பாட்டு வசனப்பகுதியை மேற்கோள் காட்டுகிறார்?

17. பவுல் 9, 10, 11 வசனங்களில் தாவீதின் சத்துருக்களுக்கு என்ன நடந்ததோ அது ஏற்கனவே கிறிஸ்துவின் சத்துருக்களுக்கு நடந்துவிட்டது என்று சொல்கிறார். யூதர்களுக்கு எது இடறுதலாக அமைந்தது?

18. இஸ்ரவேலின் ஆவிக்குரிய அலட்சியம் புதிதான ஒன்றா?

குறிப்பு: ரோமர் 9, 10 அதிகாரங்களில் அப்போஸ்தலனாகிய பவுல் இஸ்ரவேலின் மோசமான நிலைமையை விவரமாக விவரித்திருக்கிறார். அதை அடிப்படையாக வைத்து சிலர் தேவன் இஸ்ரவேலை முற்றிலுமாக ஒதுக்கிவிட்டார் என்று நினைக்கிறார்கள் ஆனால், இது உண்மைக்கு தூரமாக இருக்கிறது. பெரும்பாலான இஸ்ரவேலர்கள் இரட்சிக்கப்படாமலிருந்ததற்கு காரணம் தேவனல்ல, தவறு அவர்கள் பக்கத்தில் தான் இருந்தது. அவர்கள் கிறிஸ்துவை விசுவாசிக்க மறுத்து, நியாயப்பிரமாணத்தை அடிப்படையாகக் கொண்டு தங்கள் சுயநீதியின் மேல் தொடர்ந்து நம்பிக்கை கொண்டிருந்தார்கள். ஆனால், அவர்களுடைய மறுப்பு ஒன்றும் புதிதல்ல. எலியாவின் நாட்களில் கூட அவர்களில் பெரும்பாலானோர் பாகாலை வணங்கினார்கள். இருந்தபோதிலும் தேவனுக்கு உண்மையாயிருந்த மீதியானவர்கள் ஏழாயிரம் பேர் இருக்கவே செய்தார்கள். இது பவுலின் நாட்களிலும் உண்மையாகவே இருந்தது. ஒட்டுமொத்த இஸ்ரவேல் தேசத்தையும் ஒப்பிடும்போது மிகக்குறைந்த எண்ணிக் கையிலானவர்களே கிறிஸ்துவினிடத்தில் திரும்பி இரட்சிக்கப்பட்டார்கள்.

தேவன் இஸ்ரவேலர்களைத் தெரிந்துகொண்டது அவருடைய சுத்த கிருபையினால்தான். அவர்களுடைய நீதியின் கிரியைகளினாலல்ல. அவர்கள் தேவனுடைய ஆசீர்வாதங்களுக்குத் தகுதிபெற எதையும் செய்யவில்லை, நாமும் அப்படித்தான், இஸ்ரவேலர்கள் இரட்சிக்கப்படுவதற்கு தொடர்ந்து தங்கள் கிரியைகள் மேல் நம்பிக்கை வைத்தது விருதாவாகப் போய்விட்டது. இதன் பொருள் சிலர் தவறாகப் போதிப்பதுபோல இரட்சிக்கப்படுவதற்கு நாம் எந்த கிரியைகளையும் செய்ய வேண்டியதில்லை என்றாகிவிடாது. இங்கே பவுல் குறிப்பிடும் கிரியைகள் இரட்சிப்புக்குத் தகுதிபெற மனிதனுடைய நற்கிரியைகள் அல்லது நியாயப்பிரமாணத்தின் கிரியைகள் அவசியம். எனவே, நாம் இரட்சிக்கப்பட எந்த கிரியைகளையும் செய்யவேண்டியதில்லை என்பது தவறான உபதேசமாகும். தேவனுக்கு கீழ்ப்படியத்தக்க சில கிரியைகளைச் செய்ய வேண்டும். ஞானஸ்நானமும் அப்படிப்பட்ட கிரியைகளில் ஒன்றாயிருக்கிறது. ✝

# கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுவது ஒரு கட்டளையா?

# Is Eating The Lord's Supper A Command?

Glenn Colley

பல வருடங்களுக்கு முன்பு என் தகப்பனார் Gary Colley Foy Wallace என்னும் சகோதரரோடு உணவு அருந்திக் கொண்டிருந்தார். அந்தச் சகோதரர் இப்போது உயிரோடு இல்லை அவர்கள் ஆகார வேளையில் கர்த்தருடைய பந்தியைப் பற்றி வேதாகமம் என்ன சொல்கிறது என்று பேசிக் கொண்டிருந்தனர். அவர்களுடைய உரையாடல் " இன்று கர்த்தருடைய பந்தியில் பங்குபெறுவது ஒரு கட்டளையா? " என்னும் கேள்விக்கு சிறந்த முறையில் பதிலளிப்பதில் போய் முடிந்தது.

சகோதரர் Wallace ஆழமான வேத அறிவு கொண்டவர். என்னுடைய தனிப்பட்ட நூலகத்தில் அவர் எழுதிய பல புத்தகங்கள் உள்ளன. அந்த நாளில் உணவு வைக்கப்பட்டிருந்த அந்த மேஜையில் இருந்த தாளின் பின்புறத்தில் இன்று நாம் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுவதற்கான ஏழு காரணங்களை எழுதினார். அந்தத் தாளில் கர்த்தருடைய பந்தியை குறிப்பிடும் எல்லா வசனங் களையும் எழுதவில்லை, அந்த வசனங்களை நாம் எங்கே காணமுடியுமென்று தன்னுடைய கருத்துக்களை மாத்திரம் பதிவு செய்தார். நான் இன்று அந்த முழுமையான வசனங்களையும் உங்கள் பரிசீலனைக்கென்றும், உங்கள் பிரயோஜனத்துக்கென்றும் எழுதுகிறேன். இங்கே கர்த்தருடைய பந்தி சம்பந் தமாக பயன்படுத்தப்பட்டிருக்கிற அணுகுமுறையானது மற்ற காரியங்களுக்கு கூட பிரயயோஜனமாயிருக்கும்.

**கர்த்தருடைய பந்தி ஒரு கட்டளையாயிருக்கிறது**

1. ஆதி சீஷர்கள் கர்த்தருடைய பந்தியில் பங்குபெறும்படி கட்டளையிடப்பட் டிருந்தார்கள். (மத்தேயு 26 : 26 - 28).

" அவர்கள் போஜனம் பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து ஆசீர்வதித்து, அதைப்பிட்டு, சீஷர்களுக்குக் கொடுத்து: நீங்கள் வாங்கிப் புசியுங் கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார். பின்பு பாத்திரத்தையும் எடுத்து ஸ்தோத்திரம் பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து: நீங்கள் எல்லாரும் இதிலே பானம் பண்ணுங்கள்; இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக் காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைகுரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது " என்றார். ( மத். 26 : 26 - 28 ). " உங்களைப் புகழாமல் இதைக் குறித்து உங்களுக்குக் கட்டளை கொடுக்கிறேன்; நீங்கள் கூடி வருதல் நன்மைக் கேதுவாயிராமல், தீமைக்கேதுவாயிருக்கிறதே " ( I கொரிந்தியர் 11 : 17 ). எந்த மனுஷனும் தன்னைத் தானே சோதித்தறிந்து இந்த அப்பத்தில் புசித்து இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணக்கடவன் (I கொரிந்தியர் 11 : 28). ஆகையால், என் சகோதரரே நீங்கள் போஜனம்பண்ணக் கூடிவரும்போது, ஒருவருக்காக ஒருவர் காத்திருங்கள் " (I கொரி 11 : 33).

2. அவர்கள் சபை கூடிவரும்படியாக கட்டளைப் பெற்றிருந்தார்கள்.

'' சபை கூடிவருதலைச் சிலர் விட்டு விடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம்; நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்தி சொல்ல வேண்டும் " ( எபிரேயர் 10 : 25).

3. அவர்கள் கூடி வந்தபோது கர்த்தருடைய பந்தியில் பங்கு பெற்றார்கள்.

'' எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணக்கடவன் " (I கொரிந்தியர் 11 : 28). " ஆகையால், என் சகோதரரே, நீங்கள் போஜனம்பண்ணக்கூடிவரும்போது, ஒருவருக்காக ஒருவர் காத்திருங்கள் " (I கொரிந்தியர் 11 : 33).

4. அவர்கள் போஜனம்பண்ணும்படியாகக் கூடினார்கள்.

'' ஆகையால், என் சகோதரரே, நீங்கள் போஜனம்பண்ணக் கூடி வரும் போது, ஒருவருக்காக ஒருவர் காத்திருங்கள் " (I கொரிந்தியர் 11 : 33).

5. அவர்கள் வாரத்தின் முதல்நாளில் கூடி வந்தார்கள்.

'' வாரத்தின் முதல்நாளிலே, அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடிவந்திருக்கை யில், பவுல் மறுநாளிலே புறப்படவேண்டுமென்றிருந்து, அவர்களுடனே சம்பா ஷித்து, நடுராத்திரி மட்டும் பிரசங்கித்தான் " ( அப் 20 : 7 ). நான் வந்திருக் கும்போது பணஞ்சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின்

முதல் நாள்தோறும் தன்தன் வரவுக்குத்தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்துவைக்கக்கடவன்" (I கொரி 16 : 2).

6. அவர்கள் அப்பம் பிட்கும்படி கூடினார்கள்.

" வாரத்தின் முதல் நாளிலே, அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடிவந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்படவேண்டுமென்றிருந்து, அவர்களுடனே சம்பாஷித்து நடுராத்திரி மட்டும் பிரசங்கித்தான்" (அப்போஸ்தலர் 20 : 7).

7. கர்த்தருடைய கட்டளை

" சகோதரரே, நீங்கள் எல்லாவிதத்திலும் என்னை நினைத்துக் கொண்டு, நான் உங்களுக்கு ஒப்புவித்தபடி, நீங்கள் கட்டளைகளைக் கைக்கொண்டு வருகிறதினிமித்தம் உங்களைப் புகழுகிறேன் " ( I கொரி 11 : 2 ). ஒருவன் தன்னைத் தீர்க்கத்தரிசியென்றாவது, ஆவியைப் பெற்றவனென்றாவது எண்ணினால், நான் உங்களுக்கு எழுதுகிறவைகள் கர்த்தருடைய கற்பனைகளென்று அவன் ஒத்துக்கொள்ளக்கடவன்" (I கொரி 14 : 37).

பரிசுத்தவான்களுக்காகச் சேர்க்கப்படும் தர்ம பணத்தைக் குறித்து நான் கலாத்தியா நாட்டுச் சபைகளுக்குப் பண்ணின திட்டத்தின்படியே நீங்களும் செய்யுங்கள். நான் வந்திருக்கும்போது பணஞ் சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல் நாள்தோறும் தன்தன் வரவுக்குத்தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்து வைக்கக்கடவன் " (I கொரிந்தியர் 16 : 2).

---

## எரேமியா நூலில் கிறிஸ்து

1. ஜீவத் தண்ணீர் ஊற்று – எரே. 2 : 13
2. மகா வைத்தியர் – எரே. 8 : 22
3. நல்ல சமாரியர் – எரே. 31 : 10
4. நீதியுள்ள கிளை – எரே. 23 : 5
5. ராஜாவாகிய தாவீது – எரே. 30 : 9
6. மீட்பர் – எரே. 50 : 34
7. நீதியின் கர்த்தர் – எரே. 23 : 6

# நீங்கள் எப்படி ஆராதிக்கிறீர்கள் ?
# How Are You Worshipping ?

Bonnie Rushmore

வெளிநாட்டு ஊழியங்களுக்கான முயற்சியில் கிறிஸ்துவின் சபைகளைக் குறித்து நன்கு பரிச்சயப்பட்ட நானும், சகோதரர் Louis Rushmoreயும் ஒவ்வொரு கர்த்தருடைய நாளிலும் ஒன்று அல்லது இரண்டு சபைகளை சந்திப்பதை வழக்க மாக கொண்டிருந்தோம். நான் அங்கே கவனித்த காரியங்களில் ஒன்று அங்கே கூடிவரும் ஜனங்களில் சிலர் ஆராதனையில் ஊற்சாகமில்லாமல் இருப்பதை கண்டிருக்கிறேன்.



" செயல்கள் வார்த்தைகளை விட உரக்கப்பேசும் " என்னும் வழக்கு மொழி நாம் தேவனை ஆராதிக்கும் போது வெளிப்படையாகத் தெரிகிறது. நாம் ஆராதனை வேளையில் குறிப்புகள் எடுக்காமலிருக்கும்போது, நம்முடைய காரியங்களை பரிமாறிக் கொள்ளும்போது, பாடல் பாட தவறும் போது, ஆராதனை வேளையில் தூங்கும் போது, உற்சாகமின்மையின் போக்கை நாம் வெளிப்படுத்துகிறோம். இத்தகைய செயல்பாடுகள் நிர்பந்தத்தின் பேரில் நாம் தேவனை ஆராதிப்பது போலாகி விடுகிறது. ஆசையாக, மகிழ்ச்சியாக நாம் நம் பரமபிதாவை ஆராதிப்பது போல் இல்லை.

யோவான் 4 : 24 " தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுது கொள்

ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ள வேண்டும் " என்று சொல்கிறது. ஆராதனை என்பதற்கான கிரேக்கப்பதம் ஒருவருக்கு மரியாதை செலுத்தும் விதமாக மற்றொருவர் தன்னை தரை மட்டும் தாழ்த்தி சாஷ்டாங்கமாக பணிவதைக் குறிக்கிறது. நாம் தேவனை சரியான முறையில் ஆராதிக்கும்போது நம் சிருஷ்டிகரை மரியாதையோடு போற்றுகிறோம். இங்கே " ஆவி " என்பது மனரீதியான கிரியையாக இருக்கிறது. நாம் உண்மையோடு தேவனைத் தொழுது கொள்ளலாம். ஆனால், நம் மனநிலை சரியாக இல்லையென்றால் நாம் ஏறெடுக்கும் ஆராதனை தேவனால் ஏற்றுக் கொள்ளப்படாது. ஆராதனை வேளையில் நம் செயல்பாடுகள் எவைகளைக் காட்டுகின்றன? ஆராதனையில் அக்கறையின்மையின் மனப்போக்கைக் காட்டுகிறதா? உண்மையாகவே, நான் இங்கே இருக்க விரும்பவில்லை எனக்கு அலுப்பாக இருக்கிறது, போன்ற மனநிலைகள் வெளிப்படுத்தப்படுகிறதா? அல்லது நம்மைக் காண்கிறவர்கள். நாம் தேவனை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்வதைக் காண்கிறார்களா?

தேவனை ஆராதிக்கும்போது பெரியவர்கள் வெளிப்படுத்தும் விருப்பமின்மை கவலைக்கிடமான ஒன்றாக இருந்தாலும் குழந்தைகளின் செயல்பாடுகள் இன்னும் கவலையை அளிக்கும் ஒன்றாகக் காணப்படுகிறது. மூன்று குழந்தைகளின் தாயாக அவர்கள் குழந்தைகளாக இருந்த போது ஆராதனை வேளைகள் சவாலாக இருந்தன. அவர்களை அடக்குவதும், அமைதிகாக்கும்படியாகச் செல்வதும் உண்மையாகவே சவாலாக இருந்தன. ஆயினும், அக்குழந்தைகளின் வாழ்க் கையில் சில கட்டங்களில் பெற்றோர்கள் அவர்களை அமைதிகாக்கச் செய்வதைவிட ஆராதனை வேளையில் அவர்கள் ஒழுங்காக தேவனை ஆராதிக்கக் கற்றுக் கொண்டிருக்கிறார்களா என்பதை நிச்சயப்படுத்திக்கொள்வது அவசியமாயிருக்கிறது. கீழே நான் ஒரு பட்டியலைக் கொடுத்திருக்கிறேன். அதில் நம் குழந்தைகளுக்கு தேவனை எப்படி ஆராதிப்பது என்று போதிக்கதக்க ஆலோசனைகள் உள்ளன.

- குழந்தைகளுக்கு பாடல் புத்தகத்தை எப்படி பிடிப்பதென்று கற்றுக் கொடுத்து ஆராதனை வேளையில் பாட வையுங்கள். பெரும்பாலான குழந்தைகள் பாடல்கள் பாட விரும்புவார்கள், தத்தி தத்தி தவழும் குழந்தைகள் கூட பாடல்களைப் பாடக் கற்றுக் கொள்வார்கள்.

- ஜெப வேளையில் குழந்தைகள் கைகளை கூப்பி, கண்களை மூடி, தலைகளைத் தாழ்த்தி ஜெபிக்க கற்றுக்கொடுங்கள். இது குழந்தை பருவத்தி லேயே கற்றுக்கொடுக்கப்பட வேண்டும், உணவு வேளையில் ஜெபிக்கும்படி

நாம் குழந்தைகளுக்கு கற்றுக்கொடுக்கிறோம். அதேபோல் ஆராதனை வேளையிலும் நாம் ஜெபிக்கக் கற்றுக் கொடுக்க வேண்டும்.

- சபையில் காணிக்கை சேகரிக்கப்படும் வேளையில் குழந்தைகளுக்கு காணிக்கை கொடுக்கக் கற்றுக் கொடுக்க வேண்டும். நம்முடைய எல்லா ஆசீர்வாதங்களும் தேவனிடத்திலிருந்து வருகிறது. அவைகளை நாம் ஆராதனையில் காணிக்கை வேளையில் தேவனுக்கு கொடுக்க வேண்டும்மென்னும் எண்ணத்தை சிறு பிராயத்திலேயே அவர்களிடம் உருவாக்கிவிட வேண்டும். குழந்தைகள் தங்கள் பிறந்த நாட்களில் இன்னும் வீட்டில் நடக்கும் நிகழ்ச்சிகளில் கிடைக்கும் கொஞ்சம் பணத்தை கர்த்தருக்கென்று கொடுக்கும்படி உற்சாகப்படுத்தப்பட வேண்டும்.

- ஆராதனையில் வசனங்கள் வாசிக்கப்படும்போது குழந்தைகள் அதைத் தங்கள் வேதாகமங்களில் கவனிக்கிறார்களா என்பதை நாம் கண்கா ணிக்க வேண்டும். பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு பிரசங்க வேளையில் குறிப்புகளை எடுக்க கற்றுக் கொடுக்க வேண்டும். இது பிரசங்கத்தின் மீது அவர்கள் தங்கள் மனதை செலுத்த உதவிச் செய்யும். குழந்தைகள் முதிர்ச்சி அடையும்போது தாங்களாகவே குறிப்புகளை எடுத்துக் கொள் வார்கள். ஆனால், நாம் சிறந்த அடித்தளத்தை நாம் அவர்களுக்கு ஏற்ப டுத்திக் கொடுக்க வேண்டும்.

- குழந்தைகள் தேவனை ஒழுங்காக ஆராதிக்கக் கற்றுக் கொள்ளும் வரை அவர்களை நம்மோடு உட்காரும்படி செய்ய வேண்டும். அப்பொழுதான் அவர்களால் கற்றுக் கொள்ள முடியும். அவர்களை மற்ற குழந்தைகளுடன் உட்கார வைப்பது அவர்களுக்கு கவனச் சிதறல்களை ஏற்படுத்தும்.

நாம் நம் பிள்ளைகளுக்கு ஆராதனை வேளையில் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்பது மாத்திரமல்ல. நாம் ஏன் தேவனை ஆராதிக்கிறோம் என்றும் கற்றுக் கொடுக்க வேண்டும்! சில வேளையில் நாம் ஆராதனையின்போது குழந்தைகள் தொந்தரவு செய்யாமல் அமைதியாக இருந்தால் போதுமானது என்று நாம் திருப்திபட்டுக் கொள்கிறோம். இது நமக்கு ஆறுதலாக இருந்தாலும் கூட எப்போதுதான் அவர்கள் தேவனை ஒழுங்காக ஆராதிக்கக் கற்றுக்கொள்வார்கள்? நாம் தேவனை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ள வேண்டும். ஆனால், இது நாம் தேவனை எப்படி ஆராதிக்க வேண்டும்? தேவன் எப்படி ஆராதிக்கப்பட விரும்புகிறார் என்பதை நாம் சரியாகப் புரிந்துகொள்ளும்போது மட்டுமே சாத்தியமாகிறது.

✝

ஆராதனை

# எங்கள் துதியை ஏற்றுக்கொள்ளும்

# Accept Our Praise

Dan R.Owen

இன்று ஜனங்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு செய்தது போலவே நாம் நம் சிருஷ்டிகரும் நம் மீட்பருமாகிய தேவனை ஆராதிக்கும்படியாக கூறுகிறோம். பழைய ஏற்பாட்டிலும் தேவன் தம்முடைய ஜனங்களைத் தம்மை மாத்திரம் ஆரா திக்கும்படி கட்டளையிட்டார். தேவனால் ஏற்றுக்கொள்ளப்படும் ஆராதனை எப்போ துமே தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதை உள்ளடக்கியதாகவே இருந்து வந்திருக்கிறது. ஜனங்கள் அதை செய்யாதபோது, அவர்கள் தங்கள் இஷ்டப்படி தேவனை ஆராதிக்க முயற்சித்தபோது தேவன் அதை ஏற்றுக் கொள்ளவில்லை.

தேவன் தம்முடைய ஜனங்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து, வழிநடத்தியபோது கூட, தமக்கென்று பிரத்யேகமாக ஓர் ஆராதனை ஸ்தலத்தை ஏற்படுத்துமாறு அவர்களுக்கு கட்டளை கொடுத்தார். தேவன் தமக்கான ஆசாரிப்பு கூடாரம் எப்படி இருக்க வேண்டும். அதிலுள்ள தட்டுமுட்டு சாமான்கள் எங்கே வைக்கப்படவேண்டும், எந்தெந்த அளவில் இருக்கவேண்டுமென்றும், ஆராதனையில் எவைகளெல்லாம் செய்யப்படவேண்டுமென்றும் துல்லியமாகக் கட்டளைகளைக் கொடுத்திருக்கிறார். தாவீது எருசலேமில் தேவனுக்கென்று ஓர் ஆலயத்தைக் கட்டினபோது அந்த மாபெரும் மகிமையான அமைப்புக்கு துல்லியமான வடிவமைப்பை தேவன் கொடுத்திருந்தார்.

நீங்களும் நானும் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்ட மக்கள். நாம் மிகவும் மகத்தான காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நமக்கு முன் வாழ்ந்த பரிசுத்தவான் களும், தேவதூதர்களும் அவைகளைக் காணவும், அறியவும் அனுமதிக் கப்படாமல் நம் காதுகள் அவைகளை கேட்கும் பாக்கியத்தைப் பெற்றன. இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்களைப் பார்த்து " உங்கள் கண்கள் காண்கிறதினாலும்,

உங்கள் காதுகள் கேட்கிறதினாலும் அவைகள் பாக்கியமுள்ளவைகள் ". அநேக தீர்க்கதரிசிகளும் நீதிமான்களும் நீங்கள் காண்கிறவைகளைக் காணவும் நீங்கள் கேட்கிறவைகளைக் கேட்கவும் விரும்பியும் காணாமலும், கேளாமலும் போனார் களென்று மெய்யாக உங்களுக்குச் சொல்லுகிறேன் " என்றார் (மத்தேயு 13 : 16 , 17).



ஒவ்வொரு காலக்கட்டத்திலும் தேவனைப் பற்றி ஓரளவு காரியங்களை அறிந்த வர்கள் வாழ்ந்து வந்திருந்தாலும் பரலோகம் போவதற்கான உண்மையான வழி கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டு உயிர்த்தெழும்வரை அது மனித இனத்துக்கு அறிவிக்கப்படவில்லை. கிறிஸ்துவைப்பற்றியும் அவருடைய ஊழியத்தைப் பற்றி யும் முன்னறிவித்த பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் பரிசுத்த ஆவியின் வல்லமை யினாலே அவர்கள் வெளிப்படுத்தினவைகளை முழுமையாகப் புரிந்து கொள்ளவில்லை.

கிறிஸ்துவைப் பற்றிய இரகசியம் இப்பொழுது அவருடைய பரிசுத்த அப்போஸ் தலருக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் ஆவியானவராலே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது போல முற்காலங்களில் மனுபுத்திரருக்கு அறிவிக்கப்படவில்லை. ஆதாமிலிருந்து மோசே வரையிலான முற்பிதாக்களின் காலகட்டத்தில் தேவன் ஆதாம் நோவா ஆபிரகாம், ஈசேக்கு மற்றும் யாக்கோபு போன்ற குடும்பத்தலைவர்களிடத்தில்

நேரடியாகப் பேசினார். தேவன் எல்லாரிடத்திலும் பேசவில்லை. ஆனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களிடத்தில் தேவன் தாம் திட்டமிட்டிருந்தபடியே இஸ்ரவேல் வம்சத்திலிருந்து இவ்வுலகத்திற்கு இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவை அனுப்புவதற்கு இஸ்ரவேல் தேசத்தை ஆயத்தப்படுத்துவதற்கான ஆரம்ப கட்ட வேலையை நடப்பித்தார்.

நாம் வாழும் இக்காலம் தான் கடைசிக் காலமாயிருக்கிறது. இக்காலத்தில் " இருள் நீங்கி மெய்யான ஒளி இப்பொழுது பிரகாசிக்கிறது " ( I யோவான் 2 : 8 ) இப்பொழுது தேவன் தனிப்பட்ட குடும்பங்களோடோ அல்லது தேசத்தோடோ மாத்திரம் இடைபடுவ தில்லை. சுவிசேஷம் முன்பு யூதருக்கும், பின்பு கிரேக்கருக்கும் அதாவது ஒட்டு மொத்த உலகத்திற்கும் சொந்தமாயிருக்கிறது ( யோவான் 1 : 16 ) இந்தச் சுவிஷேசம் சர்வ சிருஷ்டிக்கும் பிரசங்கிக்கப்பட வேண்டுமென்று கிறிஸ்து கட்டளையிட்டிருக்கிறார் மேற்சுறப்பட்ட காரியங்களை வைத்துப் பார்க்கும் போது இக்காலக்கட்டத்தில் வாழும் நாம் பாக்கிவான்கள்தான்.

## பேழையும், சபையும்

| வேதாகமம் | பேழை | சபை |
|---|---|---|
| கட்டினவர் ஒருவரே | நோவா ( ஆதி 6 : 13 – 22 ) | கிறிஸ்து ( மத் 16 : 18 ) |
| ஒரே பொருள் | கொப்பேர் மரம் ( ஆதி 6 : 14 ) | ஜீவனுள்ள கற்கள் ( I பேதுரு 2 : 5 ) |
| ஒரே வெளிச்சம் | ஜன்னல் ( ஆதி 6 : 16 ) | வேதாகமம் ( சங்கீதம் 119 : 105 ) |
| ஒரே வாசல் | கதவு ( ஆதி 6 : 16 ) | கிறிஸ்து ( யோவான் 10 : 9 ) |
| ஒரே குடும்பம் | நோவாவின் ( ஆதி 6 : 18 ) | தேவனின் ( கலாத் 3 : 10 ) |
| ஒரே பெயர் | நோவாவின் ( ஆதி 6 : 18 ) | கிறிஸ்தவன் ( அப் 11 : 26 ) |
| ஒரே கட்டடம் | பேழை ( ஆதி 6 : 14 ) | சபை ( எபேசியர் 3 : 10 ) |
| ஒரே இரட்சிப்பு | பேழையில் ( ஆதி 7 : 21 – 23 ) | கிறிஸ்துவிலும் மற்றும் சபையிலும் ( அப் 2 : 47 ) |
| ஒரே அழிவு | எல்லாமே பேழைக்கு வெளியே ( ஆதி 7 : 21) | எல்லாமே கிறிஸ்துவின் சபைக்கு வெளியே ( II தெச 1 : 7 – 9 ) |
| ஒரே நம்பிக்கை | புதிய உலகம் ( ஆதியாகமம் 8 ) | நித்திய ஜீவன் ( I பேதுரு 1 : 34 ) |

ஆராதனை

# அவருடைய மகத்துவத்தை ஆராதியுங்கள்

# Worship His Majesty

Darla Rosinski

" ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று ; உண்டானதொன்றும் அவராலே யல்லாமல் உண்டாகவில்லை. அவருக்குள் ஜீவன் இருந்தது, அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது " (யோவான் 1:1-4).

" அவன் தன் முதற்பேறான குமாரானைப் பெற்று சத்திரத்திலே அவர்களுக்கு இடமில்லாதிருந்தபடியினால் பிள்ளையைத் துணிகளில் சுற்றி, முன்னிலை யிலே கிடத்தினான் "(லூக்கா 2 : 7).

" கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது. அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல் தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமை யின் ரூபமெடுத்து மனுஷர் சாயலானார். அவர் மனுசரூபமாயக் காணப் பட்டு மரணபரியந்தம் அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார் " (பிலிப்பியர் 2 : 5 , 8).

அப்பொழுது யோவானால் ஞானஸ்நானம் பெறுவதற்கு இயேசு கலிலே யாவை விட்டு யோர்தானுக்கு அருகே அவனிடத்தில் வந்தார். யோவான் அவருக்குத் தடை செய்து நான் உம்மாலே ஞானஸ்நானம் பெறவேண்டியதா யிருக்க, நீர் என்னிடத்தில் வரலாமா என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத் தரமாக இப்பொழுது இடங்கொடு இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது என்றார். அப்பொழுது அவருக்கு இடங்கொடுத்தான் (மத்தேயு 3 : 13 , 15) .

அப்பொழுது இயேசு அவர்களை கிட்டவரச் செய்து : புறஜாதியாருடைய அதிகாரிகள் அவர்களை இறுமாப்பாய் ஆளுகிறார்களென்றும் பெரியவர்கள் அவர்கள் மேல் கடினமாய் அதிகாரஞ் செலுத்துகிறார்கள் என்றும் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது : உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால் அவன் உங்க ளுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக்கடவன். உங்களில் எவனாகிலும் முதன்மையாயிருக்க விரும்பினால் அவன் உங்களுக்கு ஊழியக்கார னாயிருக்கடவன். அப்படியே மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல் ஊழியம் செய்யவும் அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்றார் (மத்தேயு 20 : 25 - 28).

" மேலும் நான் உனக்குச் சொல்லுகிறேன் நீ பேதுருவாய் இருக்கிறாய் இந்தக் கல்லின்மேல் என் சபையைக்கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை " (மத்தேயு 16 : 18).

" மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்ல. அனுப்பப்பட்டவன் தன்னை அனுப்பினவரிலும் பெரியவனல்ல " (யோவான் 13 : 16).

" அவர்கள் பந்தியமர்ந்து போஜனம் பண்ணுகையில், இயேசு அவர்களை நோக்கி என்னுடனே புசிக்கிற உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக் கொடுப் பான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் " (மாற்கு 14 : 18).

" நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறதுமல்லாமல் இவர் களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காவும் வேண்டிக் கொள்ளுகிறேன். அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும் பிதாவே நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக் கொள்ளுகிறேன் " (யோவான் 17 : 20, 21).

" முள்ளுகளால் ஒரு முடியைப் பின்னி அவர் சிரசின் மேல் வைத்து அவர் வலது கையில் ஒரு கோலைக் கொடுத்து அவர் முன்பாக முழங்கால்படியிட்டு யூத ருடைய ராஜாவே, வாழ்க என்று அவரைப் பரியாசம் பண்ணி அவர் மேல் துப்பி, அந்தக்கோலை எடுத்து, அவரைச் சிரசில் அடித்தார்கள் " (மத்தேயு 27 : 29 , 30).

" மற்றவர்களை இரட்சித்தான் ; தன்னைத்தான் ரட்சித்துக் கொள்ளத் திராணி இல்லை. இவன் இஸ்ரவேலின் ராஜாவானால் இப்பொழுது சிலவை யிலிருந்து இறங்கி வரட்டும், அப்பொழுது இவனை விசுவாசிப்போம் " (மத்தேயு

27:42).

" அப்பொழுது இயேசு ; பிதாவே இவர்களை மன்னியும். தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்றார். அவருடைய வஸ்திரங்களை அவர்கள் பங்கிட்டுச் சீட்டுப்போட்டார்கள்" (லூக்கா 23:34)

" இயேசு : பிதாவே உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்று மகா சத்தமாய்க் கூப்பிட்டுச் சொன்னார் ; இப்படிச் சொல்லி ஜீவனை விட்டார் " (லூக்கா 23:46)

" உயிரோடிருக்கிறவரை நீங்கள் மரித்தோரிடத்தில் தேடுகிறதென்ன? அவர் இங்கே இல்லை அவர் உயிர்த்தெழுந்தார். மனுஷகுமாரன் பாவிகளான மனுஷர் கைகளில் ஒப்புக்கொடுக்கப்படவும், சிலுவையில் அறையப்படவும், மூன்றாம் நாளில் எழுந்திருக்கவும் வேண்டுமென்பதாக அவர் கலிலேயாவிலிருந்த காலத்தில் உங்களுக்குச் சொன்னதை நினைவுகூருங்கள் என்றார்கள் " ( லூக்கா 24:5-7).

" அவர் பாடுபட்டபின்பு நாற்பது நாளவும் அப்போஸ்தலருக்குத் தரிசனமாகி தேவனுடைய ராஜ்யத்துக்குரியவைகளை அவர்களுடனே பேசி அநேகம் தெளிவான திருஷ்டாந்தங்களினாலே அவர்களுக்குத் தம்மை உயிரோடிருக்கிற வராகக் காண்பித்தார்" (அப்போஸ்தலர் 1:3).

" இவைகளை அவர் சொன்ன பின்பு அவர்கள் பார்த்துக் கொண்டிருக் கையில் உயர எடுத்துக் கொள்ளப்பட்டார். அவர்கள் கண்களுக்கு மறைவாக ஒரு மேகம் அவரை எடுத்துக் கொண்டது. " அவர் போகிறபோது அவர்கள் வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கையில் இதோ, வெண்மையான வஸ்திரந் தரித்தவர்கள் இரண்டுபேர் அவர்களருகே நின்று கலிலேயராகிய மனுஷரே நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத் தினின்று வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப் போனாரோ அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள்" (அப்போஸ்தலர் 1:9,11).

" ஆதலால் தேவன் எல்லாவற்றிக்கும் மேலாக அவரை உயர்த்தி இயேசு வின் நாமத்தில் வானோர் பூதலம்தோர் பூமியின் கீழானோருடை முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும் பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்படிக்கும் எல்லா நாமத் திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்" (பிலிப்பியர் 2:9-11).

அவருடைய மகத்துவத்தை ஆராதியுங்கள். நாம் வார்த்தையாகிய இயேசு

கிறிஸ்துவின் சிருஷ்டியாயிருக்கிறோம். நாம் தான் பாவத்தையும், மரணத் தையும் தெரிந்து கொண்டோம். நம் சிருஷ்டிகர் " பாவமில்லாத வாழ்க்கை வாழும்படியாக இப்பூமிக்கு வந்தார். அதன் மூலம் அவர் சிறந்த பலியாக இருந்து நம்மை இரட்சிக்க முடிந்தது. தன் விருப்பத்திற்கு தன் வழியை தெரிந்து கொள்ளுகிறவன் அவருடைய பலிகளினால் உண்டாகும் நன்மைகளிலிருந்து தடை செய்யப்படுகிறான். அவருடைய மகத்துவத்தை ஆராதியுங்கள். அவரு டைய சபையில் அங்கமாயிருங்கள் ; கிறிஸ்து அதற்காக மரித்தார், மூன்று நாட்க ளுக்குப் பிறகு அவர் உயிரோடு எழுந்தார். அவர் ஜெயித்தார்! நாம் அவருடைய வழியாகிய அவருடைய ஈவை மகிழ்ச்சியாக ஏற்றுக்கொள்ள வேண்டும். ✞

---

# நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்கள்?

" யாக்கோபே, நான் அழைத்திருக்கிற இஸ்ரவேலே, எனக்குச் செவிகொடு; நான் அவரே, நான் முந்தினவரும், நான் பிந்தினவருமாமே (ஏசாயா 48 : 12).

" என் கரமே பூமியை அஸ்திபாரப்படுத்தி, என் வலதுகை வானங்களை அளவிட்டது; நான் அவைகளுக்குக் கட்டளையிட, அவைகள் அனைத்தும் நிற்கும் " (ஏசாயா 48 : 13).

" நீங்கள் என் சமீபத்தில் வந்து நான் சொல்வதைக் கேளுங்கள்; நான் ஆதிமுதற்கொண்டு அந்தரங்கத்தில் பேசவில்லை; அது உண்டான காலந்துவக்கி அங்கே நான் இருந்தேன்; இப்பொழுதோ கர்த்தராகிய ஆண்டவரும், அவருடைய ஆவியும் என்னை அனுப்புகிறார் " (ஏசாயா 4 : 16).

" தீவுகளே, எனக்குச் செவிகொடுங்கள்; தூரத்திலிருக்கிற ஜனங்களே கவனியுங்கள்; தாயின் கர்ப்பத்திலிருந்தது முதல் கர்த்தர் என்னை அழைத்து, நான் என் தாயின் வயிற்றில் இருக்கையில் என் நாமத்தைப் பிரஸ்தாபப்படுத்தினார் ( ஏசாயா 49 : 1).

" யாக்கோபைத் தம்மிடத்தில் திருப்பும்படி நான் தாயின் கர்ப்பத்திலிருந்தது முதல் கர்த்தர் தமக்குத் தாசனாக என்னை உருவாக்கினார்; இஸ்ரவேலோ சேராதே போகிறது; ஆகிலும் கர்த்தருடைய பார்வையில் கனமடைவேன். என் தேவன் என் பெலனாயிருப்பார் " (ஏசாயா 49 : 5).

மேற்சொல்லப்பட்ட வசனங்களில் ஆதியில் வார்த்தையாக இருந்த கிறிஸ்து தம்மைப் பற்றி தீர்க்கதரிசனமாகப் பேசுகிறார்.

# " நீ உனக்குக் கெடுதி ஒன்றுஞ் செய்து கொள்ளாதே "

# Do Yourself No Harm!

Barry C.Poyner

அமெரிக்க ஐக்கிய தேசத்தில் கொலையினால் மரிப்பதைவிட தற்கொலையினால் மரிக்கும் மக்கள் அதிகமாயிருக்கிறார்கள். தோராயமாக, வருடந்தோறும் 30,000 பேர் தற்கொலையினால் மாண்டு போகிறார்கள், ஆனால் கொலையினால் 16,000 பேர்தான் மாண்டு போகிறார்கள். இச்சூழ்நிலையை வைத்துப் பார்த்தால் பெயர் தெரியாத கொலைகாரனுக்கு பயப்படுவதைவிட உங்களைக் குறித்து நீங்களே அதிகம் பயப்பட வேண்டியதாயிருக்கிறது! 15 - 24 வயதிலுள்ள வாலிபர்கள் மத்தியில் தற்கொலைகள்தான் மரணத்திற்கு மூன்றாவது காரணமாயிருக்கிறது, அதுவும் குறிப்பாக, அமெரிக்க வெள்ளை வாலிபர்கள் மத்தியில் தற்கொலைதான் மனச்சோர்வு மற்றும் குழப்பத்திற்குத் தீர்வாக இருக்கிறது. கடந்த இருபது வருடங்களில், 65 வயதுக்கு மேற்பட்ட அமெரிக்கர்கள் மத்தியில் அதிலும் குறிப்பாக விவாகரத்தானவர்கள் மத்தியில் தற்கொலை வீதம் கணிசமான அளவு உயர்ந்திருக்கிறது, இப்பிரிவில் ஆண்கள் 84 சதவீதம் என்பது குறிப்பிடத்தக்கது. நம்முடைய ஆயுட்காலம் அதிகமாயிருக்கலாம், ஆனால் நாம் சிறந்த வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்று சொல்லி விட முடியாது. தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் இத்தகைய இழிவான செயல்களில் ஈடுபடக்கூடாது, மாறாக, நாம் மரணபரியந்தம் தேவனுக்கு உண்மையாயிருந்து, தேவனுடைய வேளைக்கு நம்மை நாம் ஒப்புக்கொடுக்க வேண்டும்.

பிலிப்பி பட்டணத்து சிறைச்சாலைக்காரன் (அப். 16 : 23 - 34) தன் உயிரை மாய்த்துக் கொள்ளப் பார்த்தான். ஆனால், அப்போஸ்தலனாகிய பவுலால் தடுத்து நிறுத்தப்பட்டான். " நீ உனக்குக்கெடுதி ஒன்றுஞ்செய்து கொள்ளாதே; நாங்கள் எல்லாரும் இங்கேதான் இருக்கிறோம் ". அது இன்றும் உண்மையாயிருக்கிறது, நாங்கள் உங்களுக்கு உதவ ஆயத்தமாயிருக்கிறோம். நாட்டுச் சட்டத்தை மீறி அதன் காரணமாக தண்டனையை அனுபவித்து வரும் கைதிகளை விடுவிப்பவர்களுக்கு மரண தண்டனை கொடுப்பது ரோமச்சட்டமாயிருந்தது. இங்கே சிறைச்சாலைக்காரன் தன் உயிரை மாய்த்துக்கொள்ள ஆயத்தமாயிருந்தான்.

பவுலும், சீலாவும் தேவனைத் துதித்துப் பாடிக்கொண்டிருந்த போது சிறைச் சாலைக்காரன் தூங்கிக்கொண்டிருந்தான். ஆனால், இப்போது " ஆண்டவரே, இரட்சிக்கப்படுவதற்கு என்ன செய்ய வேண்டும் " என்று கேட்டான். தேவனால் உங்களைத் தற்கொலை முயற்சியிலிருந்தும், அழிவுக்கேதுவான பாவ வாழ்க்கையிலிருந்தும் மன்னிக்க முடியும்.



ஆனால், துக்ககரமான காரியம் என்னவென்றால் பலர் சாவதைவிட வாழ அதிகமாக பயப்படுகிறார்கள்! இயேசு கிறிஸ்து நமக்கு பரிபூரண ஜீவனைத் தரும்படி இவ்வுலகத்திற்கு வந்தார் (யோவான் 10 : 10). அவர் நமக்கு ஆதரவாக இருப்பதற்கும், நமக்கு உதவுவதற்காக ஆவிக்குரிய குடும்பமாக சபையை தந்திருக்கிறார். அவர் பாடுகளை, உபத்திரவங்களை, வியாதிகளை நமக்கு விலக்கவில்லை. ஆனால், அவர் நமக்கு உபத்திரவங்களிலிருந்து தப்பித்துக் கொள்ளும்படியான போக்கையும் தந்து, அவைகளை எதிர்கொள்ளும் திராணியையும் தந்து, இவ்வுலகத்திற்கு அப்பால் காரியங்களைக் காணும்படியான கண்ணோட்டத்தையும் தந்திருக்கிறார், இது தேவனற்றவர்களுக்கு கொடுக்கப்படவில்லை.

வேதாகமத்தில் ஐந்து தற்கொலை சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு சம்பவமும் பரிதாபகரமானது. சவுல் ராஜாவுக்கு ஒரு காலக் கட்டத்தில் எல்லாம் இருந்தது. ஆனால், அவன் ராஜாவாகிய ஆகாகை தப்புவித்து தேவனுடைய திட்டத்தை அலட்சியப்படுத்தினான். தேவன் அவனை ராஜ்ய பாரத்திலிருந்து நீக்கத் தீர்மானித்தார். அவன் தேவனுடைய தண்டனையை ஏற்க மறுத்து, பதவியை உறுதியாகப் பிடித்துக் கொண்டிருந்தான். பதவியை தக்க வைக்க அவன் எடுத்துக்கொண்ட வீணான முயற்சிகள் அவனை மனக்கிலேச முடையவனாக மாற்றியது, அது அவனை அஜாக்கிரதையான வாக்குத்தத் தங்களை அள்ளி வீசச் செய்தது, கொலை முயற்சியில் ஈடுபடச்செய்தது. கடைசியில், குறிசொல்லுகிறவளிடத்திலும் கொண்டு சென்றது. கடுமையாகக் காயமடைந்த சவுல் தன் ஆயுததாரியிடம் பட்டயத்தை உருவி தன்னைக் கொன்றுபோடும்படி கேட்டுக்கொண்டான். ஆயுததாரி அதற்கு மறுத்த போது சவுல் பட்டயத்தை நட்டு அதின்மேல் விழுந்து தன் உயிரை மாய்த்துக் கொண்டான். அதைக் கண்ட ஆயுததாரியும் பட்டயத்தின் மேல் விழுந்து செத்துப் போனான் (I நாளாகமம் 10 ). சவுல் தேவனற்றவனாக, நம்பிக்கையற்றவனாக மரித்தான். அகித்தோப்பேல் தாவீது ராஜாவுக்கு ஆலோசனைக்காரனாக இருந்தான், ஆனால், அப்சலோமின் கலகத்திற்கு உடன்பட்டார். அவன் அப்சலோமிடம் தாவீதின் மறுமனையாட்டிகளிடத்தில் பிரவேசிக்கும்படி ஆலோசனைச் சொன்னான். அப்சலோமும் அதற்கு செவிகொடுத்து அந்த இழிவான செயலைச் செய்தான் (II சாமுவேல் 16 : 21 - 23). மேலும், இந்த அகித்தோப்பேல் தாவீதைப் பின் தொடரும்படி ஆலோசனை கொடுத்தான். அவன் தாவீதை பிடிப்பதற்காக வகுத்த இராணுவ யுக்தி தோல்வியடைந்தபடியால் தன் வீட்டுக்குப் போய் நான்று கொண்டு செத்தான் (II சாமுவேல் 17 : 23). தற்கொலை என்பது கலகத்தைப் போன்று ஒரு சுயநலமான செயலாகும். இந்த அகித்தோப்பேல் தேவனுடைய திட்டங்களைப் பற்றி அக்கறையற்ற ஒரு சுயநலவாதியாகத்தான் இருந்தான்.

வடக்கு இஸ்ரவேலின் ராஜாக்கள் கொடூரமான விக்கிரக ஆராதனைக்காரர்களாக இருந்தார்கள். பட்டயத்தை எடுப்பவர்கள் பட்டயத்தினால்தான் சாவார்கள் என்பதற்கு மிகச் சிறந்த சான்று சிம்ரி. இந்த சிம்ரி பாஷாவின் குமாரனாகிய ஏலாவை கொன்று போட்டான். அதற்குப் பிறகு பாஷாவின் சந்ததி எல்லோரையும் கொன்று போட்டான், இத்தனைக்கும் இந்த சிம்ரி ராஜா வடக்கு இஸ்ரவேலை ஒரு வாரம் தான் ஆண்டான்! இந்த சிம்ரி ராஜா மக்களால் நிராகரிக்கப்பட்டான், அவனுக்கு பதிலாக ஓம்ரி ராஜாவாக அரியணையில் அமர்ந்தான். தன்னுடைய அழிவு அருகிலிருப்பதை அறிந்த சிம்ரி தன் அரண்மனைக்குப் போய் தீவைத்து செத்துப்போனான் (I ராஜாக்கள் 16 : 15 - 20). அவன் தேவனில்லாமல் மரித்து, மனித தண்டைக்குப் பயந்து தற்கொலை செய்து கொண்டான்.

ஐந்தாவதாக, யூதாஸ் காரியேத் தற்கொலை
பார்க்கிறோம். பன்னிரெண்டு அப்போஸ்தலர்களு
பணப்பையை வைத்திருக்கும் பொருளாளராக பணி
கிறிஸ்து மீது தைலம் ஊற்றப்பட்டதைக் குறித்து விமர்சித்
ஆசை அவனைத் திருட வைத்தது (யோவான் 12 : 4 – 6).
அவனை கிறிஸ்துவைக் காட்டிக் கொடுக்கத் தூண்டியது (மத்

யூதாசின் வீழ்ச்சிக்குக் காரணம் அவன் பேராசைதான்.
கிறிஸ்துவை காட்டிக் கொடுத்த பின்பு அந்த செயலுக்காக வருத்
தாபப்பட்டான், இயேசுவை காட்டிக் கொடுத்ததினால் கிடைத்த பண
இரத்தப் பணமாக எண்ணி அதை யூதத் தலைவர்களிடத்தில் ஏற
புறப்பட்டுப்போய் நான்று கொண்டு செத்தான் (மத்தேயு 27 : 1 – 9 ; அப்
1 : 17, 18). இயேசு கிறிஸ்துவைக் காட்டிக்கொடுத்ததைக் குறித்து யூதாசுக்கு
தாபம் இருந்தது, ஆனால், அது உலகப்பிரகாரமான மனஸ்தாபம்தான்.
இயேசுவை காட்டிக் கொடுத்ததற்காக வருத்தப்பட்டான். ஆனால், அவன் தே
டத்தில் திரும்பவில்லை. தேவனுக்கேற்ற துக்கம் பின்பு மனஸ்தாபப்படுகிறதற்
இடமில்லாமல் மனந்திரும்புதலை உண்டாக்குகிறது (II கொரிந்தியர் 7 : 8 – 11).

தற்கொலை என்னும் வார்த்தை வேதாகமத்தில் இடம்பெறவில்லை. ஜீவன் மீதான தேவனுடைய மதிப்பு அதைப்பற்றி சிந்திக்கவே வைப்பதில்லை. தேவன் நமக்கு கொடுத்த ஜீவனை நாமே எடுத்துக்கொள்ள நமக்கு அதிகாரமில்லை. மேலும், பிசாசு இயேசு கிறிஸ்துவை தேவாலயத்து உப்பரிகையின் மேல் நிறுத்தி நீர் தேவனுடைய குமாரனேயானால் தாழக்குதியும் என்று சோதித்தபோது இயேசு அதற்கு உட்படாமல் " உன் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சை பாராதிருப்பாயாக " என்று சொன்னார் (மத்தேயு 4 : 5 – 7).

சில வேளைகளில் ஜனங்கள் தற்கொலை உணர்வில்லாமல் மரணத் துக்காக ஏங்கலாம். தண்டனைக்கு தப்பித்துக் கொள்ள விரும்புபவர்கள் அப்படி விரும்பலாம். வெளி 9 : 6 ; எரேமியா 8 : 3 ; எலியா I ராஜாக்கள் 19 : 4 ; (யோபு 3) யோனா போன்றோர் நெருக்கடியான வேளைகளில் மரணத்திற்காக ஏங்கியிருக் கிறார்கள். சிமியோன் தன் வாழ்க்கை பூரணமடைந்துவிட்டபடியால் இப்போது நான் சாகலாம் என்று நினைத்தான் (லூக்கா 2 : 29). பவுல் சாவு தனக்கு ஆதா யம் என்பதை அறிந்திருந்தார் (பிலிப் 1 : 20 – 23). ஆனால், தேவ மனிதர் கள் சாக விரும்பினாலும் உயிரை மாய்த்துக் கொள்ளவில்லை. சூழ்நிலைகள் நம் மை தடுமாறச் செய்யலாம், நம்மைத் தற்கொலைச் செய்யத் தூண்டலாம். அந்த பிலிப்பி பட்டணத்து சிறைச்சாலைக்காரன் தன் உயிரை மாய்த்திருக்கலாம், ஆனால், அவன் தேவனுடைய வார்த்தைக்கு செவிகொடுத்தான். இறுதியான வெற்றியைப் பெற கிறிஸ்துவின் மரணம் அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலில் பங்குபெறுங்கள். உங்களுக்கு கெடுதி ஒன்றுஞ் செய்து கொள்ளாதீர்கள்! ✝

# உபத்திரவத்தின் வழியாய் பெலனும் நம்பிக்கையும்

# Strength And Hope Through Tribulation

Wayne Barrier

**தே**வனுடைய ராஜ்யத்தை விஸ்தாரப்படுத்தி அல்லது விரிவாக்கி அதைக் கட்டுவதற்கு தேவன் நமக்கு கொடுக்கும் வேலைகளை நிறைவேற்றுவதற்கு ஒவ்வொரு கிறிஸ்தவனும் பெலனுள்ளவனாயும், திறமைமிக்கவனாயும் இருக்க ஆசைப்பட வேண்டும் (எபெசியர் 4 : 12 - 15). நாம் தேவனுடைய உதவிக்காக ஜெபிக்கிறோம். நாம் பெலனுக்காக, ஞானத்துக்காக, வழிநடத்தலுக்காக ஜெபிக்கிறோம். இவ்விண்ணப்பங்களுக்கெல்லாம் தேவனுடைய பதிலை நாம் அடையாளங் கண்டு கொள்ளாமல் இருக்கலாம். வேதாகமத்தில் பல வசனப்பகுதிகள் உபத்திரவத்தின்போது நாம் பெலப்படுத்தப்படுகிறோம் என்று வலியுறுத்துகின்றன. நாம் பல வேளைகளில் உபத்திரவத்தின் போது சோர்ந்து போகிறோம், ஆனால், உண்மையாக நாம் பார்க்கும்போது உபத்திரவத்தில் நாம் பெலனடைகிறோம். வேதாகமத்தின் போதனை அப்படியாகத்தான் இருக்கிறது. ரோமர் 5 : 1- 6 " இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம். அவர் மூலமாய் நாம் இந்தக் கிருபையில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை விசுவாசத்தினால் பெற்று நிலைகொண்டிருந்து, தேவ மகிமையை அடைவோமென்கிற நம்பிக்கையினாலே மேன்மைபாராட்டுகிறோம். அதுமாத்திரமல்ல, உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும் உண்டாக்குகிறதென்று நாங்கள் அறிந்து, உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்டுகிறோம். மேலும், நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால், அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது. அன்றியும் நாம் பெலனற்றவர்களாயிருக்கும்போதே, குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்

தார். " அந்தப்பெலனும், நம்பிக்கையும் உபத்திரவத்தின் வழியாக நாம் பெற்றுக் கொள்கிறோம் என்று அப்போஸ்தலனாகிய பவுல் போதித்தார்.

மேலும், பவுல் " அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவ பக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள் " என்று சொல்லியிருக்கிறார் ( II தீமாத்தேயு 3 : 12 ). இவ்வசனப்பகுதியில் பவுல் வல்லமையான சுவிசேஷப் பிரசங்கியார்களையும், போதகர்களையும் தீமோத்தேயுவுக்கு கட்டளையிடும் போது மேற்சொல்லப்பட்ட வார்த்தைகளைச் சொல்லியிருக்கிறார். மேலும், யாக்கோபு 1 : 2 - 4 வசனங்களில் யாக்கோபின் வார்த்தைகளைக் கவனியுங்கள் " என் சகோதரரே, நீங்கள் பலவித மான சோதனைகளில் அகப்படும் போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள். நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர் களாயிராமல், பூரணராயும், நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி, பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது. " நாம் தேவனுக்கு சிறந்த வேலையாட்களாக இருக்கவும், தேவனுடைய சித்தத்தை திறம்படச் செய்ய தேவனிடம் ஞானத்தை நாம் கேட்கும்போது அது சோதனைக்கான ஒரு விண்ணப்பமாகத்தான் இருக்கிறது. தேவன் நம்முடைய தேவைகளை அறிவார், நம்முடைய ஞானத்திற்காக ஜெபிக்க வேண்டும். அது நம் தேவைகளையும், சூழ்நிலைகளையும் நாம் சிறப்பாக புரிந்து கொள்ள உதவி செய்யும். யாக் கோபு 1 : 5 " உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்து கொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும் ".

நாம் தாக்கத்தை ஏற்படுத்துகிறவர்களாகவும், பலன் கொடுக்கிறவர்களாகவும் இருக்க வேண்டுமென்றால் நாம் பெலனுள்ளவர்களாக இருக்க வேண்டும். பலத்திற்கான பாதை பாடுகள், உபத்திரவங்கள், சோதனைகள் தான்.

✝

தனக்குத் தானே விரோதமாய் பிரிந்திருக்கிற எந்த இராஜ்ஜியமும் பாழாய்ப்போம். தனக்குத் தானே விரோதமாயப் பிரிந்திருக்கிற எந்த வீடும் விழந்துபோம். (லூக். 11: 17). இந்த உண்மை " சபைக்கு " பொருந்தாதா?

# நீங்கள் மற்றவர்களிடமிருந்து சிறந்ததை வெளியேக் கொண்டு வருகிறீர்களா? அல்லது மோசமானதை வெளியே கொண்டு வருகிறீர்களா?

# Do You Bring Out The Best Or The Worst In Others?

W.T. Allison

கால் நூற்றாண்டுக்கு முன்பாக John Hopkins பல்கலைக் கழகத்தில் பணிப்புரிந்த ஒரு சமூகவியல் பேராசிரியர் தன் வகுப்பு மாணவர்களிடம் ஓர் ஆராய்ச்சியை மேற்கொள்ளும்படி கேட்டுக்கொண்டார். அதாவது, மிக மோசமான குடிசைப் பகுதிக்கு சென்று 200 சிறுபைன்களின் சூழ்நிலையை படிக்கும்படி கேட்டுக்கொண்டார். அந்த மாணவர்கள் அந்த குடிசைப்பகுதியில் வாழ்ந்த சிறுபையன்களின் பழக்க வழக்கங்கள், வீடுகள், அவர்களுடைய கல்வி போன்றவைகளைப் படித்த பிறகு, அந்த சிறுபையன்களில் எத்தனைபேர் வருங்காலத்தில் குற்றவாளிகளாக மாறுவார்கள் என்று ஆய்வறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும். மாணவர்களின் ஆய்வறிக்கை, ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்ட 200 சிறுபையன்களில், 180 பேர் சிறை செல்வார்கள் என்று முன்னறிவித்தது.

இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகு அதே பேராசிரியர் மற்றுமொரு வகுப்பு மாணவர்களிடம் பழைய மாணவர்களின் கூற்றின் நம்பகத்தன்மையை உறுதி செய்ய அந்த 200 சிறுபையன்களின் இருப்பிடத்தைக் கண்டறியும்படி கேட்டுக் கொண்டார். அதில் பெரும்பாலான சிறுபையன்கள்

கண்டறியப்பட்டனர். அதில் மாண வர்கள் ஆச்சரியப்படத்தக்க சிறுபையன்களில் 200ல் 4 பேர் மட்டுமே சிறைக்குச் சென்றிருக்கிறார்கள். பெரும்பாலானோர் நல்ல குடிமக்களாக இருந்திருக்கிறார்கள்.

இருபத்தைந்து வருடங்களுக்கு முன்பு பார்த்த அந்த சிறுபையன்கள் இப்போது பெரியவர்களாகி விட்டார்கள், அவர்களிடம் பேசும்போது அவர்களுடைய வாழ்க்கையில் பொதுவான அம்சம் ஒன்று இருந்ததைக் கண்டறிந்தோம். ஒவ்வொருவரும் ஒரே ஆசிரியரால் போதிக்கப்பட்டார்கள். பல்கலைக் கழக சமூகவியல் வகுப்பு மாணவர்கள் அந்த ஆசிரியரின் இருப்பிடத்தைக் கண்டுபிடித்தனர், அந்த ஆசிரியர் எழுபது வயது மதிக்கத்தக்க ஒருவராக ஒரு மருத்துவமனையில் இருந்தார். அந்த ஆசிரியரிடம் சிறுபையன்களின் சூழ் நிலை எதிராக இருந்த போதிலும் எப்படி அவர்களை சிறந்த, நல்ல மனிதர்களாக மாற்றினீர்கள் என்று கேட்டபோது அவர் " நான் அவர்களுக்கு கொடுத்ததெல்லாம் ஒன்று தான். அது **அன்பு** மட்டும் தான் "என்று பதிலளிதார்

அன்பு, சரியாக புரிந்து கொள்ளப்பட்டு, பகிர்ந்து கொள்ளப்படும் போது அது வாழ்க்கையில் மாற்றங்களை உண்டாக்கும். அப்படிப்பட்ட மாற்றத்தை அச்சுறுத்தலோ, பயமோ ஒருபோதும் ஏற்படுத்த முடியாது. வெற்றிகரமான மனித உறவுகள் ஒரே வாக்கியமாக இவ்விதமாக சுருக்கப்படும் " உங்களிடமிருந்து சிறந்ததை எதிர்பார்க்கிறவர்களுக்காக நீங்கள் சிறப்பாகவே செயல்களை செய்வீர்கள். உங்களிடமிருந்து மோசமானவைகளை எதிர்பார்க்கிறவர்களுக்காக நீங்கள் சிறப்பாக செயல்களை செய்ய மாட்டீர்கள்.

தேவனும் நம்மை இவ்விதமாகவே நடத்துகிறார்! நாம் பாவிகளாயிருந்தபோது, நம்பிக்கையில்லாதவர்களாக இருந்தபோது, அவர் நம்மைப்பார்த்து அதாவது நம் மீது நோக்கமாயிருந்து நம்மால் இன்னும் சிறப்பாகச் செய்ய முடியுமென்று எண்ணினார். நமக்குள் திறன் இருப்பதை அவர் கண்டார். அவருடைய பார்வையில் நாம் அருமையாக காணப்பட்டோம். அதனால்தான் அவர் நமக்காகச் செயல்பட்டார். அதனால் தான் அவர் தம்முடைய ஒரேபேறான குமாரனையே நமக்காக அனுப்பினார்.

தேவனுடைய பிள்ளையாக, அவருடைய குமாரனுடைய இரத்தத்தினாலே மீட்கப்பட்டவர்களாக **நீங்கள் மற்றவர்களிடமிருந்து சிறந்ததை வெளியே கொண்டு வருகிறீர்களா? அல்லது மோசமானதை வெளியே கொண்டு வருகிறீர்களா?** அன்பும், தயவும் மக்களை மாற்றும் சக்தியைப் பெற்றிருக்கின்றன. இவைகளை செயல்படுத்துவதும் எளிது! உலகத்தை மாற்ற நீங்கள் உதவுவீர்களா?

✞

# அமர்ந்திருங்கள்

## Be Still

Jessie Granville

ஒரு நாள், நெடுஞ்சாலையில் என் நண்பரோடு வாகனத்தை ஓட்டிச் சென்று கொண்டிருந்தேன். வேகம் காட்டும் கருவியை நான் பார்த்த போது வேக வரம்பை மீறி வேகமாக நாங்கள் சென்று கொண்டிருந்ததை கவனித்தேன். வாகனம் மிக வேகமாக சென்று கொண்டிருப்பது போல் நான் உணரவில்லை. 55 ல் போய்க் கொண்டிருப்பது போல் தான் எனக்குத் தோன்றியது. என் நண்பர் வாகனம் எவ்வளவு வேகமாக போய்க்கொண்டிருக்கிறது என்பதை வேகம் காட்டும் கருவியில் கண்டு சிரித்தார். “ நீங்கள் மிக வேகமாக செல்கிறீர்கள் ” என்றார் ஒரு பெரிய சிரிப்புடன்.

இவ்வுலகமானது சூறாவளி போன்ற செயல்பாடுகளால் சிக்கித் தவிக்கிறது. நாம் மிக அவசரமான உலகில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நாம் மிகவும் களைப்புடன் படுக்கையில் போய் விழுகிறோம், ஒரு புதிய நாளைக் காணவும் அதிக வேலைகளைச் செய்யவும் சீக்கிரமாக எழுகிறோம். நாம் தொலைபேசி அழைப்புகளை குவித்துக்கொள்வதில் திருப்தி அடைவதில்லை. இப்போதெல் லாம் நாம் எங்கெல்லாம் போகிறோமோ அங்கெல்லாம் கைப்பேசியையும் எடுத்துச் செல்கிறோம். நம் தடங்கலை அதிகப்படுத்தவே அவைகளை நாம் எடுத்துச் செல்கிறோம்.

இந்த அவசர உலகில் நம் பிள்ளைகளும் சிக்கிக்கொள்கிறார்கள். அவர் களுக்கு பள்ளியில் இசைப்பயிற்சியும், விளையாட்டுப் பயிற்சியும், விளையாட்டு வீரர்களை எப்படி உற்சாகப்படுத்த வேண்டும் என்கிற பயிற்சியும், நாடகம், பாடல் எனப்பயிற்சிகள் தொடர்ந்து இருக்கின்றன. அவர்கள் தங்கள் பங்களிப்பை ஆற்றும்படி ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு அவசரமாகப் போகச் சொல்கிறோம்.

நாம் அதிவேகமாக ஆகிவிட்டோம். நம் வாழ்க்கை எத்தனை வேகமாக மாறிவிட்டது என்பதை நாம் அறியாமல் இருக்கிறோம். நாம் அதிகமான வேலை களைச் செய்ய குறைவான நேரமே நம்மிடத்தில் உண்டு என்பதை அறிந்திருக்

கிறோம். நமக்கு உடற்பயிற்சி செய்வதற்கு நேரமில்லை. சரியான ஆகாரத்தை சாப்பிட நேரமில்லை. அதிவேக உணவகங்கள் எவ்வளவாய் எண்ணிக்கையில் பெருகியிருக்கிறது என்பதை எப்படி விளக்குவீர்கள்? நம் நண்பர்களுடன் பேசுவதற்கு நமக்கு நேரமில்லை. நம் குடும்பங்களோடு செலவிட நமக்கு நேரமில்லை. அதைவிட பரிதாபம் என்னவென்றால் ஜெபிக்க நமக்கு நேரமில்லை. தேவனோடு ஐக்கியப்பட்ட நமக்கு நேரமில்லை.நமக்கு நேரமே இல்லை.

நாம் மிகவும் சோர்வடைகிறோம். நாம் வீட்டிற்கு வந்தவுடனேயே தொலைக் காட்சிக்கு முன்பாகப் போய் அமருகிறோம். நம்மால் உணவு தயார் செய்யவே முடிவதில்லை. நாம் உணர்வற்ற நிலையிலும் நம் வேலையை செய்ய வேண்டும், செய்யவேண்டும் என்று நினைத்துக்கொண்டே முட்டாள்த்தனமாக தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் மூழ்கிப்போகிறோம். அதன் பிறகு, நாம் சோர்வடைந்துவிடுகிறோம், நம்மால் நகரவே முடிவதில்லை. நம் வேதாகமத்தை நாம் வாசிக்க வேண்டும், படிக்க வேண்டும் என்று நமக்குத் தெரியும். ஆனால், நம் மனம் களைப்பால் உணர்வற்றுப்போகிறது.

சில உறுதியான ஆத்துமாக்கள் ஜெபிக்க அமைதியான நேரம் கிடைக்க வேண்டும் என்பதற்காக அதிகாலையில் எழுந்திருக்கப் பழகிவிட்டார்கள். மற்றவர்களோ தாமதமாக படுக்கைக்குச் செல்கிறார்கள். எப்படிப் பார்த்தாலும் எனக்கு பயமாக இருக்கிறது. நம்மில் பலர் ஆவிக்குரிய பிரகாரமாக எதையுமே செய்வதில்லை. எனவே, சபையானது எதை விசுவாசிக்க வேண்டும் என்பதை தெரிந்துகொள்ள முழுமையாகப் பிரசங்கியாரையும், சகோதரர்கள் எழுதும் கட்டுரைகளையும் சார்ந்திருக்கும் அளவிற்கு மறுபடியும் வழிவிலகிச் சென்றிருக்கிறது. நாம் தொடர்ந்து பழைய பாரம்பரியங்களை பிடித்துக்கொண்டிருக்கிறோம். ஏனென்றால், அந்த சகோதரர் நாம் அப்படிச் செய்ய வேண்டும் என்று சொல்கிறார். அடுத்ததாக, மற்றுமொரு சகோதரர் நாம் மாற வேண்டும் என்று சொல்கிறபடியால் நாம் புதிய பாரம்பரியங்களை பற்றிக் கொள்கிறோம். நாம் மறுபடியும், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப்போல அடிபட்டு அலைகிற காலத்தில் இருக்கிறோம் (எபே 4 : 14).

சமநிலையை நாம் எப்படித் திரும்பப் பெறுவது? இவ்வுலகம் நம்மை நாள் முழுவதும் பின்னே இழுக்கிறது. நம் சகோதரர்கள் இடதுபுறமும், வலதுபுறமும் நம்மை நாள் முழுவதும் இழுக்கிறார்கள். மறுபடியும் நாம் அமர்ந்திருக்க கற்றுக்கொள்வதற்கான நேரம் இது. “ நீங்கள் அமர்ந்திருந்து, நானே தேவனென்று அறிந்து கொள்ளுங்கள் ” (சங் 46 : 10).

“ மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? ( மத் 16 : 26 ). நாம் அவசர அவசரமாக காரியங்களைச் செய்து எதை சாதித்தோம்?

இவ்வுலக வாழ்க்கை மாத்திரம் நம் நம்பிக்கையாக இருந்தால் நம் பரபரப்பான செயல்பாடுகளுக்கு ஓரளவு அர்த்தம் இருக்கும். நாம் இப்பூமியில் செய்ய வேண்டிய எல்லாவற்றையும் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள குறைந்த வருடங்களிலேயே செய்யவேண்டியிருந்தால், நிச்சயமாக, நாம் செய்து முடிப்போம்!

ஆனால், ஒரு கிறிஸ்தவனைப் பொறுத்தவரை அவன் மன அழுத்தத்திற்குட்படுத்தப்பட்டு அவசர அவசரமாக காரியங்களைச் செய்ய வேண்டியதில்லை. நாம் ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறோம். நமக்கு தேவனோடும், இரட்சகராகிய இயேசுவோடும் நித்தியத்தை செலவழிக்க முழுமையாக ஆயுள் வருடங்கள் இருக்கிறது. நாம் ஒவ்வொரு நாளும் எவைகளைச் செய்கிறோமோ அவைகள் அந்த ஆயத்தத்திற்கு உதவி செய்கின்றன அல்லது அதற்குத் தடையாக இருக்கின்றன.

தேவனுடைய வார்த்தையை நேரம் எடுத்துப் படிப்பதை விட வேறு எது முக்கியமாக இருக்கிறது? தேவனோடும், உங்கள் குடும்பத்தோடும் ஐக்கியப்படுவதைவிட வேறு எது முக்கியமாக இருக்கிறது?

வெளியிலிருந்து நம்மை இழுக்கும் சக்திகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து, தேவனுடைய வார்த்தையிலிருந்து தேவனுடைய வார்த்தையை கவனிக்க நேரத்தை எடுத்துக்கொள்வோம். உங்கள் காப்பி மேஜையில் இருக்கும் தூசியை துடைக்க உதவும் வேதாகமம் நரகத்தில் உங்களுக்கு எந்த நன்மையும் செய்யாது.

இவ்வுலகமானது தேவனுடைய வார்த்தையை சுருக்கி, பத்திரிக்கை, கட்டுரை வடிவிலோ அல்லது பிரசங்க வடிவிலோ தரவேண்டும் என்று எதிர்பார்க்காதீர்கள். தேவனுடைய வார்த்தையை சுருக்க முடியாது. அது வளமானது, கருத்துச் செறிந்த முழுமையுமானது. அது துரித உணவு பதார்த்தமுமல்ல, அது முழுமையான ஆகாரமாகும். அதன் மதிப்பு உணரப்பட அதை மெதுவாக ரசித்து ருசிக்க வேண்டும்.

நாம் வாழ்கின்ற உலகம் அவசரமான உலகம் என்பதில் எந்த சந்தேகமுமில்லை. உண்மையாகவே, இதற்கு இணையாக நாம் போட்டி போட வேண்டியதாயிருக்கிறது. ஆனால், தேவனுக்கென்று நேரத்தை எடுத்துக் கொள்ளுங்கள். இந்தப் பைத்தியக்கார உலகில் தேவன் ஒருவரே ஞானமுள்ளவர், அவர் ஒருவரே அமளியில் அமைதி தருபவர். ஆகவே, அமர்ந்திருங்கள் !

# பேதுருவின் குறைபாடுகள்
# Peter's Imperfections

O.P.Bavid

அப்போஸ்தலனாகிய பேதுரு நம்மைப்போல் அதிக மனிதத்தன்மையை உடையவராகக் காணப்பட்டார். அவரிடம் பலமும், பலவீனமும் காணப்பட்டது. ஆனால், இயேசுவை கிறிஸ்துவாகவும், தேவனுடைய குமாரனாகவும் ஏற்றுக் கொள்ளுகிற காரியத்தில் அதிக விசுவாசமுடையவராகவே காணப்பட்டார். அதனால் தான் பேதுருவின் தவறுகளை, தவறான புரிந்துகொள்ளுதலை இயேசுவால் திருத்த முடிந்தது. பேதுருவை பலப்படுத்தவும் முடிந்தது. நாமும் அவரிடம் விசுவாசமாயிருந்து அவருடைய வார்த்தையிலிருந்து அறிவுரைகளை எடுத்துக் கொண்டால் கிறிஸ்து நமக்கும் பேதுருவுக்கு செய்த விதமாகவே செய்வார். பேதுருவின் குறைகளிலிருந்து சில பாடங்களை நாம் கற்றுக் கொள்ள முடியும்.

**பேதுரு இயசேுவை கடிந்துகொள்ளுதல்**

ஒரு சந்தர்ப்பத்தில் பேதுரு உண்மையாகவே இயேசுவைக் கடிந்து கொண்டார். இந்தச்சம்பவம் (மத் 16 : 21 - 23) வசனத்தில் இடம்பெற்றிருக்கிறது இயேசு நாம் எருசலேமுக்குப் போய் பாடுகள்பட்டு, கொலையுண்டு, மூன்றாம் நாளில் எழுந்திருக்க வேண்டும் என்பதைத் தம்முடைய சீஷர்களுக்குச் சொல்லத் தொடங்கினார், " **அப்பொழுது பேதுரு அவரைத் தனியே அழைத்துக் கொண்டுபோய்: ஆண்டவரே, இது உமக்கு நேரிடக்கூடாதே. இது உமக்குச் சம்ப விப்பதில்லை என்று அவரை கடிந்து கொள்ளத் தொடங்கினான், அவரோ திரும்பிப் பேதுருவைப் பார்த்து: எனக்குப் பின்னாகப்போ, சாத்தானே நீ எனக்கு இடறலாயிருக்கிறாய்; தேவனுக்கு ஏற்றவைகளைச் சிந்தியாமல் மனுஷருக்கு ஏற்றவைகளைச் சிந்திக்கிறாய்** " என்றார் .

இயேசு வனாந்தரத்தில் சோதிக்கப்பட்டபோது சாத்தான் இயேசுவிடம் " நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து என்னைப் பணிந்துகொண்டால் உலகத்தின் சகல ராஜ்யங்களையும் அவைகளின் மகிமையையும் உமக்குத்தருவேன் " என்று சொன்னான். இயேசு தம்முடைய நோக்கத்திலிருந்து பிசாசு தம்மை திருப்பப் பார்ப்பதாகவும் அப்படி திசைத்திருப்ப பிசாசு பேதுருவைப் பயன்படுத்துவதையும்

உணர்ந்து கொண்டார். அந்நேரத்தில் பேதுருவும் மற்ற அப்போஸ்தலர்களும் இயேசு பூமிக்குரிய ராஜாவாக எருசலேமை ஆளுவார் என்று நினைத்தார்கள். இயேசுவுக்கு எது ஏற்றது என்பது இயேசுவை விட தனக்கு நன்றாகத் தெரியும் என்று நினைத்தார். ஆனால், சில நாட்களுக்கு முன்பாக தான் வெளிப்படுத்தின விசுவாசத்திற்கு அது எதிராயிருந்தது.

தேவன் தம்முடைய வார்த்தைகளில் வெளிப்படுத்தியிருக்கிற போதனை களையும், விதிமுறைகளையும் அறிந்து கொள்வதை நாடாமல் தங்கள் எண்ணங்களையும், திட்டங்களையும் நினைப்பது ஜனங்களுக்கு எளிதான காரியமாயிருக்கிறது. நாம் உலகத்தாரைப் போல் சிந்திக்காமல், கிறிஸ்துவின் சிந்தையை உடையவர்களாக இருக்க வேண்டும். " மாம்ச சிந்தை மரணம்; ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம் " (ரோ 8 : 6).

**மறுரூப மலையில் பேதுரு**

இயேசு பேதுரு, யாக்கோபு மற்றும் யோவான் ஆகிய மூவரையும் கூட்டிக் கொண்டு உயர்ந்த மலைக்குப்போனார். அங்கே அவர் ஜெபித்துக்கொண்டிருக் கும்போது மறுரூபமானார். அவர் முகம் சூரியனைப்போல் பிரகாசித்தது, அவர் வஸ்திரம் வெளிசத்தைப்போல வெண்மையாயிருந்தது. அப்பொழுது மோசேயும், எலியாவும் அவரோடே பேசுகிறவர்களாக அவர்களுக்குக் காணப் பட்டார்கள் (மத் 17 : 1 – 3). அவர்கள் சீக்கிரமாக சம்பவிக்கப்போகிற இயேசுவின் மரணத்தைக் குறித்துப் பேசிக்கொண்டிருந்தார்கள். அங்கே அவருடைய சத்துருக்கள் அவருக்கு எதிராக நிறைவேற்றப்போகிற மரணம் என்றில்லாமல், அவர் எருசலேமிலே நிறைவேற்றப்போகிற அவருடைய மரணத்தைக்குறித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள் (லூக்கா 9 : 31). இயேசுவின் மரணம் அவ்விதமாக பேசப்பட்டதன் காரணம், இயேசு ஜனங்களைத் தங்கள் பாவங்களிலிருந்து இரட்சிக்கும்படி வந்தார், அதை நிறைவேற்றுவற்கு இயேசுவின் மரணம் அவசியமாக இருந்தது. அந்தச் சூழ்நிலையை இயேசு தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தார், ஏற்றநேரம் வரும்வரை அவருடைய சத்துருக்களால் அவரைக் கொல்ல முடியவில்லை. மற்றுமொரு சந்தர்ப்பத்தில் இயேசு இவ்விதமாகச் சொன்னார். " நான் என் ஜீவனை மறுபடியும் அடைந்து கொள்ளும்படிக்கு அதைக்கொடுக்கிறபடியினால் பிதா என்னில் அன்பாயிருக் கிறார், ஒருவனும் அதை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளமாட்டான்; நானே அதைக்கொள்கிறேன், அதைக்கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு, அதை மறுபடியும் எடுத்துக்கொள்ளவும் எனக்கு அதிகாரம் உண்டு. இந்தக்கட்டளையை என் பிதாவினிடத்தில் பெற்றுக்கொண்டேன் என்றார் " (யோ 10 : 17, 18). ஓ! அவர் நம்மை எவ்வளவாய் நேசிக்கிறார்.

சீஷர்கள் மறுரூபமாகி மோசேயோடும், எலியாவோடும் பேசிக்கொண்டிருந்ததைக் கண்டார்கள். " அப்பொழுது பேதுரு இயேசுவை நோக்கி: ஆண்டவரே, நாம் இங்கே இருக்கிறது நல்லது; உமக்குச் சித்தமானால், இங்கே உமக்கு ஒரு கூடாரமும், மோசேக்கு ஒரு கூடாரமும், எலியாவுக்கு ஒரு கூடாரமுமாக, மூன்று கூடாரங்களைப் போடுவோம் என்றான். அவன் பேசுகையில் இதோ, ஒளியுள்ள ஒரு மேகம் அவர்கள்மேல் நிழலிட்டது. இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச் செவிக் கொடுங்கள் என்று அந்த மேகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று ( மத்தேயு 17 : 4, 5 ). அவர்கள் தங்கள் கண்களை ஏறெடுத்துப்பார்க்கையில் இயேசுவைத்தவிர வேறொருவரையும் காணவில்லை (வசனம் 8).

மறுரூபமலையில் மூன்று சீடர்களின் அனுபவம் மோசேயும், எலியாவும் மற்ற தீர்க்கதரிசிகளும் தேவனுடைய செய்தித்தொடர்பாளர்களாக இருந்தார்கள். அவர்கள் வரவிருந்த இயேசுவை சுட்டிக்காட்டி அவருக்கு வழியை ஆயத்தமாக்கிக் கொண்டிருந்தார்கள். இப்போது மனுஷர் தங்களுக்கான தேவ சித்தத்தை இயேசு மூலமாக கற்றுக்கொள்ள வேண்டும், அவருக்கு முன்பாகச் சென்றவர்களிடமிருந்து அல்ல. இயேசுவின் வார்த்தை பழைய ஏற்பாட்டில் அல்ல புதிய ஏற்பாட்டில் தான் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த உண்மையானது எபிரேயர் புத்தகத்திலும் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. " பூர்வ காலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுமைபற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுமைபற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்திரவாளியாக நியமித்தார், இவரைக் கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார் " (எபி 1:1, 2). பேதுருவுக்கு இது மோசேயையும் எலியாவையும் கனப்படுத்த உத்தேசித்தபோது புரியவில்லை.

இருந்தபோதிலும் பேதுரு தன் தவறான எண்ணத்தை இயேசுவிடம் வெளிப்படுத்தின நிலையிலும் இயேசுவுக்கு தன்னை ஒப்புக்கொடுத்திருந்தார் என்பதை நாம் கவனிக்க வேண்டும். " ஆண்டவரே, **உமக்குச் சித்தமானால்** இங்கே மூன்று கூடாரங்களைப் போடுவோம் " என்றார். பேதுருவின் விசுவாசம் அவரை கிறிஸ்துவின் சித்தத்திற்கு கீழ்ப்படிய வைத்தது.

---

குடும்பம்

1. பெற்றோரையும், பிள்ளைகளையும் கொண்டது.
2. குடும்பப் பெயரைத் தரித்திருப்பது.
3. அங்கே, அன்போடு பெற்றோர்கள் பிள்ளைகளக்குப் போதித்துக் கவனிக்கிறார்கள்.
4. அங்கே, பிள்ளைகள் பெற்றோருக்குக் கீழ்ப்படிகிறார்கள்.
5. அங்கே, பிள்ளைகளின் நடக்கைகளின்படி அவர்களைப் பாராட்டவும், தண்டிக்கவும் பெற்றோர்கள் அதிகாரம் பெற்றிருக்கிறார்கள்.

# லோத்தின் வீழ்ச்சி
# Lot's Fall

Tom Kelton



**வே**த வாக்கியங்கள் லோத்தின் கீழ்நோக்கிய நிலையை சுட்டிக் காட்டு கின்றன. " லோத்து தன் கண்களை ஏறெடுத்துப்பார்த்து " ( ஆதியாகமம் 13 : 10 ); யோர்தான் நதிக்கு அரு கான சமபூமி முழுவதும் நீர்வளம் பொருந்தினதாயிருக்கக்கண்டான் ". இந்த லோத்து யோர்தானுக்கு அருகான சமபூமி முழுவதையும் தெரிந்துகொண்டு ஆபிரகாமின் ஆவிக்குரிய ஐக்கியத்திலிருந்து விலகினான்; லோத்து அந்த யோர்தானுக்கு அருகான சமபூமியிலுள்ள பட்டணங்களில்

வாசம்பண்ணி, சோதோமுக்கு நேரே கூடாரம் போட்டான் ( வ 12). கடைசியாக, அவன் சோதோமின் வாசலிலே உட்கார்ந்தான் ( மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிலை) (ஆதியாகமம் 19 : 1).

லோத்து அந்த சோதோம் பட்டணத்தின் அரசாங்க அதிகாரிகளில் ஒருவனானான். அவனுடைய குமாரத்திகள் சோதோமியரை விவாகம் பண்ணினார்கள். லோத்து முதலில் அந்த சோதோம் பட்டணத்தைத் தன் கண்களால் ஏறெடுத்துப் பார்த்தான், ஆனால், கடைசியில் அந்த துன்மார்க்கமான பட்டணத்தில் ஓர் அதிகாரியாக மாறினான். வேத வசனங்கள் லோத்துவை நீதிமான் என்று குறிப்பிடுகின்றன (II பேதுரு 5, 2 : 7, 8 ); ஆனாலும், உலகக்காரியங்கள் மீது அவனுக்கிருந்த பசி அவனைக் கீழ் நோக்கி இழுத்துப் போட்டது.

சங்கீதக்காரன் பாவம் ஒரு மனிதனை எந்தெந்த வழிகளிலெல்லாம் கீழே இழுத்துப்போடுமென்று அதன் வழிகளில் அவர் நன்றாக பரிச்சயப்பட்டிருந்தார். எனவே தான், அவர் " துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும் " என்று எழுதுகிறார் ( சங்கீதம் 1 : 1). இங்கே காணப்படும் மூன்று படிகளை கவனியுங்கள்: நடப்பது, நிற்பது, உட்காருவது. முதலாவது, துன்மார்க்கருடைய ஆலோசனை, பாவிகளுடைய வழி, கடைசியாக பரியாசக்காரரின் இடம். இது பாவத்தின் கீழ்நோக்கிய பயணமாகும் இப்பாதையில் செல்லாதவன் பாக்கியவான் என்று சங்கீதக்காரன் சொல்கிறார். பாவத்தின் கீழ்நோக்கிய பாதையைத் தவிர்க்கும் கிறிஸ்தவன் கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருந்து பாக்கியவானாகிறான். அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப் போலிருப்பான்; அவன் செய்வதெல்லாம் வாய்க்கும் " ( சங்கீதம் 1 : 2, 3 ). சங்கீதம் 1 : 1 லோத்தின் வீழ்ச்சிக்கு வழி வகுத்த பாவ வழியைக் காட்டுகிறது, ஆனால், 2, 3 வசனங்கள் கிறிஸ்தவர்களாகிய நாம் நடக்க வேண்டிய வழியைக் காட்டுகிறது. நீங்கள் எந்த வழியில் நடக்கிறார்கள்? ✝

**ஆத்துமா வாழ்கிறது போல...**

பிரியமானவனே, உன் ஆத்துமா வாழ்கிறது போல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன். (3 யோவான் 2).

# முக்கிய வசனம் பற்றிய விரைவான வியாக்கியானம்

# Quick Commentary On Crucial Verse

சங்கீதம் 133

Justin Hopkins

1. இதோ, சகோதரர் ஒருமித்து வாசம் பண்ணுகிறது எத்தனை நன்மையும், எத்தனை இன்பமுமானது? 2. அது ஆரோனுடைய சிரசின்மேல் ஊற்றப்பட்டு அவனுடைய தாடியிலே வடிகிறதும், அவனுடைய அங்கிகளின்மேல் இறங்குகிறதுமான நல்ல ஸ்தலத்துக்கும், 3. எர்மோன் மேலும், சீயோன் பர்வதங்கள் மேலும் இறங்கும் பனிக்கும் ஒப்பாயிருக்கிறது; அங்கே கர்த்தர் என்றென்றைக்கும் ஆசீர்வாதத்தையும் ஜீவனையும் கட்டளையிடுகிறார்.

வசனம் 1 : வாழ்க்கையில் பல காரியங்கள் நன்மையானதாக இருக்கும். ஆனால், இன்பமானதாக இருக்காது, பல காரியங்கள் இன்பமானதாக இருக்கும். ஆனால், நன்மையானதாக இருக்காது. ஆயினும், தேவனுடைய மக்கள் மத்தியில் காணப்படும் ஒற்றுமை நாம் விரும்பத்தக்க இந்த இரண்டு தன்மைகளையும் கொண்டுள்ளது.

வசனம் 2 : இந்தத் தைலம் குறிப்பாக விலையேறப்பெற்றது. ஏனென்றால், இந்தத் தைலத்தால் அபிஷேகம் பண்ணப்பட்ட ஆரோன் தேவனுடைய ஆசாரியனாக பரிசுத்தமாக்கப்பட்டார். இது இஸ்ரவேலர்களுக்கு தேவனுடைய சிங்காசனத்தை அங்கீகரிக்கப்பட்ட பலிகள் மூலமாக கிட்டிச்சேர வழிவகுத்தது.

ஆரோனுடைய சிரசின்மேல் ஊற்றப்பட்ட தைலம், அவனுடைய தாடியிலே வடிந்து, அவனுடைய அங்கிகளின்மேல் முழுவதுமாக இறங்கியது. அதே விதமாக சபையில் சகோதர ஒற்றுமை சபை முழுவதையும் நிரம்பி மகிழ்விக்கிறது. இது தேவனால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. தேவனுடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிகிற காரியத்தில் ஒற்றுமையாயிருப்பது எப்போதுமே ஆசீர்வாதங்களைக் கொண்டு வருகிறது!

வடமுனையில் அமைந்துள்ள எர்மோன் பர்வதம் இஸ்ரவேல் தேசத்தின் உயரமான மலையாக இருந்தது. கானான் தேசத்தைச் செழிப்பாக்கிய மழையின் ஆதாரம் இந்த பர்வதமாகத்தான் இருந்தது. குளிர்ச்சியான காலை வேளையில் எர்மோன் பர்வதத்திலிருந்து அடர்த்தியான பனிஇறங்கி வந்து அவ்விடம் முழுவதையும் நனைக்கும் காட்சியை ஒருவரால் கற்பனை செய்து பார்க்க முடியும். அநேகமாக இது ஏதேன் தோட்டத்தைச் செழிப்பாக்கிய பனித்துளிகளை நமக்கு நினைவு படுத்துகிறது.

ஒற்றுமை புத்துணர்வூட்டும் எதற்கும் சளைத்ததல்ல. சண்டை மற்றும் பிரிவினை அனுபவங்களுக்குப் பிறகு சகோதரர்கள் மத்தியில் காணப்படும் ஒற்றுமை ஆத்துமாவை புத்துணர்வடையச் செய்யும் ஒன்றாக இருக்கிறது. ✞

# உங்கள் ஆன்மாவின் அளவீடு என்ன ?

## ஏசாயா 48 : 12, 13, 16 ; 49 : 1, 5, 6

★ " யாக்கோபே, நான் அழைத்திருக்கிற இஸ்ரவேலே, எனக்குச் செவிகொடு; நான் அவரே, நான் முந்தினவரும், நான் பிந்தினருமாமே ". ( 48:12)

★ " என் கரமே பூமியை அஸ்திபாரப்படுத்தி, என் வலதுகை வானங்களை அளவிட்டது; நான் அவைகளுக்குக் கட்டளையிட, அவைகள் அனைத்தும் நிற்கும் " (48:13)

★ " நீங்கள் என் சமீபத்தில் வந்து, நான் சொல்வதைக் கேளுங்கள்; நான் ஆதிமுதற் கொண்டு அந்தரங்கத்தில் பேசவில்லை; அது உண்டான காலந்துவக்கி அங்கே நான் இருந்தேன்; இப்பொழுதோ கர்த்தராகிய ஆண்டவரும், அவருடைய ஆவியும் என்னை அனுப்புகிறார் ". (48:16)

★ " தீவுகளே, எனக்குச் செவிகொடுங்கள்; தூரத்திலிருக்கிற ஜனங்களே, கவனியுங்கள்; தாயின் கர்ப்பத்திலிருந்து முதல் கர்த்தர் என்னை அழைத்து, நான் என் தாயின் வயிற்றில் இருக்கையில் என் நாமத்தைப் பிரஸ்தாபப்படுத்தினர் ". (49:1)

★ '' யாக்கோப்பைத் தம்மிடத்தில் திரும்பும்படி நான் தாயின் கர்ப்பத்திலிருந்தது முதல் கர்த்தர் தமக்குத் தாசனாக என்னை உருவாக்கினார் ; இஸ்ரவேலோ சேராதே போகிறது; ஆகிலும் கர்த்தருடைய பார்வையில் கனமடைவேன், என் தேவன் என் பெலனாயிருப்பார் ". (49 : 5)

★ '' யாக்கோபின் கோத்திரங்களை எழுப்பவும், இஸ்ரவேலில் காக்கப்பட்டவர்களைத் திருப்பவும். நீர் எனக்குத் தாசனாயிருப்பது அற்பகாரியமாயிருக்கிறது; நீர் பூமியில் கடைசிபரியந்தமும் என்னுடைய இரட்சிப்பாயிருக்கும்படி, உம்மை ஜாதிகளுக்கு ஒளியாகவும் வைப்பேன் என்கிறார் ". (49:6)

## திருமறை தியானம்



**தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| தமிழன் | TV | திங்கள் | காலை | 7:15 மணி |
| தமிழன் | TV | வியாழன் | இரவு | 9:30 மணி |
| தமிழன் | TV | சனி | காலை | 7:00 மணி |

## அஞ்சல் வழி வேதாகமகல்வி

வேதாகமஅஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம் ஆம், வேதாகமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

தொடர்புக்கு : இயக்குனர், அஞ்சல் வழி வேதாகமக் கல்வி
த.பெ. எண் 27, காங்கேயம் 638 701.
தமிழ்நாடு, இந்தியா.

பரிசுத்த வேதாகமத்தின் தெளிவான உபதேசத்தை வெளிப்படுத்தும் **பல்வேறு தலைப்புகளில்** வெளியிடப்பட்டுள்ள பல வண்ணங்களில் ஆன **கைப்பிரதிகள்** (Tracts) வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்

**E.Z.S. ராஜநாயகம்: 98427 30382**
**P.R. சுவாமி : 098440 70763**
**P.C. பிலேமோன் ராஜா: 9244204420**
**B. அர்ஜுனன் : 994435 58041**

## சத்திய வழி

❖ பேச்சாளர் : சகோ. P.R. சுவாமி (ஊழியர்)
❖ ரேடியோ : ஞாயிறு to வெள்ளி 5.30 p.m.
❖ நிகழ்ச்சி : வேதாகமக் கல்வி & அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

<u>தொடர்புக்கு</u> : சத்திய வழி, அஞ்சல் பெட்டி 8405, பெங்களூர் – 560084.
போன் : 080-25463507, செல் : 098440 70763

## கிறிஸ்துவின் வசனம்

❖ பேச்சாளர் : சகோ. B. அர்ஜுனன்
❖ தமிழன் : திங்கள் காலை 6:00 மணி & சனி மாலை 6:15 – 6:30 மணி
❖ மாத இதழ் : கிறிஸ்துவின் வசனம்
❖ ரேடியோ : SW 25 & 41 M (சனி மாலை 5.30 5.45)
Srilanka all Asia Service

<u>ஆவிக்குரிய புத்தகங்கள் கிடைக்குமிடம்</u> ;
கிறிஸ்துவின் சபை, தபால் பெட்டி 5, வத்லகுண்டு – 624 206.
திண்டுக்கல் மாவட்டம். போன் : 04543 263278 செல் : 94435 58041

## கிருபையுள்ள வார்த்தை

❖ பேச்சாளர் : சகோ. B. பிலேமோன் ராஜா
❖ தமிழன் : ஞாயிறு காலை 6:45 மணி & வெள்ளி காலை 6:00 மணி
❖ பைபிள் பாடங்கள் : அடிப்படை மற்றும் மேல்நிலை தபால் பாடங்கள்
❖ பார்வையற்றோருக்கு THE VOICE OF TRUTH ப்ரைல் இதழ் (தமிழ் / English )
❖ தமிழ் மாதப் பத்திரிக்கை : THE VOICE OF TRUTH INTERNATIONAL
❖ **English Quaterly Magazine** : கிறிஸ்தவர்களுக்கான சுவிசே ஷப் பணி
❖ **J.C. School of Evangelism** : தபால் பெட்டி 15, அரசரடி, மதுரை – 625 016.
<u>தொடர்புக்கு</u> : செல் : 92 4421 4424, 92 4431 4431, 92 4420 4420

## ' சத்தியத்தின் குரல் ' சந்தா விண்ணப்பம்

❑ "சத்தியத்தின் குரல்" காலாண்டு இதழுக்கு நான் சந்தாதாரராக இருக்க விரும்புகிறேன். இத்துடன் ரூ. 100 ( **4** இதழ்கள் ) (அ) ரூ. 200 ( **8** இதழ்கள் ) க்கான காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன். என் விலாசம் கீழே உள்ளது.

❑ "சத்தியத்தின் குரல்" காலாண்டு இதழுக்கு என்னுடைய .................................................. முன்னிட்டு ஒருதரம் வெகுமதி (A Gift) கொடுக்க விரும்புகிறேன். அதற்கான ரூ. ...................... காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன் என் விலாசம் கீழே உள்ளது.

❑ "சத்தியத்தின் குரல்" நூலை காலாண்டு தோறும் 25 பிரதிகள் பெறுவதற்காக ரூ. 500 அனுப்ப விரும்புகிறேன். அல்லது ஒவ்வொரு வருடமும் ரூ. 1500 அனுப்பி நான்கு காலாண்டுகளுக்கு 25 பிரதிகள் பெற்றுக்கொள்ள விரும்புகிறேன். (சபையார் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திப் பயன்பெறுங்கள்)

**(இந்தப் படிவத்தை உங்கள் காசோலையுடன் இணைத்து அனுப்புங்கள்)**

கடிதங்களும், காசோலைகளும், வரைவோலைகளும் அனுப்ப வேண்டிய முகவரி

**E.Z.S. ராஜநாயகம்**

"சத்தியத்தின் குரல்" காலாண்டு இதழ்

**288, தாராபுரம் ரோடு, காங்கேயம் – 638 701.**

**Ph : 04257 230030, Cell : 98427 30382, 99655 30385**

**E-mail : rajarichal@yahoo.co.in**

பெயர் : ____________________________________________

தெரு / ரோடு : ______________________________________

நகரம் : ______________________________ பின் கோடு : ______________

மாநிலம் : ___________________________________________